REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2020 ஒக்டோபர் 6 செவ்வாய்க்கிழமை

# தினகரன்
THINAKARAN

வரு. 88 இல. 237 | October 06, Tuesday, 2020 | 20 பக்கங்கள் | 30/-




## கொரோனா தொற்றாளர் தொகை 73 ஆக உயர்வு




படங்கள்: சமந்த வீரசிறி

# நாட்டில் அவசர நிலைமை அரசு நேற்று பிரகடனம்

## சந்தேகத்திற்கிடமானோருக்கு தொடர்ந்தும் PCR பரிசோதனை



**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொரோனா தொற்றாளர்களின் தொகை நேற்று மாலையாகும் போது 73 ஆக உயர்ந்ததாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.தனியார் தொழிற்சாலையில் பணியாற்றிய பெண்ணுக்கும் அவரது மகளுக்கும் கொரோனா தொற்றியது கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் நேற்று மேலும் 71 பேருக்கு கொரோனா தொற்றியுள்ளதாக அடையாளங் காணப்பட்டுள்ளது. இதே வேளை கொரோனா தொற்று ஏனைய பகுதிகளுக்கும் பரவுவதை தடுக்கும் நோக்குடன் நாட்டில் அவசர நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

சமூகத்தில் கொரோனா வைரஸ் பரவல் பரவுவதை கட்டுப்படுத்துவதற்காக முறையான சுகாதார வழிமுறைகளைக் கடைப்பிடிக்குமாறும் சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

சமூகத்தில் இருந்து கொரோனா தொற்றுக்கு உள்ளான பலர் அடையாளங் காணப்பட்ட நிலையில் இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான பெண்மணி தொழில் புரிந்த ஆடைத்தொழிற்சலையில் மேலும் 69 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று இனம் காணப்பட்டதோடு நேற்று மாலை மேலும் இருவருக்கு கொரோன தொற்றியது கண்டுபிடிக்கப்பட்டதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

திவுலப்பிட்டியில் நேற்று முன் தினம் புதிதாக சமூகத்திலிருந்து இனங்காணப்பட்ட பெண்மணியின் நெருங்கிய தொடர்புடையவர்களுக்கு

06

கொரோனா தொடர்பான

## தகவலை மறைக்கும் நபர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை



கொரோனா தொற்று தொடர்பான தகவல்களை சுகாதார தரப்பிற்கும் பொலிஸாருக்கும் வழங்காமல் மறைக்கும் நபர்கள் கைது செய்யப்பட்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதிப் பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

சில நிறுவன பிரதானிகள் இவ்வாறு தகவல்கள் வழங்க தயங்கியதாக தகவல் கிடைத்துள்ளது. இது தொடர்பில் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் மேலும் குறிப்பிட்ட அவர்,

தனிமைப்படுத்தல் சட்டம் மற்றும் குற்றவியல் சட்டத்தின் கீழ் இவ்வாறான நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும். சுகாதார பரிசோதகர்கள் வீடுகள் மற்றும் தொழிற்சாலை

06

ரிஷாட் பதியுதீன் தொடர்பில்

## எச்சந்தர்ப்பத்திலும் நான் புகழ் பாடவில்லை

பாதுகாப்புச் செயலாளர்



**ஸாதிக் ஷிஹான்**

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதின் தொடர்பில் தான் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் புகழ் பாடவில்லை. அவ்வாறு புகழ் பாடும் தேவை தனக்கு இல்லை என்று பாதுகாப்புச் செயலாளர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் கமல் குணரட்ன தெரிவித்தார்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற அரசநிகழ்வொன்றில் தான் ஆற்றிய உரை திரிபுபடுத்தப்பட்டு சில ஊடகங்கள் செய்தியை வெளியிட்டுள்ளதாகவும் அது சமூக ஊடகங்களில் தவறான முறையில் பரப்பப்பட்டு வருவதாகவும் பாதுகாப்புச் செயலாளர் மேலும் தெரிவித்தார்.

தனது உரையில் தற்போதைய வடமாகாண ஆளுநர்

06

## எதிர்வரும் 72 மணிநேரம் மிகவும் முக்கியமானது

பரிசோதனை அறிக்கை கிடைக்கவுள்ளது - இராணுவத் தளபதி



கொரோனா வைரஸ் தொற்று பரவல் தொடர்பாக அடுத்த 72 மணிநேரம் மிகவும் முக்கியமானதாக இருக்கும் என இராணுவ தளபதி சவேந்திர சில்வா தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த அவர், திவுலப்பிட்டியிலுள்ள ஆடை தொழிற்சாலையில் சுமார் 1500 தொழிலாளர்கள் பற்றிய கொரோனா பரிசோதனை அறிக்கைகள் இந்த காலப்பகுதிக்குள் கிடைக்க இருப்பதால் இந்த காலம் மிகவும் முக்கியமானது.

கொரோனா தொற்றுக்குள்ளான பெண்ணின் தொழிற்சாலை ஊழியர்கள் அதிகமாக இருக்கும் காரணத்தினாலேயே 3 பொலிஸ் பிரிவிற்கு மாத்திரமே ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. இருப்பினும் இப்பகுதிகளுக்கு

06

## மாணவர்கள் 1500 பேர் தனிமைப்படுத்தலுக்கு

அனைவருக்கும் PCR பரிசோதனை

திவுலப்பிட்டியில் 1500 பாடசாலை மாணவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக பொதுச் சுகாதார பரிசோதகர் சங்கம் தெரிவித்துள்ளது.

கொரோனா நோயாளியின் மகளான 16 வயதுடைய மாணவிக்கும் கொரோன தொற்றியது கண்டுபிடிக்கப்பட்டது.இந்த நிலையில் அவர் , கல்வி கற்க சென்ற பாடசாலையை சேர்ந்த மாணவர்கள் இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அவர் கற்கும் 11 ஆம் வகுப்பு மாணவர்களை கற்பித்த ஆசிரியர்கள் பீ.சீ.ஆர் பரிசோதனைக்குட்படுத்தப்பட இருப்பதோடு அதிபர் இது தொடர்பான பட்டியலை நேற்று வழங்கியதாக அறிய வருகிறது.

கம்பஹா, திவுலப்பிட்டிய பகுதியில் பெண்ணொருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், குறித்த பெண்ணுடன்

06

## 20 ஆவது திருத்தம் மீதான விசாரணை நேற்று நிறைவு

ஜனாதிபதி, சபாநாயகருக்கு தீர்ப்பு அறிவிக்கப்படும்



20 ஆவது அரசியலமைப்பு திருத்த சட்டமூலத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட 39 மனுக்கள் மீது நான்காவது நாள் பரிசீலனை நேற்று நிறைவுக்கு வந்துள்ளது.

இந்நிலையில் உயர் நீதிமன்றத்தின் சட்ட வியாக்கியானம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ மற்றும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிற்கு அனுப்பப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

20 ஆவது அரசியலமைப்பு திருத்த சட்டவரைவுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் உள்ளிட்ட தரப்பினர் உயர் நீதிமன்றத்தில் சிறப்பு மனுவைத் தாக்கல் செய்திருந்தனர்.

குறித்த மனுக்கள், பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, புவனேக அலுவிகார, பிரியந்த ஜயவர்தன, விஜித் மலல்கொட மற்றும் சிசிர த ஆப்ரோ ஆகிய ஐவரடங்கிய

06

## புலமைப்பரிசில், உயர்தரப் பரீட்சை ஒத்திவைப்பதா? இல்லையா?

விரைவில் இறுதி முடிவு அறிவிக்கப்படும்



தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் 2020 உயர்தரப் பரீட்சையை ஒத்திவைப்பதா இல்லையா என்பது தொடர்பான முடிவை ஓரிருதினங்களில் அறிவிக்கவுள்ளதாக கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.எந்த முடிவும் மாணவர்களின் சுகாதார பாதுகாப்பு குறித்து சிந்தித்தே எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். கம்பஹா மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்று மீண்டும் பரவியமை காரணமாக ஒக்டோபர் 11 ஆம் திகதி நடத்த திட்டமிடப்பட்ட தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் உயர்தரப் பரீட்சைகள் ஒத்திவைக்கப்பட இருப்பதாக பரவலாக பேசப்படுகிறது.

06

சகல சிறைச்சாலைகளிலும்

## கைதிகளை பார்வையிட நேற்று முதல் தடை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாடளாவிய ரீதியில் உள்ள சிறைச்சாலைகளில் சிறைக்கைதிகளைப் பார்வையிடுவதற்கு வருபவர்களுக்கான அனுமதி நிறுத்தப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் மஹர மற்றும் நீர்கொழும்பு சிறைச்சாலைகளில் அனுமதி நிறுத்தப்பட்டிருந்த நிலையில் நேற்று நாடு முழுவதும் அந்த ஒழுங்கு நடைமுறைப்படுத்தப்பட்டதாக சிறைச்சாலைகள் ஆணையாளர்நாயகம் துஷார இபுலதெனிய தெரிவித்துள்ளார். மினுவாங்கொடபிரதேசத்தில் கொரோனா வைரஸ் நோயாளியுடன் புதிதாக

06

## போலிப் பிரசாரங்களை நம்ப வேண்டாம்

நாடு பூராகவும் ஊரடங்குச் சட்டம் இன்று (06) அமுல்படுத்தப்பட்டுள்ளதாக சமூக ஊடகங்களில் பரவுகின்ற போலிப் பிரசாரங்களை நம்ப வேண்டாம் என்று அரசாங்கம் மக்களிடம் கேட்டுக்கொள்கிறது.

மக்களை தெளிவுபடுத்துவதற்காக ஜனாதிபதி

06

முன்னாள் ஜனாதிபதி மைத்திரி

## ஜனாதிபதி ஆணைக்குழுவில் 7 மணித்தியாலம் வாக்குமூலம்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் நேற்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

ஜனாதிபதி ஆணைக்குழுவின்முன்னாள் ஜனாதிபதி ஒருவர் வாக்குமூலம் வழங்குவதற்காக

06




## ரிசாத் பதியுதீனின் ஆதரவை பெற வேண்டிய தேவை அரசுக்கில்லை

குற்றச்சாட்டுகளுக்கு அமைச்சர் மஹிந்தானந்த மறுப்பு



20 ஆவது திருத்தத்திற்கு ரிசாத் பதியுதீனின் ஒத்துழைப்பைப்பெற எந்தத் தேவையும் அரசுக்கு கிடையாது.இது தொடர்பில் பொய்யான வதந்திகள் பரப்பப்படுவதாக அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே தெரிவித்தார்.

இந்த நோக்கிலே அவரின் சகோதரர் விடுதலை செய்யப்பட்டதாக சமூக ஊடகங்களில் செய்தி வெளியிடப்படுகிறது. ஆனால் சம்பந்தமில்லாத விடயங்களை முடிச்சுப் போட்டு அரசுமீது சேறு பூசப்படுகிறது. ரிசாத் பதியுதீனை அரச தரப்பிற்கு எடுக்க எந்த முயற்சியும் எடுக்கவில்லை. அவரை அரசுடன் இணைக்க எந்த தேவையும் கிடையாது என்றும் அவர் கூறினார்.

அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் என்ற வகையில் இது தொடர்பில் பொறுப்புடனே கூறுகின்றேன். 20 ஆவது திருத்தத்திற்கு ஆதரவு பெற ரிசாதுடன்

06

## ரூபவாஹினி செய்தி வாசிப்பாளர் கலீலுர் ரஹ்மான் காலமானார்

**சம்மாந்துறை கிழக்கு தினகரன் நிருபர்**



இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன மற்றும் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபன நேத்ரா அலைவரிசையின் செய்தி வாசிப்பாளரும் இலங்கை துறைமுக அதிகார சபையின் நிருவாக உத்தியோகத்தருமான சம்மாந்துறையைச் சேர்ந்த ஏ.சி.எம்.கலீலுர் ரஹ்மான் (வயது50) நேற்றுமுன்தினம்(04) கொழும்பில் காலமானார்.

சிறிது காலம் நோய்வாய்ப்பட்டிருந்த இவருக்கு திடீர் மாரடைப்பு ஏற்பட்டு காலமானார். மூன்று பிள்ளைகளின் தந்தையான இவரின் ஜனாஸா சொந்த ஊரான சம்மாந்துறைக்கு கொண்டுவரப்பட்டு நேற்று திங்கட்கிழமை அஸர்

06

# சர்வதேச செய்திகள்

## 'ஹெபடைடிஸ் சி' வைரஸை கண்டுபிடித்த மூவருக்கு நோபல்



ஹெபடைடிஸ் சி வைரஸை கண்டுபிடித்த மூன்று விஞ்ஞானிகள் இந்த ஆண்டின் மருத்துவத்திற்கான நோபல் பரிசை வென்றுள்ளனர்.

பிரிட்டன் நாட்டு விஞ்ஞானியான மைக்கல் ஹொக்டன் மற்றும் அமெரிக்க ஆராய்ச்சியாளர்களான ஹார்வி அல்டர் மற்றும் சார்ல்ஸ் ரைஸ் ஆகியோரே விருதை வென்றவர்களாவர்.

இவர்களின் கண்டுபிடிப்பு மில்லியன் கணக்கான மக்களின் உயிரை பாதுகாத்திருப்பதாக இந்த விருது பற்றி நேற்று அறிவிப்பை வெளியிட்ட நோபல் பரிசுக் குழு தெரிவித்துள்ளது.

இந்த வைரஸ் ஈரல் புற்றுநோய்க்கான பொதுவான காரணியாகவும் ஈரல் மாற்றுச் சிகிச்சைக்கு பிரதான காரணியாகவும் உள்ளது.

இரத்த தானம் பெறுபவர்கள் ஈரல் தொற்று ஏற்படுவது பற்றிய மர்மம் 1960களில் பெரும் கவலையை ஏற்படுத்தி இருந்தது. எனவே இரத்த மாற்று என்பது தற்கொலைக்கு நிகராக முன்னர் பார்க்கப்பட்டது என்று நோபல் பரிசுக் குழு தெரிவித்தது.

அதிக திறன் மிக்க இரத்த சோதனை மூலம் அந்தத் தொற்று உலகின் பல பகுதிகளில் இருந்து ஒழிக்கப்பட்டிருப்பதோடு செயல்திறன் மிக்க நோய் எதிர்ப்பு மருந்து மேம்படுத்தப்பட்டுள்ளது.

“வரலாற்றில் முதல்முறையாக அந்த நோயை குணப்படுத்த முடியுமாகி இருப்பதோடு ஹெபடைடிஸ் சி வைரஸை உலகில் இருந்து துடைத்தொழிப்பதற்கான எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது” என்று நோபல் குழு தெரிவித்துள்ளது.

எனினும் இந்த வைரஸினால் இன்றும் ஆண்டுக்கு 70 மில்லியன் பேர் பாதிக்கப்படுவதோடு சுமார் 400,000 பேர் உயிரிழக்கின்றனர்.

இதன்படி ஹெபடைடிஸ் ஏ மற்றும் பி வைரஸ்களில் இருந்து ஹெபடைடிஸ் சி வைரசை பிரித்து அடையாளம் கண்டதற்காக ஹார்வி அல்டருக்கும், ஹெபடைடிஸ் சி நோயறிமுறைக்கான சோதனையை உருவாக்கியதற்காக மைக்கல் ஹொக்டனுக்கும், ஹெபடைடிஸ் சி வைரஸ் ஏற்படுத்தும் பாதிப்புகளை மரபணு ஆராய்ச்சி வழி நிறுவியதற்காக சார்ல்ஸ் ரைஸுக்கு நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

## கொரோனாவுடன் ஆதரவாளர்களை சந்திக்க சென்ற டொனால்ட் டிரம்ப்



கொரோனா வைரஸ் தொற்றுக்காக மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப், மருத்துவமனைக்கு வெளியே திரண்ட ஆதரவாளர்களை வாகனத்தில் சென்று சந்தித்தது கடும் விமர்சனத்திற்கு உள்ளாகியுள்ளது. இதனை ஆபத்தான அரசியல் விளையாட்டு என்று பலரும் சாடியுள்ளனர்.

கறுப்பு நிறக் கார் வண்டி ஒன்றில் முகக் கவசம் அணிந்தபடி டிரம்ப் தமது ஆதரவாளர்களுக்கு கையசைத்து செல்வது வீடியோவில் பதிவாகியுள்ளது. அந்தக் காரின் முன்னிருக்கையில் ஓட்டுநருடன் மற்றொருவர் உள்ளார்.

“ஒரு சில நிமிடங்கள் மாத்திரம் ஜனாதிபதி டிரம்ப் வாகனத்தில் சென்று வெளியில் இருக்கும் தமது ஆதரவாளர்களுக்கு கையசைத்துவிட்டு வோல்டர் ரீட் மருத்துவமனைக்கு மீண்டும் திரும்பினார்” என்று வெள்ளை மாளிகை பேச்சாளர் ஜூட் டீர் குறிப்பிட்டுள்ளார். இதற்கு பொருத்தமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமது அரசின் சுகாதார வழிகாட்டல்களை அவரே மீறிச் செயற்பட்டிருப்பதாக நிபுணர்கள் குறிப்பிட்டுள்ளனர். அவருடன் வாகனத்திற்குள் இருக்கும் தமது காவலர்களையும் ஆபத்துக்குள்ளாக்கி இருப்பதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். ஜனநாயகக் கட்சியினரும் டிரம்பின் செயலை விமர்சித்துள்ளனர். “எமக்குத் தேவை தலைவர்களே ஒழிய புகைப்படங்களுக்கு காட்சி தருபவர்கள் அல்ல” என்று பிரதிநிதிகள் சபை உறுப்பினர் ஹகீம் ஜெப்ரீஸ் தெரிவித்தார்.

எதிர்வரும் நவம்பர் 3 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் டிரம்ப் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஜோ பைடனை எதிர்த்துப் போட்டியிடுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

டிரம்பின் உடல்நிலை குறித்து தொடர்ந்து கேள்வி எழுப்பப்படுவதோடு அது பற்றி கடந்த வார இறுதியில் முரணான தகவல்கள் வெளியாகி இருந்தன.

தமக்கு கொரோனா தொற்று ஏற்பட்டிருப்பதாக கடந்த வெள்ளிக்கிழமை அறிவித்ததை அடுத்து அவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

கொரோனா தொற்றினால் உலகில் மோசமாக பாதிக்கப்பட்ட நாடாக இருக்கும் அமெரிக்காவில் 7.4 மில்லியன் தொற்றுச் சம்பவங்கள் பதிவாகி இருப்பதோடு 200,000க்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்.

## ஆப்கானில் தற்கொலை தாக்குதல்: 8 பேர் பலி



கிழக்கு ஆப்கானிஸ்தானின் மாகாண ஆளுநர் ஒருவரை இலக்கு வைத்து நேற்று இடம்பெற்ற தற்கொலைக் கார் குண்டு தாக்குதலில் நான்கு பொதுமக்கள் உட்பட குறைந்தது எட்டுப் பேர் பலியாகியுள்ளனர்.

இந்தத் தாக்குதலுக்கு இலக்கான ரஹ்மதுல்லா யார்மலின் சிறு காயத்திற்கு உள்ளாகி இருப்பதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இதில் இராணுவத்தினர் மற்றும் சிவிலியன்கள் என 30 பேர் வரை காயமடைந்திருப்பதாக ஆளுநரின் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் தாக்குதலுக்கு எவரும் பொறுப்பேற்காதபோதும் இஸ்லாமிய அரசுக் குழு மற்றும் தலிபான்கள் அடிக்கடி தாக்குதல்களை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆப்கானிஸ்தானின் நீண்டகால போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு ஆப்கான் அரசு மற்றும் தலிபான்களுக்கு இடையே கட்டாரில் பேச்சுவார்த்தை இடம்பெறுகிறது.

## மாலியில் நூற்றுக்கு மேல் ஜிஹாதிக்கள் விடுதலை



முன்னணி அரசியல்வாதி ஒருவர் மற்றும் பிரான்ஸ் நாட்டு தொண்டூழியர் ஒருவரின் விடுதலைக்காக மாலியில் 100க்கும் அதிகமான ஜிஹாதிக்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும் மூன்று முறை ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட்டவருமான சவுமைலா சிசே கடந்த மார்ச் 25 ஆம் திகதி கடத்திச் செல்லப்பட்டார். அதேபோன்று சொபியா பெர்ரோனின் என்ற தொண்டூழியர் 2016 இல் கடத்திச் செல்லப்பட்டார். இவர்கள் ஜிஹாதிக்களிடம் பணயக் கைதிகளாக உள்ளனர்.

இந்நிலையில் இவர்களின் விடுதலைக்கு பகரமாக நூற்றுக்கும் அதிகமான ஜிஹாதிக்களை விடுவிக்க மாலி அரசு இணங்கியுள்ளது.

இஸ்லாமியவாத கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக மாலி கடந்த எட்டு ஆண்டுகளாக போராடி வருகிறது. இந்த வன்முறைகளில் ஆயிரக் கணக்கான மக்கள் கொல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்காவில் குளிருக்கு மத்தியில் வைரஸ் உச்சம்



அமெரிக்காவில் குளிர்ந்த பருவ நிலையால் வைரஸ் தொற்றுக்கு ஆளாவோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

கடந்த வாரம் 9 மாநிலங்களில் வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை உயர்ந்துள்ளது. அதனால், நியூயோர்க் நகரின் 9 இடங்களில் முடக்கம் அறிவிக்கப்பட வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

வைரஸ் பரவல் அதிகரித்து வருவதால், கட்டுப்பாடுகள் தளர்த்தப்படுவதாய் முன்னர் விடுத்த உத்தரவை நியூயோர்க் மேயர் பில் டி பிலேசியோ நிறுத்தி வைத்துள்ளார்.

மாநில ஆளுநர் அண்ட்ரூ குவோமோ ஒப்புதல் அளித்தால் நியூயோர்க்கில் நாளை முடக்கம் அறிவிக்கப்படும்.

அத்தியாவசியச் சேவைகள் அல்லாத வர்த்தக நிறுவனங்கள், அரச பாடசாலைகள், தனியார் பாடசாலைகள், பகல் நேரப் பராமரிப்பு நிலையங்கள் ஆகியவை மூடப்படும்.

மூன்று நாட்களுக்கு முன்னர்தான் நியூயோர்க்கில் பாடசாலைகள் மீண்டும் திறக்கப்பட்டன. அமெரிக்காவில் 7.4 மில்லியன் பேர் வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். 209,000 க்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்.

## பிரான்சிடம் இருந்து சுதந்திரம்: நியூ கலடோனியா நிராகரிப்பு



பிரான்சின் கடல்கடந்த ஆட்சிப் பகுதியான நியூ கலடோனியா தனி நாடாக சுதந்திரம் பெறுவது தொடர்பில் நடத்தப்பட்ட சர்வஜன வாக்கெடுப்பு குறுகிய வாக்கு வித்தியாசத்தில் தோல்வி அடைந்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற வாக்கெடுப்பில் 85.6 வாக்கு பதிவாகியுள்ளது. இதில் பிரான்ஸ் நிர்வாகத்தில் தொடர்ந்து நீடிப்பதற்கு ஆதரவாக 53.26 வீத வாக்குகள் பதிவாகியுள்ளன.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரும் இது தொடர்பில் இடம்பெற்ற சர்வஜன வாக்கெடுப்பில் 56.7 வீத மானவர்கள் பிரான்ஸுடன் நீடிப்பதற்கு ஆதரவாக வாக்களித்திருந்தனர்.

கடந்த 170 ஆண்டுகளாக நியூ கலடோனியா, பிரான்சின் ஆட்சிப் பகுதியாக இருந்து வருகிறது.

இந்த வாக்கு முடிவை வரவேற்றிருக்கும் பிரான்ஸ் ஜனாதிபதி எம்மானுவேல் மக்ரோன், குடியரசு மீதான நம்பிக்கையை இது காட்டுவதாக தெரிவித்துள்ளார்.

இந்தத் தீவில் இருக்கும் பழங்குடி கனக் மக்கள் மற்றும் ஐரோப்பிய குடியேறிகளின் சந்ததிகளுக்கு இடையே இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர் ஏற்பட்ட இணக்கத்தின் அடிப்படையிலேயே இந்த சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கொவிட்–19: பாரிஸ் நகரில் புதிய கட்டுப்பாடுகள் அமுல்



கொரோனா வைரஸ் தொற்று பரவல் வேகம் தொடர்ந்து நீடிப்பதால் பிரான்ஸ் தலைநகர் பாரிசில் உசார் நிலை அதிகரிக்கப்பட்டிருப்பதோடு நகரின் மதுபானக் கடைகள் இன்று தொடக்கம் முற்றாக மூடப்படவுள்ளன.

இந்த புதிய முடக்க நிலை இரண்டு வாரங்களுக்கு இடம்பெறும் என்று பிரதமர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.


பிரான்சில் கடந்த ஞாயிறன்று 12,565 புதிய கொவிட்–19 சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

மார்செய்லா நகரில் மதுபானக் கடைகள் மற்றும் உணவகங்கள் கடந்த வாரம் மூடப்பட்ட நிலையிலேயே புதிய கட்டுப்பாடுகள் கொண்டுவரப்பட்டுள்ளன.

கடந்த ஒகஸ்ட் பிற்பகுதி தொடக்கம் அதிகரித்து வரும் கொரோனா தொற்று வேகத்தை கட்டுப்படுத்துவதற்கு பிரான்ஸ் நிர்வாகம் போராடி வருகிறது. கடந்த சனிக்கிழமை மாத்திரம் சுமார் 17,000 நோய்த் தொற்று சம்பவங்கள் பதிவாகின. நாட்டில் பரந்த அளவில் சோதனைகள் ஆரம்பிக்கப்பட்டது தொடக்கம் இது அதிக எண்ணிக்கையாக இருந்தது.

பொதுமக்கள் மீது தாக்குதல்

## அசர்–ஆர்மேனிய படை பரஸ்பரம் குற்றச்சாட்டு



ஆர்மேனியா மற்றும் அசர்பைஜான் இடையே தொடர்ந்து ஒன்பதாவது நாளாகவும் இடம்பெற்று வரும் மோதல்களில் பொதுமக்கள் வாழிடங்கள் மீது தாக்குதல் நடத்துவது குறித்து இரு தரப்பும் பரஸ்பரஸ் குற்றம்சாட்டி வருகின்றன.

சர்ச்சைக்குரிய நகொர்னோ கரபக் பிராந்தியத்தை ஒட்டி வெடித்திருக்கும் இந்தப் போரில் நூற்றுக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டிருப்பதாக நம்பப்படுகிறது. இந்தப் பிராந்தியம் அசர்பைஜான் நாட்டுக்குள் இருந்தபோதும் ஆர்மேனியர்களின் கட்டுப்பாட்டில் உள்ளது. நகொர்னோ கரபக் பிராந்திய தலைநகர் ஸ்டெபனகார்ட் மீது அசர்பைஜான் படைகள் பீரங்கித் தாக்குதல் நடத்துவதாக ஆர்மேனிய இனப் படையினர் குறிப்பிட்டுள்ளனர். மறுபுறம் இந்தப் பிளவுபட்ட பிராந்தியத்திற்கு அப்பால் இருக்கும் பல நகர்கள் மீது ஆர்மேனியா ஏவுகணைத் தாக்குதல் நடத்துவதாக அசர்பைஜான் குற்றம்சாட்டியுள்ளது.

இரு தரப்புக்கும் இடையிலான இந்த மோதல் கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலான காலத்தில் ஏற்பட்டிருக்கும் மிகப் பெரிய போராக மாறியுள்ளது.

## படகிலிருந்து வெளியேற்றிய எட்டு குடியேற்றவாசிகள் பலி



டிஜிபுட்டிக்கு அருகில் ஆட்கடத்தல்காரர்களால் படகில் இருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்ட எட்டு குடியேற்றவாசிகள் பலியாகி இருப்பதோடு மேலும் 12 பேர் காணாமல்போயுள்ளனர்.

கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக எல்லைகள் மூடப்பட்டிருப்பதால் யெமன் வழியாக சவூதி அரேபியாவுக்குச் செல்லும் முயற்சி தோல்வி அடைந்து திரும்பிய எத்தியோப்பியர்களே உயிரிழந்திருப்பதாக நம்பப்படுகிறது.

படகு கடலில் இருக்கும்போதே வன்முறையோடு செயற்பட்ட மூன்று ஆட்கடத்தல்காரர்கள் இளம் ஆண்கள் மற்றும் பெண்களை வெளியேற்றியதாக உயிர்தப்பியவர்களை மேற்கோள்காட்டி இடம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு ஏ.எப்.பி செய்தி நிறுவனத்திடம் குறிப்பிட்டுள்ளது.

கடந்த மூன்று வாரங்களில் குறைந்தது 2,000 குடியேற்றவாசிகள் யெமனில் இருந்து டிஜிபுட்டியை அடைந்திருப்பதாக அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

இவர்களில் பெரும்பாலானவர்கள் எத்தியோப்பியா, சோமாலியா மற்றும் ஏனைய கிழக்கு ஆபிரிக்க நாடுகளில் தமது சொந்த ஊருக்கு திரும்பவே இவ்வாறு அங்கு வந்துள்ளனர்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2020 ஒக்டோபர் 6 செவ்வாய்க்கிழமை
# தினகரன்
THINAKARAN


இன்றைய சுபதினம்
சார்வரி வருடம் புரட்டாதி 20
ராகுகாலம் : மாலை : 3.00 - 4.30வரை
சுபநேரம் : காலை : 7.30 - 9.00வரை
யோகம்: சித்தஅமிர்த யோகம்
நட்சத்திரம்: கார்த்திகை மாலை 4.50
திதி: பஞ்சமி

தொழுகை நேரம்
சுபஹ் - 04.43
லுஹர் - 12.01
அஸர் - 03.16
மஃரிப் - 06.01
இஷா - 07.11



20ஆவது திருத்தத்திலுள்ள கணக்காய்வாளர் நாயகத்தின் அதிகாரம்

## எதிரணியின் குற்றச்சாட்டுக்கு பிரதமர் மஹிந்த மறுப்பு



20ஆவது திருத்தத்தின் மூலம் கணக்காய்வாளர் நாயகத்தின் அதிகாரம் குறைக்கப்படும் என்ற எதிர்க்கட்சிகளின் பிரசாரம் தவறானதென பிரதமர் மஹிந்த ராஜபக்ச குறிப்பிட்டுள்ளார்.

இப் பிரசாரத்தால் சமூகத்தில் பிழையான கருத்துகள் ஏற்பட வழிவகுக்கும். கணக்காய்வாளர் நாயகம் தொடர்பான அரசியலமைப்பு ஏற்பாடுகள் குறித்து மக்களின் கவனம் அபூர்வமாகவே ஏற்படுகின்றது. அதனால் இது தொடர்பில் தவறான கருத்துகளை பரப்புவது எதிர்க்கட்சிக்கு இலகுவான விடயமாகியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள அவர்,

இது தொடர்பாக நடைமுறையிலுள்ள முக்கிய தவறான கருத்தை 19 ஆவது திருத்தத்தில் கணக்காய்வு ஆணைக்குழு ஏற்படுத்தியது என்றும்,20 ஆவது திருத்தத்தால் அதனை நீக்க பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவினால் திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது. 19 ஆவது திருத்தத்தால் கணக்காய்வு ஆணைக்குழு உருவாக்கப்படவில்லை.

19 ஆவது திருத்தத்தின் கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழு மாத்திரமே உருவாக்கப்பட்டது. இந்த கணக்காய்வு சேவைகள் மூலம் எந்தவொரு கணக்காய்வும் நடைபெறுவதில்லை. அதன் மூலம் இலங்கை அரசாங்க கணக்காய்வு சேவைக்குரிய பிரதிநிதிகளை நியமிப்பது, பதவி உயர்வு அளிப்பது, மாற்றல் வழங்குவது,

06



தமிழ் நாடக விழா ஆரம்ப நிகழ்வு சனிக்கிழமை (3) மாலை கொழும்பு மருதானை எல்பின்ஸ்டன் திரை அரங்கில் நடைபெற்றது. இதன்போது தேசிய மரபுரிமை, கிராமியகலை ராஜாங்க அமைச்சின் செயலாளர் எஸ்.டி.கொடிக்கார மங்கள விளக்கை ஏற்றி வைப்பதையும் நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் டக்லஸ் சிரிவர்தன, பணிப்பாளர் சபை உறுப்பினர் புரவலர் ஹாசிம் உமர், பிரதி பணிப்பாளர் ஜெயபிரகாஷ், கலைஞர் கலைச்செல்வன் ஆகியோர் உடன் இருப்பதையும் காணலாம்.

ஊரடங்கு பிரதேச மக்களுக்கு

## அத்தியாவசிய பொருட்கள் வழங்க விசேட ஏற்பாடு

மாவட்ட செயலாளர் சுனில் ஜயலத்

கம்பஹா வெயாங்கொட, திவுலப்பிட்டிய, மினுவாங்கொட ஆகிய பொலிஸ் பிரிவுகளுக்குட்பட்ட பிரதேசங்களில் பொலிஸ் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில் அப்பிரதேசங்களில் வசிக்கும் மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப்பொருட்களை விநியோகிக்க நடவடிக்கை எடுக்குமாறு, பிரதேச செயலாளர்களுக்கு அறிவுறுத்தியுள்ளதாக கம்பஹா மாவட்ட செயலாளர் சுனில் ஜயலத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, குறித்த பகுதியில் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்குத் தேவையான உலர் உணவுப்பொருட்களை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், உலர் உணவுப்பொருட்களை வழங்க வேண்டிய தேவையேற்படின் கடந்த காலங்களைப் போல, கிராம மட்டங்களுக்குச் சென்று, விநியோகிக்கும் வேலைத் திட்டத்தை முன்னெடுக்கவும் தயார் நிலையிலேயே இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கம்பஹா திவுலப்பிடிய பகுதியில் பெண்ணொருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், குறித்த

06

## நியூ டயமன் கப்பல் தீயணைப்பில் ஈடுபட்ட தரப்பினருக்கு 442 மில். வழங்கல்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

தீ அனர்த்தத்திற்குள்ளான நியூ டயமன் கப்பலில் தீயணைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்ட நிறுவனங்களுக்கு மேற்படி கப்பலுக்கான உரிமை நிறுவனம் 442 மில்லியன் ரூபா வழங்கியுள்ளதாக சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதேவேளை மேற்படி நிதி தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்குள் செயற்பட்டமைக்கான மாத்திரம் வழங்கப்பட்டதுடன் கடற் பிரதேசம் பாதிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் அந்தக் கொடுப்பனவு சம்பந்தப்படவில்லை என்றும் சட்டமா அதிபரின் இணைப்பதிகாரி நிஸாரா ஜயரத்ன தெரிவித்தார்.

பனாமா பொதியுடன் நியு டயமன் கப்பல் குவைத்திலிருந்து புறப்பட்டு இந்தியாவின் ஒடிசா துறைமுகத்திற்கு சென்றுகொண்டிருந்த வழியில் இலங்கையின் கிழக்கே சங்கமன்கண்டி கடற் பிரதேசத்தில் கடந்த மாதம் 3ம் திகதி தீ அனர்த்தத்திற்குள்ளானது அந்தக் கப்பலில் இரண்டு இலட்சத்தில் 70 ஆயிரம் மெற்றிக் தொன் மசகு எண்ணையும் 1700 மெ. தொன் டீசலும் இருந்துள்ளன. அந்தக் கப்பலில் முக்கியமான இயந்திர அறையிலேயே தீப்பரவல் இடம்பெற்றது. தீ அனர்த்தத்தை அடுத்து கப்பலில் பணிபுரிந்தவர்கள் பாதுகாப்பாக இலங்கை கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளனர்.

அதன்போது ஏற்பட்ட வெடிப்பு சம்பவத்தில் கப்பலில் ஊழியரான பிலிப்பைன்ஸ் பிரஜை ஒருவர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ)

## கலீலுர் ரஹ்மானின் மறைவுக்கு மீடியா போரம் அனுதாபம்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் அறிவிப்பாளரும் ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் செய்தி வாசிப்பாளருமான சம்மாந்துறை ஏ.சீ.எம். கலீலுர் ரஹ்மான் தனது 50ஆவது வயதில் நேற்று காலமானார், இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்.

கடந்த 25 வருடங்களாக நாட்டின் பிரதான ஊடகங்களில் அறிவிப்பாளராகவும் செய்தி வாசிப்பாளராகவும் பணி புரிந்த சகோதரர் கலீலுர் ரஹ்மானின் இழப்பு இத்துறையில் ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது.

சிறந்த குரல் வளம், தமிழ் மொழி உச்சரிப்பு, அவரது ஆற்றல் என்பவற்றின் காரணமாக இந்த நாட்டின் பிரதான அரச ஊடகங்களில் முக்கிய அறிவிப்பாளராக திகழ்ந்தார். துறைமுக அதிகார சபையில் பணிபுரிந்து கொண்டு பகுதி நேரமாக ஊடகப் பணியை சிறப்பாக மேற்கொண்டு எல்லோரதும் பாராட்டைப் பெற்ற ஒருவராவார்.

எவருடனும் முரண்படாது மென்மையாகவும் இனிமையாகவும் பழகக்கூடிய ஒருவர். ஆரவாரமின்றி, பெருமையின்றி நிதானமாக இத்துறையில் பணி புரிந்த சகோதரர் கலீலுர் ரஹ்மானிடமிருந்து ஊடகத் துறை இளைய தலைமுறையினர் கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்கள் நிறைய உள்ளன.

இத்துறையில் இன்னும் பல வருடங்கள் சிறப்பாக பணியாற்றக்கூடிய ஆளுமையான அவர், இறைவனின் தீர்ப்பை ஏற்று எம்மை விட்டுப் பிரிந்திருக்கிறார்.

அவருடைய மறைவுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் தனது ஆழ்ந்த கவலையையும் அனுதாபத்தையும் தெரிவிக்கிறது. அவரது மறுமை வாழ்வு வெற்றி பெற பிரார்த்திக்கிறது. வல்ல இறைவன் அவரது பாவங்களை மன்னித்து அவரது அத்தனை நற்கருமங்களையும் ஏற்று அங்கீகரித்து உயர்ந்த சுவனபதியை வழங்குமாறு பிரார்த்திப்போமாக!

## நுரைச்சோலை அனல்மின் நிலைய 4ஆம் கட்டம் குறித்து ஆராய்வு

நுரைச்சோலை அனல்மின் நிலைய 4ஆம் கட்டம் குறித்து மின் சக்தி அமைச்சர் டளஸ் அழகப்பெரும தலைமையிலான குழு நுரைச்சோலை அனல் மின்நிலையத்திற்கு சென்று ஆராய்ந்தது.

தேசிய பெறுமதியில் இன்று நுரைச்சோலை மின்னுற்பத்தி நிலையம் மிகவும் முக்கிய இடத்திலுள்ளது. லக்விஜய இருந்திருக்காவிட்டால் இந்நாட்டு மின்சாரத்துறைக்கு என்ன நடந்திருக்கும் என்று எம்மால் நினைத்துகூட பார்த்திருக்க முடியாது என அமைச்சர் தெரிவித்தார்.

விசேடமாக கொவிட் 19 வேளையில், 24 மணித்தியாலமும் ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டிருந்த வேளையில் தமது கடமைகளை சரிவரப் புரிந்தவர்கள் என்று அங்கு கடமையாற்றும் அனைவரையும் குறிப்பிடலாம். அவ்வேளையில் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட அனைவரும் பாராட்டப்பட்டார்கள். ஆனால் அவ்வாறான பாராட்டுகளின்றி நாட்டிற்கு ஆற்றிய பணியை ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட அரசாங்கத்தின் நன்றி தெரிவிப்பதாகவும் அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.



இலங்கையின் அன்றாட மின் தேவையில் 40% 45% நிறைவேற்ற 900 மெகாவோற் மின்சாரத்தை தேசிய தொகுதிக்கு வழங்கும் நுரைச்சோலை நிலக்கரி மின்னுற்பத்தி நிலையத்தில் கண்காணிப்பு விஜயமொன்றை அண்மையில் மேற்கொண்ட வேளையிலேயே இதனை தெரிவித்தார்.

06

மாளிகைக்காடு சுனாமி இளைஞன் விவகாரம்

## 2 தாய்மாரும் தனது பிள்ளை என்றனர்; DNA பரிசோதனைக்கு நீதவான் உத்தரவு

(அம்பாறை மத்திய குறுப் நிருபர்)

சுனாமியின் போது காணாமற் போய் மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டதாக கூறப்பட்ட சுனாமி இளைஞன் விவகாரம் சம்மாந்துறை நீதவான் நீதிமன்றத்தில் நேற்று (திங்கள்) விசாரணைக்கு வந்தபோது நீதிமன்றத்தில் ஆஜரான 2 தாய்மார்களும் தங்களது பிள்ளை என்றதால் நீதிமன்றத்தில் சர்ச்சை உருவாகியது.

இதனையடுத்து மரபணு பரிசோதனை நடாத்தி உண்மைத் தாயை கண்டறியுமாறு சம்மாந்துறை நீதிமன்ற நீதவான் எம்.ஐ.எம்.றிஸ்வி நேற்று சம்மாந்துறை பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார். இதன் பிரகாரம் 2 தாய்மாரையும் 2 கணவன்மாரையும் மேலதிக விசாரணைக்காக நாளை (புதன்) நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் நீதவான் மேலும் பணிப்புரை விடுத்தார்.

இந்த விடயம் தொடர்பில் வளர்ப்புத் தாய் என கூறப்படும் அம்பாறையைச் சேர்ந்த முகமது ஜுனைதீன் நூறுல் இன்சான் (வயது 42) என்பவரிடம் நீதவான் வினவியபோது, இந்தப் பிள்ளை எனக்கே சொந்தம் என கண்கலங்க தெரிவித்தார். தான் கர்ப்பிணியாக இருந்த வேளை மேற்கொண்ட வைத்திய பரிசோதனை அறிக்கைகளை சமர்ப்பித்து இவர் எனது பிள்ளை எனவும் குறிப்பிட்டார்.

இதனையடுத்து தனது பிள்ளை காணாமல் போனதாக கூறும் மாளிகைக்காடு கிராமத்தைச் சேர்ந்த அபுசாலி சித்தி கமாலியாவிடம் வினவியபோது, நான் பெற்ற பிள்ளை அது எனக்கே ஒப்படைக்க வேண்டும் என

06

## நீல மாணிக்க புத்தர் சிலையை விற்க முயன்ற நால்வர் கைது

நீல மாணிக்கத்தினாலான பாரம்பரிய தொல்பொருள் சிறப்பு மிக்க புத்தர் சிலையை 600 கோடி ரூபாவிற்கு விற்க கொண்டு சென்ற சந்தேக நபர்கள் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மொனராகலை குற்றப்புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து மொனராகலை கும்புக்கனை பகுதியில் ஞாயிற்றுக்கிழமை மாலை முன்னெடுக்கப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கைகளிலேயே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் குறித்த புத்தர் சிலையை 600 கோடி ரூபாவிற்கு விற்பனை செய்வதற்கு தயாராக வைத்திருந்தபோதே கைது செய்யப்பட்டுள்ளனர்.

2 அங்குலம் நீளமுடைய நீல மாணிக்க கற்களைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட பாரம்பரிய தொல்பொருள் சிறப்புமிக்க புத்தர் சிலையே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நம்பேவ, அநுராதபுரம் மற்றும் பேராதெனிய பகுதிகளைச் சேர்ந்த 20, 26, 30 மற்றும் 40 வயது மதிக்கத்தக்க நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேக நபர்களிடம் மேலதிக விசாரணைகளை மொனராகலை குற்றப்புலனாய்வு பிரிவினர் முன்னெடுத்து வருகின்றனர்.

## செய்தித் துளிகள்

### இந்து சமய அறநெறி கற்கைகள் இடைநிறுத்தம்

நாட்டின் சில மாவட்டங்களில் கொரேனா வைரஸின் தாக்கம் மீண்டும் அடையாளம் காணப்பட்டுள்ளதால், இந்து சமய அறநெறிப் பாடசாலை கற்கை நெறிகள் இடை நிறுத்தப்பட்டுள்ளன. உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படும் வரை, மாணவர்களின் கற்கை நெறிகளைத் தொடர வேண்டாமென இந்து சமய கலாசாரத் திணைக்களப் பணிப்பாளர் உமாமகேஸ்வரன் அறிவித்துள்ளார். இதனடிப் படையில் மறு அறிவித்தல் வரை கற்றல் நடவடிக்கைகள் இடை நிறுத்தப்பட்டுள்ளன.

சப்ரகமுவ பல்கலை

### மாணவர்கள் 20 பேருக்கு பீ.சீ.ஆர். பரிசோதனை

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் 20 பேருக்கு பீ.சீ.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளனர் என பிரதேச பொதுச் சுகாதார உத்தியோகத்தர் லாலித குமாரசிங்க நேற்று (5) தெரிவித்தார்.

வைத்திய உத்தியோகத்தர்களின் பணிப்புரைக்கமைய இவர்கள் தனி யான பாதுகாப்பு அறைகளில் வைக்கப்பட்டு வைத்திய விதிமுறைகளுக்கமைய வழி நடத்தப்பட்டு வருவதாக சப்ரகமுவ பல்கலைக்கழக துணைவேந்தர் நேற்றுத் தெரிவித்தார்.

மேற்படி மாணவர்கள் 20 பேரும் கம்பஹா மாவட்டத்தின் மினுவாங்கொடை மற்றும் திவுலபிட்டிய பிரதேசங்களை சேர்ந்தவர்கள். இவர்கள் பீ.சீ. ஆர்.பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படவுள்ளனர்.

ஆனமடுவ இளைஞனுக்கு

### மூன்றாவது தடவை கொரோனா தொற்று உறுதி

ஆனமடுவ தென்னங்குரிய பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட இளைஞனுக்கு மூன்றாவது தடவையாகவும் கொரோனா வைரஸ் உறுதி செய்யப்பட்டுள்ளதாக வடமேல் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் எம். பரீட் தெரிவித்தார்.

மேற்படி வைரஸ் தொற்று நோயாளி துபாயில் பணிபுரிந்து கடந்த ஆகஸ்ட் 18ம் திகதி நாடும்பியவர் என்றும் முதல் தடவையாக வெலிக்கந்தை கொரோனா வைரஸ் சிகிச்சை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பின் நோய் உறுதி செய்யப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். அவர் வலிக்கந்த ஆஸ்பத்திரியிலிருந்து குணமடைந்து

06

### 6 கோடி பண மோசடி செய்த 37 பேர் கைது

ஆறு கோடி ரூபாவுக்கும் மேற்பட்ட பணத்தை மோசடி செய்த சந்தேக நபர்கள் சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

34 பண மோசடி சம்பவங்கள் தொடர்பில் 37 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேல் மாகாணத்தின் ஊழல் விசாரணை பிரிவினால் முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் மேற்படி சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இதேவேளை, கடந்த 24 மணித்தியாலங்களில் மேல் மாகாணத்தில் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 148 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

### நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 129.60 | 135.76 |
| கனடியன் டொலர் | 136.31 | 141.76 |
| யூரோ | 212.87 | 220.37 |
| ஜப்பான் யென் | 1.7127 | 1.7869 |
| சிங்கப்பூர் டொலர் | 132.88 | 138.16 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 235.24 | 242.99 |
| சுவிஸ் பிராங்க் | 197.53 | 205.17 |
| அமெரிக்க டொலர் | 182.43 | 186.75 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 489.40 | கட்டார் ரியால் | 50.68 |
| குவைத் டினார் | 602.71 | சவூதி ரியால் | 49.20 |
| ஓமான் ரியால் | 479.39 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 50.24 |

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சார்வரி வருடம் புரட்டாதி மாதம் 20ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 சபர் பிறை 18

### குறள் தரும் சிந்தனை

அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று

அகத்தில் அன்பு இல்லாமல் வாழும் உயிர் வாழக்கை வளமற்ற பாலைநிலத்தில் பட்ட மரம் தளிர்த்தாற் போன்றது.

## உலகை விட்டு கொரோனா நீங்கும் வரை அலட்சியமென்பது ஆபத்து

'கொரோனா வைரஸ் தொற்று இலங்கையை விட்டு முற்றாகவே நீங்கி விட்டது, இனிமேல் நாம் இதுபற்றி அச்சமடையத் தேவையில்லை' என்றுதான் எமது நாட்டில் மக்கள் பலர் நேற்றுமுன்தினம் வரை நம்பிக்கை கொண்டிருந்தார்கள். அவ்வாறானதொரு எண்ணத்தில்தான் மக்களில் பலர் அலட்சியமாகவும் செயற்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

ஆனால் உண்மை அதுவல்லவென்பதை ஒரே நாளிலேயே மக்களுக்கெல்லாம் நன்றாகப் புரிய வைத்து விட்டது கொரோனா வைரஸ்! கம்பஹா மாவட்டத்திலுள்ள திவுலப்பிட்டியவில் ஆரம்பத்தில் ஒரேயொரு பெண்ணுக்கு மாத்திரமே கொரோனா வைரஸ் தொற்று நேற்றுமுன்தினம் காலை வரை கண்டுபிடிக்கப்பட்டிருந்தது. ஆனால் படிப்படியாக புதிய தொற்றாளர்கள் பலர் நாட்டில் ஆங்காங்கே கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றனர். நேற்றுமுன்தினம் காலை தொடக்கம் இந்த ஆசிரிய தலையங்கம் தீட்டப்படும் வரை புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 69 ஆகும்.

கொவிட் 19 வைரஸ் தீநுண்மியின் பரவல் பண்பு இவ்வாறானதேயாகும். தொற்றுக்குள்ளான ஒருவரில் இருந்து நாமெல்லாம் நினைத்தே பார்க்க முடியாதபடி மிக வேகமாக மற்றையோருக்கும் இலகுவில் தொற்றிக் கொள்ளக் கூடிய இயல்பு கொண்டது கொவிட் 19 வைரஸ். உண்மையில் இந்த வைரஸ் எவ்வாறெல்லாம் ஒருவரில் இருந்து மற்றவருக்குப் பரவக் கூடியதென்பதை மருத்துவ அறிவியலாளர்களால் இன்னுமே பூரணமாகக் கண்டுபிடிக்க முடியாதிருக்கிறது.இது பற்றிய ஆய்வுகள் இன்னும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

உலகின் மிகப் பிரபலங்களாக விளங்குகின்ற அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் அவரது பாரியார், இங்கிலாந்துப் பிரதமர் பொரிஸ் ஜோன்சன், இந்திய திரையுலக முன்னணி நட்சத்திரம் அமிதாப்பச்சன், உலகறிந்த பாடகர் எஸ்.பி. பாலசுப்ரமணியம் போன்றோர் உட்பட எத்தனையோ அதிமுக்கிய பிரஜைகளெல்லாம் கொரோனா தொற்றுக்கு ஆளாகியது எவ்வாறென்பதை நினைத்துப் பார்க்கின்ற போது, கொரோனா வைரஸின் தொற்றுதல் தீவிரம் மர்மம் நிறைந்ததாகவே இருக்கின்றது.

சமூக இடைவெளி பேணுதல், முகக்கவசம் அணிதல், கைகளில் கிருமித் தொற்று பேணுதல் போன்ற பிரதானமான சுகாதாரப் பழக்கவழக்கங்கள் காரணமாக கொவிட் 19 கிருமித் தொற்றில் இருந்து பாதுகாப்புப் பெற முடியுமென்று சர்வதேச மருத்துவ அறிவியலாளர்கள் அறிவுரை கூறுவதில் உண்மை இல்லாமலில்லை. ஆனால் ஒவ்வொருவரும் எவ்வேளையிலும் கண்டிப்பான விழிப்புணர்வைப் பேணியபடி இருந்தால் மாத்திரமே கொரோனா தொற்றுதலில் இருந்து பாதுகாப்புப் பெற முடியுமென்பதே உண்மை.

எமது சிறுகண நேர அலட்சியம் கூட கொரோனா தொற்றுக்கு இடமளித்து விடும் என்பதுதான் இங்கு புரிந்து கொள்ளப்பட வேண்டிய விடயமாகும். உலகில் இதுவரை கொரோனா தொற்றுக்கு உள்ளாகிய அத்தனை பிரபலங்களுக்கும் நடந்தது இதுதான். அவர்கள் தங்களது விழிப்புணர்வையெல்லாம் சிறுகண நேரத்தில் மறந்து அலட்சியப்படுத்திக் கொண்டதன் விளைவாகவே கொரோனா தொற்றுக்கு உள்ளாகிப் போனார்கள்.

உலக நாடுகள் எங்கும் இதுவரை கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்த பத்து இலட்சத்துக்கும் மேற்பட்டவர்களில் அரசியல், சினிமா, வர்த்தகம், கலைத்துறை சார்ந்த பிரபல மனிதர்களும் பெருமளவில் உள்ளடங்குகின்றனர். நாம் கூட மனங்கவர்ந்தவர்களில் ஒன்றிரண்டு பேரை கொரோனாவுக்குப் பறிகொடுத்திருக்கிறோம். அவர்களில் ஒருவர் எமது மனம் கவர்ந்த பிரபல பாடகர் எஸ்.பி. பாலசுப்ரமணியம்.

கொரோனா தொற்று பாதுகாப்பைப் பொறுத்தவரை அதியுச்ச சுகாதாரப் பழக்கவழக்கங்களையும், பாதுகாப்பு நடைமுறைகளையும் கண்டிப்பாகப் பேணி வருகின்ற நாடாக இலங்கை விளங்குகின்றது. உலக சுகாதார நிறுவனம் உட்பட சர்வதேச அமைப்புகள் பலவும் இவ்விடயத்தில் இலங்கையை வெகுவாகப் பாராட்டியிருக்கின்றன. கொரோனா தொற்றுக்குள்ளான ஒருவரை தனிமைப்படுத்தி அவருக்கு தீவிரமான மருத்துவ சிகிச்சையளிப்பது ஒருபுறமிருக்க, தொற்றுக்குள்ளானவரின் 'வழித்தடம்' தேடிச் சென்று அவருடன் தொடர்புடைய அனைவரையுமே தனிமைப்படுத்தி அவதானிக்கும் தீவிரமான பொறிமுறையில் இலங்கைதான் உலகத்திலேயே உச்சத்தில் உள்ளது.

ஏனைய நாடுகளில் இவ்வாறான சிறப்புக் கவனிப்புகள் கிடையாது. மேற்கு நாடுகளில் கூட இலங்கையைப் போன்ற விசேட கரிசனைகளெல்லாம் இல்லை. இதன் காரணமாக அந்நாடுகளில் பலர் உயிரிழந்துள்ளார்கள்.

ஆனாலும் எமது நாட்டின் மருத்துவக் கட்டமைப்புப் பொறிமுறை உயர்தரம் வாய்ந்ததென்ற எண்ணத்தில் நாமெல்லாம் கொரோனா விடயத்தில் ஒருபோதுமே அலட்சியமாக இருந்து விட முடியாதென்பதை இப்போது புரிந்து கொள்வது அவசியம். உலகை விட்டு கொரோனா முற்றாக நீங்கும் வரை முழுமையான விழிப்புணர்வை சற்றேனும் நாம் கைவிடக் கூடாதென்பதே யதார்த்தமாகும்.

editor.tkn@lakehouse.lk

# மாணவர்களை நல்வழிப்படுத்துகின்ற ஆசிரியர்களை உலகம் என்றும் போற்றும்

## தனது பண்பையும், கற்பித்தல் தகைமையையும் வளர்த்துக் கொள்பவரே உண்மையான குரு

சர்வதேச ஆசிரியர் தினம் இன்று கொண்டாடப்படுகின்றது. கொவிட் 19 அச்சம் காரணமாக இன்று ஆசிரியர் தினத்தை இலங்கையில் கொண்டாட முடியாமல் போய் விட்டது. ஒரு பிறவியிலே தான் கற்ற கல்வியானது, ஒருவனுக்குத் தொடர்ந்து வரும் ஏழு பிறப்புக்களிலும் அவனைப் பாதுகாக்கும் சிறப்புடையது என்கிறார் திருவள்ளுவர். இவ்வாறு சிறப்புற்று விளங்கும் கல்வியை பிள்ளைகளுக்கு சிறு பராயத்திலிருந்து ஊட்டும் ஆசிரியர்கள் போற்றப்பட வேண்டியவர்கள், மதிக்கப்பட வேண்டவர்கள். 'எழுத்தறிவித்தவன் இறைவன்' என்பதற்கிணங்க ஒவ்வொரு பிள்ளைக்கும் தான் கற்ற கல்வியை ஊட்டும் ஆசியரியர்கள் அனைவரும் இறைவனாகப் போற்றப்பட வேண்டியவர்களாவர்.

ஆனால் அவ்வாறான பண்பை ஒவ்வொரு ஆசிரியரும் கொண்டிருக்க வேண்டும். அது மாத்திரமன்றி ஆசிரியர்கள் தங்களது தகைமையையும் திறமையையும் வளர்த்துக் கொள்வது அவசியம். இவ்வாறான ஆசிரியர்களையே உலகம் சிறந்த ஆசிரியர்களாகப் போற்றுமென்பது உண்மை.

எந்தப் பணிக்கும் கிடைக்காத பெருமையும் பாராட்டும் சிறந்த ஆசிரியர்களுக்கு மட்டுமே உண்டு. மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற பதங்களை வெளிப்படையாக நோக்குகின்ற போது தமது பெற்றோருக்கு அடுத்தபடியாகவும் தெய்வத்திற்கு முதன்மையாகவும் வைத்து போற்றப்பட வேண்டியவர்கள் ஆசிரியர்களாவர்.

அத்தகைய சிறப்பு மிக்க மனிதநேயப் பண்பாளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் நாளாக ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் மாதம் 6 ஆம் திகதி சர்வதேச ஆசிரியர் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

வழமையாக ஆசிரியர் தினத்தில் ஆசிரியர்கள் மாணவர்களால் கௌரவிக்கப்படுகின்றனர். இதன் மூலமாக ஆசிரியர்_ மாணவர் இடைத் தொடர்புகள் நெருக்கமடைய வாய்ப்புகள் ஏற்படுத்தப்படுகின்றன. குடும்பங்களிலிருந்து தனது கற்றல் செயற்பாடுகளுக்காக பாடசாலைகளில் இணைகின்ற ஒவ்வொரு பிள்ளைக்கும் பாடசாலை நிருவாகம் பெற்றோராக




மாத்திரமல்லாது நெறியாளர்களாகவும் பணியாற்ற வேண்டும். தன்னிடம் ஒப்படைக்கப்படுகின்ற மாணவனை நல்ல ஒழுக்க விழுமியங்களைப் பின்பற்றுகின்ற மாணவனாக ஆக்குவதோடு நல்ல மனிதனாக மாற்றுகின்ற பொறுப்பும் ஆசிரியர்களுக்கு உண்டு.

அதே போல் உண்மையான ஆசிரியர் என்பவர் மாணவ சமூகத்தினை உருவாக்குபவர் அல்ல, மாறாக உயிரூட்டுபவர் ஆவார். அதுவே சிறந்த ஆசிரியரின் பண்பாகும்.

பாடசாலைக்கு வருகின்ற மாணவர்களுக்கு தினமும் கற்றலுடன் ஒழுக்க நெறிகளை புகட்டி அறிவு ஞானத்தினை திறந்து அவர்களை சாதனையாளர்களாக மாற்ற வேண்டியவர்கள் ஆசிரியர்களே யாவர். ஒரு ஆசிரியர் தான் முதுமை அடைந்து இறந்தாலும் அவர் தனது மாணவர்களுக்கு புகட்டிய கல்விச் செல்வம் என்றுமே அழிவதில்லை. தன்னிடம் ஒப்படைக்கப்படும் மாணவர்களுக்கு சமூகக் கட்டமைப்பினை கற்றுக் கொடுக்க வேண்டியவர் ஆசிரியராவார்.

நல்ல ஆசான் ஒருவரின் பண்புகளை மாணவர்கள் பின்பற்றுவார்கள். ஒருதேசத்தின் வளமான எதிர்காலத்தை தாங்கவிருக்கும் தூண்களுக்கு பலமூட்டுகின்ற பாக்கியம் ஆசிரியர்களுக்கு உண்டு.

உண்மையில் ஒக்டோபர் 05ம் திகதியன்று உலக ஆசிரியர் தினம் உலகளாவிய ரீதியில் பல்வேறு விதமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. ஆனால் இலங்கையில் வருடந்தோறும் ஒக்டோபர் 6 ஆம் திகதி இத்தினம் கொண்டாடப்பட்டு வரப்படுகின்றது.

இலங்கையில் ஆசிரியர் தினத்தன்று சிங்கள மற்றும் தமிழ் ஆசிரியர்களுக்கு வெற்றிலை கொடுத்து காலில் விழுந்து மாணவர்கள் வணக்கம் செலுத்தும் நடைமுறை காணப்படுகின்றது. இவ்வாறான தினங்கள் கொண்டாடப்படுவதன் மூலமாக ஆசான்களின் உள்ளம் மகிழ்ச்சி அடைகின்றது. இம்முறை கொரோனா அச்சம் காரணமாக இத்தினம் இன்று சோபை இழந்துள்ளது. மாணவர்களாக இருந்தாலும், எவ்வளவு உயர் பதவிகள் வகித்தாலும், தமக்குக் கற்பித்த ஆசிரியர்களை வருடத்தில் ஒரு முறையேறும் கனம்பண்ணுவது சாலச் சிறந்தது எனலாம்.

**வ.சக்திவேல்**

# அன்பு நிறைந்த சிறுவர் உலகத்தை உருவாக்குதல் அனைவரதும் கடமை

அன்பு நிறைந்த அழகிய சிறுவர் உலகத்தை தோற்றுவிப்பதற்கான முயற்சிகள் முன்னெடுப்பது மூத்தோர் அனைவரினதும் கடமையாகும். அத்துடன் மாணவர்களை சுயகற்றல், அவதானிப்பு மற்றும் ஆய்வுகளில் ஈடுபடுத்தி ஆக்கத்திறன் மிகுந்த சிறார்களை உருவாக்குவதற்கு முறையான வழிகாட்டுதல்களையும் மற்றும் சந்தர்ப்பங்களையும் வழங்கி அவர்களுக்கு வலுவூட்டுவது மூத்தோர் கடமையாகும்.

சிறுவர் உரிமைகள் பற்றிய ஐக்கிய நாடுகளின் சமவாயம் சர்வதேச ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாகக் கருதப்படுகிறது. எல்லாப் பிள்ளைகளுக்கும் உள்ள உரிமைகளை அது வரையறுத்துள்ளது. உலகிலுள்ள அநேகமான எல்லா நாடுகளும் இதன் அடிப்படையிலே பிள்ளைகள் நடத்தப்படுவர் என ஏற்றுக் கொண்டுள்ளன.

இலங்கையின் சிறுவர் உரிமை தொடர்பாக ஆராயும் போது குடியேற்ற நிலைக்கு முற்பட்ட காலம், சுதந்திரத்திற்கு பிற்பட்ட காலம் என பிரித்துப் பார்க்க முடியும். குடியேற்ற நிலைக்கு முற்பட்ட காலமான போத்துக்கேயர் ஆட்சிக் காலம், டச்சுக்காரர் (ஒல்லாந்தர்) ஆட்சிக் காலம், பிரித்தானியர் ஆட்சிக் காலம் என வகைப்படுத்த முடியும்.

மேற்கூறிய காலப் பகுதியில் பெற்றோர் தம் பிள்ளைகள் மீது விரிவான அதிகாரங்களைக் கொண்டிருந்தனர். பிள்ளைகளை தமது சொந்த சொத்தாக கருதி அவர்களை கொடுமைப்படுத்துவதற்கும் கூட அவர்களால் முடிந்தது.

குடியேற்றக் காலத்துக்கு முற்பட்ட காலத்தில் பிள்ளைகளின் உரிமைகள் எனும் எண்ணக்கருவை சமூகம் அங்கீகரிக்கவில்லை. உரிமைகளை அனுபவிக்கும் சட்டபூர்வ நபர்களாக பிள்ளைகள் ஏற்கப்படவில்லை. குடியேற்ற நிலைக் காலம், போத்துக்கேயர் ஆட்சிக் காலம், ஒல்லாந்தர் ஆட்சிக் காலம் ஆகிய



காலங்களில் பெரியளவில் சிறுவர்களின் உரிமைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படவில்லை.

ஆனால் பிரித்தானியரால் 1939 இல் அறிமுகம் செய்யப்பட்ட பிள்ளைகள், இளையோர் பற்றிய கட்டளைச் சட்டம் பிள்ளைகளுக்கு நிகழும் கொடுமைகள், அவர்களின் உடலுக்கும் ஒழுக்கத்துக்கும் நேரும் அச்சுறுத்தல்கள் சம்பந்தமாக தடுக்கும் சரத்துக்களைக் கொண்டிருந்தது. இச்சட்டம் 14 வயதுக்குட்பட்டவர்களே பிள்ளைகள் என்று வரையறை செய்தது. பின்பு 16 வயது வரையுள்ள அனைத்தும் பிள்ளைகளுக்கும் தொடக்கநிலைக் கல்வி கட்டாயமாக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம் 1989 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. 1991 ஆம்ஆண்டில் இலங்கை அரசாங்கம் 42 சிறுவர் உரிமைகளை ஏற்று உறுதிப்படுத்தி அமுல்படுத்தி வருகின்றது. சிறுவர்கள் என்போர் யார், அவர்ளுடைய உரிமைகள் எவை? அவர்களை எவ்வாறு கையாள வேண்டும் போன்ற விடயங்கள் பற்றிய தெளிவின்மை பெற்றோர் மத்தியில் இன்று காணப்படுகிறது. அவற்றை அவர்களுக்கு தெளிவுபடுத்தி விழிப்புணர்வு செய்ய வேண்டியது ஊடகவியலாளர்களின் சமூகம் சார்ந்த பொறுப்பாகும்.

18 வயதிற்குட்பட்ட ஒவ்வொருவரும் சிறுவர் சிறுமியராக கணிக்கப்படுவர். சிலர் தாங்கள் பெற்றெடுத்த பிள்ளைகளை கொடுமைப்படுத்துவதையும் சித்திரவதை செய்வதையும் ஊடகங்களிலும் சமூக வலைத்தளங்களிலும் அறியக் கூடியதாக இருக்கின்றது. கணவன்_ மனைவி இணைந்து வாழும் போது தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் குடும்பப் பிரச்சினை ஏற்படுகின்றது. இதன் போது கணவனால் அல்லது மனைவியால் பிள்ளைகள் கொடுமைப்படுத்தப்படுவதையும் சித்திரவதை செய்யப்படுவதையும் அறிய முடிகின்றது.

ஆன்மிக ஒழுக்கவிழுமியங்களை கடைப்பிடித்து பெற்றோரை மதிக்கின்ற பொறுப்புணர்வுள்ள தேசத்தை கட்டியெழுப்பும் நற்பண்புள்ள பிரஜைகளாக பிள்ளைகளை உருவாக்க வேண்டும். இது பெற்றோருக்கு உள்ள கடப்பாடாகும்.

சிறுவர் துஷ்பிரயோகம் என்பது...

பிள்ளை ஒன்றின் மீது பிரயோகிக்கப்படுகின்ற துன்புறுத்தல்கள், நெருக்கீடுகள் சிறுவர் துஷ்பிரயோகம் என்று அழைக்கப்படுகின்றன.பொதுவாக பிள்ளையொன்று துஷ்பிரயோகத்திற்குள்ளாக்கப்படும் சந்தர்ப்பங்கள் வருமாறு:

பிள்ளையை அடித்தல் /காயம் ஏற்படுத்தல், பிள்ளையை பாலியல் ரீதியான நடவடிக்கைகளில் ஈடுபடுத்தல்/சுரண்டல், பிள்ளையை வேலைக்கமர்த்தல், பிள்ளையை கைவிட்டுச் செல்லுதல், ஆபாசக் காட்சிகளில் ஈடுபடுத்தல் போன்றனவாகும்.

உணர்வு ரீதியான துஷ்பிரயோகங்கள் வருமாறு:

வயது வந்தோர் குழந்தையை சிறுமைப்படுத்தல், ஏளனம் செய்தல், குழந்தையை ஒப்பிட்டுப் பேசுதல், மற்றைய குழந்தைகளிடையே வேறுபடுத்திப் பார்த்தலும் குழந்தையை தகாத வார்த்தையால் திட்டுதலும் என்பனவாகும். எனவே இவ்வாறான துஷ்பிரயோகங்களிலிருந்து பிள்ளைகளை பாதுகாக்க வேண்டியது எல்லோரதும் தார்மிகப் பொறுப்பாகும்.

**இஸ்மாயில் ஹுஸைன்தீன்**
அம்பாறை விசேட நிருபர்

# கொரோனா தொற்று ஏற்படாமல் பாதுகாப்பு பெறுவதற்கான வழிகள்

கொரோனா வைரஸ், நம் அனைவரின் வாழ்விலும் பல தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. நாம் வாழும் முறை, நம் உறவுகள் என பலவற்றிலும் அதன் தாக்கத்தைப் பார்க்க முடிகிறது.

இந்த பெருநோயிலிருந்து தற்காத்துக் கொள்வது குறித்து நமக்கு தொடர்ந்து அளிக்கப்படும் அறிவுரைகள் சற்றே கடினமாக அமையலாம். கொரோனா நோய்த்தொற்றிலிருந்து தற்காத்துக் கொள்ள உலக சுகாதார அமைப்பின் மிக முக்கியமான மற்றும் அடிப்படை பாதுகாப்பு அறிவுரை என்பது சுகாதாரமான முறையில் வாழ்வது என்பதாகும்.

உங்களின் கைகளை அடிக்கடி, சரியான முறையில் சுத்தம் செய்யுங்கள். சவர்க்காரம் மற்றும் தண்ணீரை பயன்படுத்தியோ, அல்க ஹோல் நிறைந்த கிருமிநாசினியை பயன் படுத்தியோ சுத்தம் செய்யுங்கள். இவை உங்களின் கைகளில் வைரஸ் இருந்தால் அவற்றை கொன்று விடும்.

உங்களின் கண்கள், மூக்கு மற்றும் வாயை தொடுவதை தவிருங்கள். நாம் பல பொருட்களை கைகளால் எடுத்து பயன்படுத்துவதால் கைகளில் வைரஸ் இருக்கக் கூடும். அவ்வாறு கண்கள், மூக்கு மற்றும் வாயை தொடுவதால், அவை நம் உடலினுள் நுழைய வாய்ப்புள்ளது. உங்களுக்கு தும்மல் அல்லது இருமல் வந்தால், கைக்குட்டை, ரிஷ்யூ கடதாசியைப் பயன்படுத்துங்கள். அப்போதைய சமயத்தில் கைவசம் அவை இல்லை என்றால் உங்களின் முழங்கையின் உட்புறத்தை வைத்து மறைத்துக் கொள்ளுங்கள்.

பயன்படுத்திய ரிஷ்யூ கடதாசியை உடனடியாக அப்புறப்படுத்தி விடுங்கள். மக்களை 2மீற்றர் சமூக இடைவெளியை கடைப்பிடிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

அத்தியாவசியத் தேவைகளை தவிர்த்து, வேறு எதற்காகவும் வெளியே போக வேண்டாம். ஒருவருக்கொருவர் கைகுலுக்கிக் கொள்வதை விடுத்து, 'பாதுகாப்பான முறையில் வரவேற்றுக் கொள்ளுங்கள்' என்கிறது உலக சுகாதார நிறுவனம். அதாவது, கை அசைத்தல், தலை தாழ்த்துதல் போன்ற முறைகளை பயன்படுத்திக் கொள்ளலாம். பாதுகாப்பான முகக்கவசத்தை அணிந்து வெளியே செல்லுங்கள்.

கொரோனா வைரஸ் தாக்குதலுக்கு உள்ளான பலரிடம் அறிகுறிகள் தெரிவதில்லை. எனவே, பொதுவெளியில் முகமூடி அணிந்து செல்வது என்பது பொதுவாகவே நமக்கு நன்மை அளிக்கும் ஒரு விஷயம்தான். கையுறைகளை அணிவதை விட சவர்க்காரம் மற்றும் தண்ணீர் கொண்டு கைகளை அடிக்கடி கழுவுவதால் நோய்த்தொற்றிலிருந்து அதிக பாதுகாப்பு கிடைக்கும் என்கிறது உலக சுகாதார நிறுவனம்.

வரண்ட இருமல் மற்றும் காய்ச்சல் ஆகியவையே இந்த நோயின் முக்கிய அறிகுறிகள். உங்களுக்கு அந்த அறிகுறிகள் உள்ளனவா என்பதை கவனித்துக் கொள்ளுங்கள்.

சிலருக்கு, தொண்டை கட்டுதல், தலைவலி, வயிற்றுப்போக்கு ஆகிய அறிகுறிகளும் அறியப்பட்டுள்ளன. நோயால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு, வாசனையை நுகர்தல் மற்றும் உணவின் சுவை அறிதல் ஆகிய உணர்வுகள் இல்லாமல் போவதாகவும் கூறப்படுகிறது.உங்களுக்கு உடல்நிலை சரியில்லாமல் போய் தலைவலி, மூக்கிலிருந்து நீர் வருவது ஆகிய இலேசான அறிகுறிகள் தெரிந்தாலும் அவை சரியாகும் வரை வீட்டில் இருக்குமாறு உலக சுகாதார நிறுவனம் கூறுகிறது.

80% பேருக்கு கொவிட் நோய் மிகவும் இலேசான தாக்கத்தையே உண்டாக்குகிறது என்பதால், அவர்கள் மற்றவர்களிடமிருந்து தங்களை தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியம். உங்களுக்கு காய்ச்சல், இருமல் அல்லது சுவாசிப்பதில் பிரச்சினை ஏற்பட்டால், மருத்துவ உதவியை நாடுங்கள். இது சுவாசப் பிரச்சினை அல்லது பிற தீவிர நோயின் காரணமாக இருக்கலாம்.




'தி லான்செட் இவ்ஃபெக்டஸ் டிசீஸ்' என்ற மருத்துவ சஞ்சிகையில் வெளியாகியுள்ள புதிய ஆய்வுக்கட்டுரையில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களில் 0.66% பேர் பேர் மட்டுமே இறப்பதாகக் குறிப்பிட்டுள்ளது.

80 வயதைத் தாண்டியவர்களில் இந்த நோய் பாதித்தவர்கள் சராசரியை விட 10 மடங்கு அதிகமாக மரணமடைவதாகவும், 40 வயதுக்கு கீழே உள்ளவர்களில் அந்த எண்ணிக்கை மிகவும் குறைவாகவே உள்ளது என்றும் தெரியவருகிறது.

சீனாவில் நடந்த முதல் கட்ட ஆய்வில் அங்குள்ள 44,000 நோயாளிகள் குறித்து கணக்கிட்ட போது, நீரிழிவு நோய், அதிக இரத்த அழுத்தம், இதயம் மற்றும் சுவாசப் பிரச்சினை உள்ளிட்ட நோய்கள் உள்ளவர்கள் ஐந்து மடங்கு அதிகம் மரணமடைவது தெரியவந்தது. இந்த புதிய வைரஸுக்கு எதிராக இதுவரை எந்த மருந்தோ, தடுப்பூசியோ இல்லை. நுண்ணுயிர்கொல்லி மருந்துகளும் இதற்கு எதிராக வேலை செய்வதில்லை. அவை பக்டீரியாக்களுக்கு எதிராக போராடுகின்றன. ஆனால் வைரஸுக்கு எதிராக இல்லை.

இதற்கு சிகிச்சைகள் உள்ளன என்றாலும், பெரும்பான்மையான மக்கள் தாங்களாகவே குணமாகி விடுகிறார்கள். உலகளவில் பல விஞ்ஞானிகள் இதற்கான தடுப்பூசியை கண்டுபிடிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார்கள். சில நாடுகள் மருந்துகளை கண்டுபிடித்து விட்டதாக அறிவித்துள்ள போதிலும் அம்மருந்துகள் இன்னுமே பயன்பாட்டுக்கு வரவில்லை. ஆகவே விழிப்புணர்வும் பாதுகாப்புமே அவசியம்.

# மீண்டும் தலைதூக்கிய கொரோனா!




## முடங்கியது திவுலப்பிட்டி பிரதேசம்

## ஆயிரம் பேர் தனிமைப்படுத்தல்; நேற்று வரை தொற்றாளர்கள் 69 பேர் புதிதாக கண்டுபிடிப்பு

## கொவிட் -19 வைரஸ் தொற்று மேலும் பரவாமல் தடுப்பதில் அதிகாரிகள் களத்தில் தீவிரம்

கம்பஹா மாவட்டத்திலுள்ள திவுலப்பிட்டிய, கொரகஸ்முல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 39 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவர் கொவிட் 19 தொற்றுக்கு உள்ளானவராக கடந்த சனியன்று அடையாளம் காணப்பட்டுள்ளார். அதனைத் தொடர்ந்து அவர் வசிக்கும் திவுலப்பிட்டிய மற்றும் அவர் தொழில் புரியும் பிரண்டிக்ஸ் ஆடைத் தொழிற்சாலை அமைந்திருக்கும் மினுவாங்கொடை பிரதேசங்களைஉள்ளடக்கிய பொலிஸ் பிரிவுகளில் நேற்றுமுன்தினம் ஞாயிறன்று காலை முதல் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது. அத்தோடு அதேதினமிரவு வெயாங்கொடை பிரதேசத்திற்கும் ஊரடங்கு விஸ்தரிக்கப்பட்டது.

இப்பெண் காய்ச்சல் காரணமாக கடந்த 30ஆம் திகதி கம்பஹா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வீடு செல்லவிருக்கும் தறுவாயில் கொவிட் 19 தொற்று தொடர்பில் பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். அப்பரிசோதனையில் அப்பெண் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியிருப்பது உறுதியானதோடு தொற்றுநோய்கள் வைத்தியசாலைக்கு (ஐ.டி.எச்) மேலதிக சிகிச்சைக்காக உடனடியாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். அத்தோடு அப்பெண்ணுக்கு சிகிச்சை அளித்த சுகாதாரத் துறை உத்தியோகத்தர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை இப்பெண் பணிபுரியும் தொழிற்சாலையில் இவருடன் பணி புரிந்தவர்கள் அடங்கலாக 400க்கும் மேற்பட்டோர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் அறிவிப்பின்படி ஞாயிறன்று மாலை வரையும் 650 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களில் 20 பேர் யாழ்ப்பாணம் புங்குடுதீவைச் சேர்ந்தவர்களாவர். புங்குடுதீவில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களில் இருவர் இப்பெண் பணியாற்றும் தொழிற்சாலையில் கடமையாற்றுபவர்களாவர்.

இப்பெண் இவ்வைரஸ் தொற்றுக்கு உள்ளானது உறுதிப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து திவுலப்பிட்டிய மற்றும் மினுவாங்கொடை பிரதேசத்தைச் சேர்ந்த 7 கிராமங்களுக்கு மறுஅறிவித்தல் வரும் வரை ஊரடங்குச் சட்ட உத்தரவு விதிக்கப்பட்டுள்ளதோடு அக்கிராமங்களிலிருந்து எவரும் வேறு கிராமங்களுக்குச் செல்லக் கூடாது எனவும் பாதுகாப்பு தரப்பினரால் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இவ்வாறான நிலையில் குறித்த பெண்மணியின் கணவரும் அவரது பிள்ளைகளும் காலி ஹபராதுவ பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் அப்பெண்மணியின் 16 வயது மதிக்கத்தக்க மகளுக்கும் இத்தொற்று உறுதியாகியுள்ளது. அவர் ஒரு பாடசாலை மாணவியுமாவார்.அதனால் அவர் கல்வி கற்கும் பாடசாலையில் இவருடன் கற்கும் மாணவர்களை தனிமைப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த சூழ்நிலையில் கம்பஹா மாவட்டத்தில் எவருக்காவது காய்ச்சல், இருமல் உள்ளிட்ட அறிகுறிகள் காணப்பட்டால் தாமதிக்காது அருகிலுள்ள வைத்தியசாலைக்கு சென்று சிகிச்சை பெற்றுக் கொள்ளுமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதேவேளை அரசாங்கப் பாடசாலைகளுக்கு இரண்டாம் தவணைக்கான விடுமுறையை எதிர்வரும் 09 ஆம் திகதி வழங்க கல்வி அமைச்சு ஏற்கனவே தீர்மானித்திருந்தது. இருப்பினும் திவுலப்பிட்டியவில் கொரோனா தொற்று பதிவாகியுள்ள நிலையில் இவ்விடுமுறையை நான்கு நாட்கள் முன்கூட்டியே நேற்று (05.10.2020) முதல் வழங்கியுள்ளது. இதனைத் தொடர்ந்து கத்தோலிக்க பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. அத்தோடு சகல சர்வதேச மற்றும் தனியார் பாடசாலைகளையும் மேலதிக வகுப்புக்களையும் முன்பள்ளிகளையும் மறுஅறிவித்தல் வரை மூடி விடவும் கல்வி அமைச்சும் மகளிர் விவகார மற்றும் முன்பள்ளிகள் தொடர்பான இராஜாங்க அமைச்சும் நடவடிக்கை எடுத்திருக்கின்றன.



இவை இவ்வாறிருக்க களனி பல்கலைக்கழகம், விக்கிரமாராச்சி ஆயுர்வேத கல்வியகம் என்பவற்றை ஞாயிறன்று முதல் மறுஅறிவித்தல் வரை மூடி விட நடவடிக்கை எடுத்துள்ள பல்கலைக்கழங்கள் மானிய ஆணைக்குழு, மாணவர்களை தங்கும் விடுதிகளில் இருந்து உடனடியாக வெளியேறுமாறும் அறிவுறுத்தியுள்ளது. அத்தோடு மத்ரஸா கல்வி நிலையங்கள், மக்தப்கள், ஞாயிறு அஹதிய்யா பாடசாலைகள் என்பவற்றை மறுஅறிவித்தல் வரும் வரை மூடுவிடுமாறு அறிவித்துள்ள முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம், வக்பு சபையின் வழிகாட்டல்களை பள்ளிவாசல்கள் முழுமையாகப் பின்பற்ற வேண்டும் என்றும் கேட்டுள்ளது.

இதேவேளை திவுலப்பிட்டி, மினுவான்கொடை பிரதேசங்களில் இருந்து வேறு இடங்களுக்கு செல்ல வேண்டாம் எனப் பாதுகாப்பு தரப்பினரும் பொலிஸாரும் சுகாதாரத் துறையினரும் மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ள அதேநேரம், விடுமுறையில் வீடு சென்றுள்ள திவுலப்பிட்டி, மினுவன்கொடை பிரதேசங்களை சேர்ந்தவர்கள் மறுஅறிவித்தல் வரும் வரை கடமைக்கு திரும்ப வேண்டாம் என்று இராணுவம் அறிவித்துள்ளது. இதேபோன்றதொரு வேண்டுகோளை துறைமுக அதிகார சபையும் விடுத்துள்ளது.

தற்போதைய சூழலில் நீர்கொழும்பு , மகர உள்ளிட்ட சகல சிறைச்சாலைகளிலும் கைதிகளை பார்வையிட மறுஅறிவித்தல் வரும் வரை எவரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று சிறைச்சாலைகள் திணைக்களம் ஞாயிறன்று அறிவித்திருக்கின்றது. அத்தோடு கட்டுநாயக்க விமான நிலையத்தின் பார்வையாளர் பிரிவுக்கு பொதுமக்கள் வருகை தருவதையும் விமான நிலையம் மறுஅறிவித்தல் வரும் வரை ஞாயிறன்று முதல் இடைநிறுத்தியுள்ளது.

இவ்வாறான சூழலில் அரச, தனியார் போக்குவரத்து பஸ் வண்டிகள் ஆசனத்திற்கு ஏற்பவே பயணிகளை ஏற்ற வேண்டும் என்றும் ரயில் போக்குவரத்தும் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நேற்று முதல் செயற்பட வேண்டும் என்றும் இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்திருக்கின்றார்.

இதேவேளை குறித்த ஆடைத் தொழிற்சாலை மூடப்பட்டு கிருமித்தொற்று முன்னெடுக்கப்பட்டதோடு திவுலப்பிட்டி மற்றும் மினுவாங்கொட நகர்களிலும் படையினர் இப்பணியை மேற்கொண்டனர்.

இப்பெண் கொரோனா தொற்றுக்கு உள்ளானது வார இறுதி விடுமுறை நாளில் உறுதிப்படுத்தப்பட்ட போதிலும் அதன் பரவுதலைக் கட்டுப்படுத்துவதற்காக இவ்வாறான நடவடிக்கைகள் உடனுக்குடன் பரந்தடிப்படையில் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இப்பெண் இவ்வைரஸ் தொற்றுக்கு எவ்வாறு உள்ளானார் என்பது தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருவதாக இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஷவேந்திர சில்வா குறிப்பிட்டிருக்கின்றார். இது தொடர்பில் புலனாய்வுப் பிரிவினரும், சுகாதாரத் தரப்பினரும் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். இப்பெண்மணி திவுலப்பிட்டில் வசிப்பவர் என்றாலும் மினுவான்கொடைப் பிரதேசத்திலுள்ள ஆடைத்தொழிற்சாலைக்கு அந்நிறுவனத்தின் பஸ் வண்டியிலேயே சென்று வந்துள்ளார். அவரது கணவர் முச்சக்கர வண்டி ஓட்டுனர் என்பது ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

திவுலப்பிட்டியில் குறித்த பெண் கொவிட் 19 தொற்றுக்கு உள்ளானவராக இனம் காணப்பட்டதைத் தொடர்ந்து அவர் பணி புரியும் தொழிற்சாலையில் அவருடன் பணியாற்றிய ஊழியர்கள், அப்பெண்ணுடன் நெருங்கிப் பழகியவர்கள் எனச் சுமார் ஆயிரம் பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதோடு, அவர்களுக்கு கொரோனா தொற்று தொடர்பான பி.ஆர்.சி பரிசோதனைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் திங்களன்று நண்பகல் வரையும் ஆடைத்தொழிற்சாலை ஊழியர்கள் 69 பேர் இவ்வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்களாக அடையாளம் காணப்பட்டிருப்பதாக சுகாதார அமைச்சு உத்தியோகபூர்வமாக அறிவித்திருக்கின்றது.

தற்போது திவுலப்பிட்டியவில் கொரோனா தொற்று பதிவாகியிருப்பது நாட்டில் பெரும் அவதானத்தைப் பெற்றிருக்கின்றது. இவ்வைரஸ் தொற்று 2019 டிசம்பர் இறுதிப் பகுதியில் சீனாவின் உஹான் நகரில் முதன் முதலில் தோற்றம் பெற்றதோடு குறுகிய காலப்பகுதியில் முழு உலகிலும் பரவியது.

கடந்த மார்ச் 10 ஆம் திகதி முதல் தான் இலங்கையில் பதிவாகத் தொடங்கியது. ஆனாலும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் முன்னெடுத்து வரும் நடவடிக்கைகளின் பயனாக கடந்த ஏப்ரல் மாதத்தின் பின்னர் சமூகத்தில் எவரும் இத்தொற்றுக்கு உள்ளாகவில்லை. தனிமைப்படுத்தல் நிலையங்களில் தங்க வைத்து கண்காணிக்கப்படுபவர்கள் மத்தியில்தான் இற்றை வரையும் இத்தொற்று பதிவாகி வந்தது.

இந்த நிலையில் கடந்த ஜுன் மாதம் முதல் கட்டம் கட்டமாக நாட்டில் இயல்பு நிலை ஏற்படுத்தப்பட்டது. விமான நிலையம் மாத்திரம் இன்னும் திறக்கப்படாதுள்ளது. அதனை



விரைவாகத் திறப்பு தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டிருந்து. இவ்வாறான சூழலில்தான் திவுலப்பிட்டியவில் இப்பெண்ணுக்கு இத்தொற்று உறுதியாகியுள்ளது.

ஐக்கிய அமெரிக்கா, இத்தாலி, பிரான்ஸ், பிரேசில் உள்ளிட்ட அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்கு கூட பெரும் சவாலாக விளங்கிக் கொண்டிருக்கும் இத்தொற்றை இலங்கை வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தியிருந்தது. முழு உலகிலும் மூன்றரை கோடிக்கும் மேற்பட்டோரைப் பாதித்துள்ள இவ்வைரஸ் தொற்று காரணமாக 10 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். 2.50 கோடி பேர் குணமடைந்துள்ளனர்.

இலங்கை சுகாதார அமைச்சின் தரவுகளின்படி, எமது நாட்டில் இற்றைவரையும் 3400 பேர் இவ்வைரஸ் தொற்று உள்ளாகியுள்ளனர். அவர்களில் 13 பேர் உயிரிழந்துள்ளனர். 3259 பேர் குணமடைந்துள்ளனர்.

இந்நோயைக் கட்டுப்படுத்த முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளின் பயனாகவும் மக்கள் அளித்து வரும் ஒத்துழைப்பின் விளைவாகவும் இந்த அடைவை அடைந்து கொள்ள முடிந்தது. இந்நாட்டில் இத்தொற்றைக் கட்டுப்படுத்த முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளை உலக சுகாதார ஸ்தாபனம் உட்பட பல நாடுகளும் சர்வதேச அமைப்புக்களும் இலங்கையைப் பாராட்டியுள்ளன.

இந்நோயைத் தவிர்த்துக் கொள்ளவோ கட்டப்படுத்திக் கொள்ளவோ இற்றைவரையும் தடுப்பு மருந்துகள் பயன்பாட்டுக்கு வரவில்லை. அதனால் இந்நோயைத் தவிர்த்துக் கொள்வதற்கு முகக்கவசம் அணிதல், கைகழுவுதல், சமூக இடைவெளியைப் பேணுதல் உள்ளிட்ட அடிப்படை சுகாதார வசதிகளைப் பின்பற்றுவதே பெரிதும் உதவக் கூடியதாக விளங்குகின்றது. ஆகவே இவற்றைத் தொடர்ந்தும் கடைப்பிடிப்பது இன்றியமையாதது. அதனால் கொரோனா தொடர்பில் கவனயீனமாக நடந்து கொள்ள வேண்டாமென இராணுவ தளபதி சவிந்திர சில்வாவும், சுகாதார அமைச்சின் தொற்று நோய்கள் தடுப்பு பிரிவு தலைவர் டொக்டர் சுதத் சமரவீரவும் அடிக்கடி மக்களை அறிவூட்டி வருகின்றனர்.

இருந்தும் அண்மைக் காலமாக மக்களில் குறிப்பிடத்தக்களவானோர் முகக்கவசம் அணிவதையோ கைகழுவுவதையோ சமூக இடைவெளியைப் பேணுவதையோ கடைப்பிடிக்காதுள்ளனர். மக்களின் அலட்சியப் போக்கு பெரிதும் அதிகரித்துள்ளது. இந்நிலைமை ஏற்பட்ட சில வாரங்களுக்குள்தான் இத்தொற்று பதிவாகி இருக்கிறது. அதனால் கொவிட் 19 தொற்று குறித்து தொடர்ந்தும் விழிப்புணர்வுடனும் முன்னெச்சரிக்கையுடனும் செயற்பட வேண்டியது காலத்தின் தவிர்க்க முடியாத அவசியத் தேவையாகும்.



மர்லின் மரிக்கார்

# மருத்துவமனையென்ற பாடசாலையில் பாடங்களைக் கற்றுக் கொண்ட ட்ரம்ப்

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்புக்கு கொரோனா ஏற்பட்டதையடுத்து ஜனாதிபதித் தேர்தல் ஒத்திவைக்கப்படுமா என்ற கேள்வி எழுந்துள்ளது. அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் அடுத்த மாதம் 3இல் நடைபெறவுள்ளது. இதற்காக குடியரசுக் கட்சி சார்பில் ட்ரம்ப் மீண்டும் போட்டியிடுகிறார். ஜனநாயக கட்சி சார்பில் ஜோ பிடன் போட்டியிடுகிறார்.

தற்போது ட்ரம்புக்கு கொரோனா பாதிப்பு ஏற்பட்டுள்ள நிலையில், ஜனாதிபதித் தேர்தல் தள்ளி வைக்கப்பட வாய்ப்புள்ளதாகவும் ட்ரம்பிற்கு பதிலாக வேறு ஒருவர் குடியரசு கட்சி வேட்பாளராக அறிவிக்கப்பட வாய்ப்பு உள்ளதாகவும் செய்திகள் வெளியாகி வருகின்றன. ஆனால் அதற்கான வாய்ப்பு மிகவும் குறைவு என்றும், அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் வரலாற்றில் இதுவரை தேர்தல் தள்ளி வைக்கப்பட்டதும் இல்லை; வேட்பாளர் மாற்றப்பட்டதும் இல்லை எனவும் தகவல்கள் கூறுகின்றன.

இதேவேளை மருத்துவமனை எனும் உண்மையான பாடசாலைக்கு வந்து கொரோனா வைரஸ் பற்றி அதிகமான பாடங்களைக் கற்றுக் கொண்டதாக ட்ரம்ப் கூறியுள்ளார்.

ட்ரம்ப் மற்றும் அவரின் மனைவி மெலனியா ட்ரம்ப் இருவருக்கும் கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது. இதையடுத்து, இருவரும் தனிமைப்படுத்திக் கொண்ட நிலையில், வால்டர்ரீட் தேசிய இராணுவ மருத்துவமனையில் ட்ரம்ப் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக் கொண்டே, அங்கு இருந்தவாறே அலுவலகப் பணிகளை மேற்கொண்ட அவர், நேற்றுமுன்தினம் மருத்துவமனையிலிருந்து திடீரென வெளியே காரில் வந்தார்.



காருக்குள் முகக்கவசம் அணிந்தவாறு மருத்துவமனையின் வெளியே நின்றிருந்த தனது ஆதரவாளர்களை நோக்கி கையசைத்தவாறு சென்றார். மருத்துவமனையில் இருந்து புறப்படும் முன் அவர் வெளியிட்ட வீடியோவில், என் நாட்டு தேசப்பற்று மிக்க மக்களுக்கும், நீண்டநேரமாக வீதியில் நின்று இருக்கும் மக்களுக்கும் நான் சிறிய வியப்பு அளிக்கும் வகையில் அவர்களை சந்திக்கப் போகிறேன்' எனத் தெரிவித்திருந்தார். வெளியே வந்த அவருக்கு வீதியின் இருபுறங்களிலும் மக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். மருத்துவமனையில் இருந்து வெளியே வந்த பிறகு அவர் வெளியிட்ட வீடியோவில், எனக்கு இது வித்தியாசமான பயணமாக அமைந்திருந்தது.

மருத்துவமனை எனும் உண்மையான பாடசாலைக்கு வந்து கொரோனா வைரஸ் பற்றி அதிகமான பாடங்களைக் கற்றுக் கொண்டேன், புரிந்து கொண்டேன். என்னைக் கவனித்துக் கொண்ட மருத்துவர்களின் பணி அளப்பரியது' எனக் கூறினார்.

அவர் தற்போது காய்ச்சல் குணமடைந்துள்ளதாகவும், உடல் உள்ளுறுப்பு இயக்கங்கள் சீராக இருப்பதாகவும் மருத்துவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அவருடைய சிறுநீரக மற்றும் கல்லீரல் செயல்பாடுகள் நன்றாக உள்ளன. அவருக்கு இலேசான கொரோனா அறிகுறிகள் மட்டுமே உள்ளன என்று மருத்துவமனை நிர்வாகம் அறிவித்துள்ளது.டிரம்ப் மனைவி மெலெனியா வெள்ளைமாளிகையில் தனிமைப்படுத்தப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

# தேர்தல் கலந்துரையாடல்

**ஓமந்தை விஷேட நிருபர்**

'அப்ரியல்' நிறுவனத்தின் ஏழாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு ஜனநாயகத்தை பாதுகாக்கும் மற்றும் சுதந்திரமானதும் நியாயமான தேர்தலுக்கான இளையதலைமுறைக்கான செயற்பாடுகள் எனும் தலைப்பில் ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரையாடல் நேற்று காலை வவுனியா தவசிகுளத்திலுள்ள அலுவலகத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் முதன்மை அதிதியாக தேசிய தேர்தல் ஆணையாளர் மகிந்ததேசப்பிரிய கலந்துகொண்டதுடன், தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர் பேராசிரியர் ரட்ணஜீவன் கூல், முன்னாள் பிரதி தேர்தல்கள் ஆணையாளர் எம்.முகமட், மனித உரிமைகள் செயற்பாட்டாளர் ருக்கி பெர்ணான்டோ மற்றும் வன்னி மாவட்டங்களை சேர்ந்த உதவித் தேர்தல்கள் ஆணையாளர்கள், இளைஞர் யுவதிகள் கலந்துகொண்டனர்.



குறித்த கலந்துரையாடலில் தேர்தல் முறைமை மற்றும் தேர்தல் சட்டங்கள், கண்காணிப்பு போன்ற விடயங்கள் தொடர்பாக திறந்த கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட்டதுடன், இளைஞர்களின் கேள்விகளிற்கும், சந்தேகங்களிற்கும் தேர்தல் ஆணையாளர் மற்றும் அதிகாரிகளால் பதில்கள் வழங்கப்பட்டன.

# சட்டவிரோத செயற்பாடுகளை ஜனாதிபதி கட்டுப்படுத்த வேண்டும்

**கோப்பாய் நிருபர்**



வட மாகாணத்தில் இடம்பெற்ற பெரும் சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கு நாட்டின் ஜனாதிபதி மற்றும் பிரதமர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என விசுவமடு பகுதியில் கை வெட்டப்பட்ட நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் வைத்து பிளாஸ்டிக் சிகிச்சை மூலம் கை மீண்டும் பொருத்தப்பட்ட நபர் உருக்கமான வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்தில் சட்டவிரோத செயற்பாடுகள் தலைதூக்கி காணப்படும் நிலையில் அவ்வாறானவர்களால் தான் எனக்கு இந்நிலை ஏற்பட்டது. இந்த நிலை என்னுடன் முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும். இந்த நிலை எவருக்கும் வரக்கூடாது. இந்த செயற்பாடுகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர அனைவரும் செயற்பட வேண்டும்.

ஜனாதிபதியும் பிரதமரும் குறித்த விடயம் தொடர்பில் அக்கறை செலுத்தி பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும். எனக்கு மறுவாழ்வு அளித்த வைத்தியர்களுக்கு நன்றி தெரிவிக்கிறேன்.

## நுரைச்சோலை அனல்மின்... 03ஆம் பக்கத் தொடர்

சூரிய வலுமின்சக்தி, காற்று மற்றும் நீர் மின்சக்தி உற்பத்தி திட்ட ராஜாங்க அமைச்சர் துமிந்த திஸாநாயக்கவும் இவ் விஜயத்தின் போது கலந்துகொண்டார்.

கடந்த ஆகஸ்ட் மாதம் 11 ஆம் திகதி ஏற்பட்ட திடீர் மின்துண்டிப்பு காரணமாக நுரைச்சோலை மின்னுற்பத்தி நிலையத்திற்கு பாதிப்பை ஏற்படுத்திய விதம் மின்னுற்பத்தி தொகுதியாக அவ்வாறான நிலைமைக்கு முகங்கொடுக்க எடுத்துள்ள தொழில்நுட்ப பாதுகாப்பு முறைகள் தொடர்பாக அமைச்சர் மின்னுற்பத்தி நிலைய அதிகாரிகளிடம் விபரங்களை கேட்டறிந்துகொண்டார்.

பாரிய மின்னுற்பத்தி ஆதாரங்கள் அனைத்தும் தேசிய மின்னுற்பத்தி தொகுதியில் இணைந்துள்ள நிலைமையின் கீழ் நுரைச்சோலை தொகுதியின் 4 வது மின்னுற்பத்தி நிலையத்தின் நிர்மாண நடவடிக்கையில் ஏற்படக்கூடிய சமூக மற்றும் சுற்றாடல் பாதிப்பு தொடர்பாகவும் அமைச்சர் டலஸ் அழகப்பெரும நீண்டகலந்துரையாடலொன்றை நடத்தினார்.

## மூன்றாவது தடவை... 03ஆம் பக்கத் தொடர்

வீட்டுக்கு வந்த பின்னர் மீண்டும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

அவரது தாயாருடன் அவரது வீட்டில் வசித்தபோது மீண்டும் வைரஸ் தொற்று அறிகுறிகள் தென்பட்டதால் கடந்த மாம் 17ம் திகதி சிலாபம் அஸ்பத்தியில் கொரோனா வைரஸ் சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அங்கு மேற்கொள்ளப்பட்டுள்ள பீ.சி.ஆர் பரிசோதனையின் போது அவருக்கு மீண்டும் வைரஸ் தொற்று உறுதிப்படுத்தியுள்ளது. அதனை யடுத்து அவர் இரணைவில கொரோனா வைரஸ் சிகிச்சை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பின்னர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளார். அதன் பின்பு அவர் வீட்டில் தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்

அதனையடுத்து கடந்த வெள்ளிக்கிழமை அவர் சுகவீனமுற்ற நிலையில் சிலாபம் ஆஸ்பத்திரி கொரோனா வைரஸ் பிரிவில அனுமதிக்கப்பட்டுள்ளார். அங்கு மீண்டும் பிசிஆர் பரிசோதனை மேற்கொண்டபோது அவர் மீண்டும் வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளமை இனம்காணப்பட்டுள்ளதாகவும் வட மேல் மாகாண சுகாதார பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.(ஸ)

## எதிரணியின் குற்றச்சாட்டுக்கு... 03ஆம் பக்கத் தொடர்

ஒழுக்கக் கட்டுப்பாடு போன்ற நடவடிக்கைகளே மேற்கொள்ளப்பட்டன. சாதாரணமாக அரச சேவையாளர்கள் தொடர்பான அவ்வாறான நடவடிக்கைகளை அரச சேவைகள் ஆணைக்குழுவே மேற்கொள்கின்றது.

கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவை நியமித்ததன் மூலம் அரச சேவை ஆணைக்குழுவினால் மேற்கொண்ட பணிகளை அதே போன்ற இன்னுமொரு ஆணைக்குழு நிறைவேற்றியது மாத்திரமேயாகும்.

அரசுரிமையின் கீழ் உள்ள நிறுவனங்களை கணக்காய்வாளர் நாயகத்தின் கீழ் இருந்து 20 ஆவது திருத்தத்தின் கீழ் நீக்கப்படுமென தவறான பிரசாரம் மேற்கொள்ளப்படுகிறது.

50 வீதத்துக்கும் அதிகமான அரசுக்கு சொந்தமான நிறுவனங்கள் கணக்காய்வாளர் நாயகத்தின் கண்காணிப்பின் கீழிலிருந்து நீக்கப்படுமென கூறப்படுவது முற்றிலும் பொய்யாகும்.

20ஆவது திருத்தத்தால் மேற்கொள்ளப்படுவது கணக்காய்வாளர் நாயகம் தொடர்பான பிரிவிற்கு 19 வது திருத்தத்தால் ஏற்படுத்திய மாற்றங்களை நீக்கி 19 வது திருத்தத்துக்கு முன்னர் அரசியலமைப்பில் காணப்பட்ட பிரிவுகளை அதேபோன்று மீண்டும் நிறுவுவதாகும்.

அரசியலமைப்பின் இந்த பிரிவு பற்றி அநேகமானோர் புரிந்திருக்கவில்லை என்னும் எண்ணத்தில் எதிர்க்கட்சியினர் மக்களை திசை திருப்பும் நோக்கில் எவ்வித பொறுப்புமின்றி பொய்களை கூறுகின்றார்கள்.

## ஜனாதிபதி ஆணைக்குழுவில்...

ஆஜராகிய முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

நேற்று முற்பகல் ஆணைக்குழுவில் ஆஜராகியிருந்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சுமார் 7 மணித்தியாலம் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

வாக்குமூலம் வழங்கிய பின் ஊடகவியலாளருக்கு கருத்து தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி, மேற்படி தாக்குதல் சம்பவம் தொடர்பில் தாம் மிகுந்த வேதனை அடைவதாகவும் விசாரணைகளை நடத்தும் ஆணைக்குழுவுக்கு தமது பூரண ஆதரவை வழங்குவதாகவும் தெரிவித்துள்ளார்.

மேற்படி ஜனாதிபதி ஆணைக்குழுவில் வாக்குமூலம் ஒன்றை பெற்றுக் கொள்வதற்காக கடந்த 22 ஆம் திகதி விடுக்கப்பட்ட அறிவித்தலுக்கு இணங்கவே நேற்றைய தினம் முன்னாள் ஜனாதிபதி மேற்படி ஆணைக்குழுவில் ஆஜராகியிருந்தார்.

ஏற்கனவே முன்னாள் ஜனாதிபதி இடம் வீட்டுக்குச் சென்றே வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் முதல்தடவையாக முன்னாள் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் ஆஜராகி சாட்சியம் அளித்துள்ளார்.

நேற்றைய தினம் முன்னாள் ஜனாதிபதியுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் ராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜயசேகரவும் ஆணைக்குழு வளாகத்திற்கு சென்றிருந்ததுடன் கத்தோலிக்க மத குருமார் சிலரும் அங்கு காணப்பட்டனர்.(ஸ)முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால

## புலமைப்பரிசில், உயர்தரப் பரீட்சை...

கொரோனா வைரஸ் தாம் காரணமாக நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து பாடசாலைகளுக்கும் 2 ஆம் தவணை விடுமுறை அளிக்கப்பட்டதுடன் கொழும்பு மாவட்டத்திலும் பிரத்தியேக வகுப்புகளுக்கு கல்வி அமைச்சு தடை விதித்திருந்தது.

இந்நிலையில் இது தொடர்பாக இறுதி முடிவு மற்றும் பரீட்சைகளுக்கான புதிய திகதி குறித்து கலந்துரையாடி முடிவு செய்யப்படும் என கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை ஒக்டோபர் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் அதே நேரத்தில் க.பொ.த. உயர்தர பரீட்சை ஒக்டோபர் 12 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் நவம்பர் 06 வரை நடைபெற திட்டமிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் நேற்று நடைபெற்ற ஊடக மாநாட்டில் கருத்துத் தெரிவித்த அமைச்சர்,11 ஆம் திகதி நடைபெறும் புலமைப்பரிசில் பரீட்சையில் 3,31,694 மாணவர்களும் உயர்தரப் பரீட்சையில் 3,62,824 மாணவர்களும் தோற்ற உள்ளனர்.

பரீட்சை ஏற்கெனவே தாமதிக்கப்பட்டது.இந்த நிலையில் அவர்கள் 12 மாதங்களாக கஷ்டப்பட்டு தயாராகியுள்ளனர்.பரீட்சை தொடர்பில் பெற்றோரும் மாணவர்களும் கரிசனையாக உள்ளனர்.

எந்த முடிவு எடுத்டதாலும் மாணவர்களின் சுகாதார பாதுகாப்பு குறித்து சிந்தித்தே செயற்பட வேண்டும். பரீட்சை நடத்துவதாக இருந்தால் வௌ'ளிக்கிழமைக்கு முன்னர் சகல மாணவர்களுக்கும் விண்ணப்பமொன்றை வழங்கி முழு தகவலும் திரட்ட வேண்டும். முகக் கவசம் ,கைகழுவுதல் ,சமூக இடைவௌி என்பவற்றை கண்டிப்பாக பின்பற்ற வேண்டும்.

துரிதமாக பரீட்சை தொடர்பில் இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.(பா)

## எச்சந்தர்ப்பத்திலும் நான்...

திருமதி பி.எம். எஸ். சார்ல்ஸையே பாராட்டி பேசியதாகவும் தனது முழுமையான உரையின் ஒருசில வார்த்தைகளை பயன்படுத்தி திரிவுபடுத்தப்பட்ட செய்தியைவெளியிட்டுள்ளதாகவும் இது தொடர்பில் தான் சட்ட ஆலோசனை பெற்றுவருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

பாதுகாப்புச் செயலாளர் ஆற்றிய உரை தொடர்பில் ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும் விஷேட செய்தியாளர் மாநாடு கொழும்பிலுள்ள பாதுகாப்பு அமைச்சில் நேற்று இடம்பெற்றது.

இந்த செய்தியாளர் மாநாட்டில் பாதுகாப்புச் செயலாளர் மேஜர் ஜெனரல் கமல் குணரட்ன மேலும் விளக்கமளிக்கையில் :

வவுனியா மாவட்டசெயலகத்தின் புதியகேட்போர் கூடம் திறப்புவிழா 2020 ஒக்டோபர் மாதம் 01ஆம் திகதிநடைபெற்றது. உள்ளகப் பாதுகாப்பு, உள்நாட்டுஅலுவல்கள் மற்றும் அனர்த்தமுகாமைத்துவ இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்ற இந்த அரச நிகழ்வில் குறித்த அமைச்சின் செயலாளர் என்ற வகையில் நான் கலந்துகொண்டதுடன் அந்த மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் பிரமுகர்களும் அழைக்கப்பட்டிருந்தனர்.

இந்தநிகழ்வின் நிகழ்ச்சி நிரலில் எனக்கும் உரை வழங்கப்பட்டிருந்தது. இங்குஉரையாற்றிய நான், மீள்குடியேற்ற நடவடிக்கைகளுக்கு தகுதிகாண் அதிகாரியாக இருந்தபோது வடமாகாணத்தின் தற்போதைய ஆளுநர் திருமதி சார்ள்ஸ் வவுனியா அரசாங்க அதிபராக இருந்து ஆற்றிய சேவைகளை பலவிதத்தில் பாராட்டினேன். அத்துடன் அப்போதைய புனர்வாழ்வு அமைச்சராக ரிஷாட் பதியுதீனும்; இருந்து சேவையாற்றினர் என்று ஒருவார்த்தையே கூறியிருந்தேன். எனது உரையின் முழுவதையும் ஒளிபரப்பாமல் ஒருசில வார்த்தைகளை மாத்திரம் எடுத்து அவற்றை சிலர் திட்டமிட்டஅடிப்படையில் திரிவுபடுத்தி செய்தியாக வெளியிட்டுள்ளனர். பின்னர் அது சமூக ஊடகங்கள் ஊடாக தவறான முறையில் பிரசாரம் செய்யப்பட்டு வருகின்றது.

திருமதிசார்ள்ஸ் உண்மையில் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றும் நடவடிக்கையில் ஈடுப்பட்டமை நாங்கள் அறிவோம். அதனாலேயே அவரது சேவையை எனது உரையின் போது பாராட்டி பேசினேன். மாறாக பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனை பாராட்டிபேசும் எந்தவொரு தேவையும் எனக்கு இல்லை என்று பாதுகாப்புச் செயலாளர் திட்டவட்டமாக தெரிவித்தார்.

பாதுகாப்புச் செயலாளர் வவுனியா நிகழ்வின் போது ஆற்றியஉரையின் முழுமையான காணொலி இந்தசெய்தியாளர் மாநாட்டின் போது காண்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## நாட்டில் அவசர நிலைமை...

நேற்று முன் தினம் பி. சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதுடன் நேற்றைய தினம் அதன் அறிக்கை வெளியிடப்பட்டதையடுத்து மேற்படி 69 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று புதிதாக இனங்காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. அதற்கிணங்க இனங் காணப்பட்டுள்ள கொரோனா வைரஸ் தொற்று நோயாளிகளுடன் நெருங்கய தொடர்பு உடைய மேலும் நபர்களின் தகவல்கள் திரட்டப்பட்டு வருவதாகவும் அவர் அமைச்சு தெரிவித்தது.

நேற்று முன்தினம் திவுலப்பிட்டி பிரதேசத்தில் 39 வயதான பெண்மணி கொரோனா வைரஸ் தொற்று நோயாளியாக இனங்காணப்பட்டார். ஐ. டி. எச். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பின் அந்த நோயாளியின் மகளான 16 வயது யுவதியும் வைரஸ் தொற்றககு உள்ளாகியிருந்தமை தெரியவந்துள்ளது. அதற்கிணங்க தற்போது கம்பஹா மாவட்டத்தில் திவுலப்பிட்டிய, மினுவாங்கொடை, வெயாங்கொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் மறு அறிவித்தல் வரை ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அது தொடர்பில் நேற்று மதியம் சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் சமூகத்தில் மேலும் வைரஸ் தொற்று நோயாளிகள் இருக்கலாம் என்றும் அதனைக் கட்டுப்படுத்துவதற்கு சகல நடவடிக்கைகளும் மேற்கொண்டுள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது மூன்று பிரதேச செயலகப் பிரிவுகளில் மாத்திரமே ஊரடங்குச்சட்டம் அமுலில் உள்ள நிலையில் மாத்திரமே நாட்டில் ஏனைய பிரதேசங்களில் வசிக்கும் மக்கள் சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றுவது அவசியம் என்றும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. மக்கள் ஒன்றுகூடும் இடத்தில் தரித்திருக்க வேண்டாம் என்றும் பதில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் எஸ். ஸ்ரீதரன் தெரிவித்துள்ளார்.

மக்கள் அனைவரும் வீடுகளில் இருந்து வெளியேறும் போது முகக் கவசம்அணிவதை உறுதி செய்துகொளள வேண்டும் என்றும் முகத்தில் கை வைப்பதை தவிர்த்துக் கொள்ளுமாறும் தொடர்ச்சியாகக் கைகளைக் கழுவுமாறும் அவர் தெரிவித்துள்ளார். வைரஸ் தொற்று நோயாளி ஒருவரிடமிருந்து மற்றுமொரு நபருக்கு தொற்றுவதைத் தடுக்கும் வகையில் முறையாக சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றுவது அவசியம். அதேவேளை முதியவர்களைப் பதாதுகாப்பதும் முக்கியமாகும். அதற்கிணங்க திறந்த வெளியில் செயற்பாடுகளை முடிந்தளவு குறைத்துக் கொள்ளுதல் சிறந்தது என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். அதேவேளை வைரஸ் தொற்றுக்குள்ளான 16 வயதான மாணவி கல்வி கற்ற பாடசாலையில் 11ம் வகுப்பு மாணவர்கள் அனைத்து ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் அனைவருக்கும் நேற்று பி. சி ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது என திவுலபிட்டிய நிர்வாக பொது சுகாதார பரிசோதகர் எச். ஏ. யூ. சி. குலதிலக்க தெரிவித்துள்ளார். அத்துடன் மேற்படி மாணவி கல்வி கற்ற திவுலபிட்டிய பிரதேசத்தில் உள்ள பாடசாலை மாணவர்கள் 1500 பேர் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன் தினம் இரவு அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் ஒலிபெருக்கி மூலம் குறித்த மாணவர்களுக்கு அது அறிவிக்கப்பட்டாகவும், சுகாதார பரிசோதகர் தெரிவித்தார். மேலும் மேற்படி ஆடைத்தொழிற்சாலையில் தொழில் புரிந்து வீடுகளுக்குச் சென்றுள்ள சிலரும் உள்ளனர். அதனால் நாடளாவிய ரீதியிலுள்ள சுகாதார பரிசோதகர் அது தொடர்பில் தகவல்களைத்திரட்டி வருவதுடன் அவர்களை இனங்கண்டு தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கி வருகின்றனர்.

இதே வேளை நாட்டின் ஏனைய பகுதிகளிலும் ஊரடங்கு அமுல் படுத்தப்படலாம் என பரவலாக பேசப்பட்டாலும் அரச தரப்பில் எந்த அறிவிப்பும் விடுக்கப்படவில்லை. ஆனால் மக்கள் பொருட்கள் வாங்குவதற்கு முண்டியடிப்பதாக அறிய வருகிறது.

## 2 தாய்மாரும் தனது... 03ஆம் பக்கத் தொடர்

நா தழுதழுத்த குரலில் நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்ததையடுத்தே நீதவான் டி.என்.ஏ. பரிசோனைக்கு உத்தரவு பிறப்பித்ததும் குறிப்பிடத்தக்கது. இந்த விசாரணையின்போது குறித்த இளைஞனும் சமூகமளித்திருந்தார்.

இந்நிகழ்வைக் கண்டுகளிக்க பெருந்திரளான மக்களும் நீதிமன்ற வளாகத்தில் காணப்பட்டனர்.

## அத்தியாவசிய பொருட்கள்... 03ஆம் பக்கத் தொடர்

பெண்ணுடன் தொடர்புகளை பேணிய பெரும்பாலானோர் தனிமைப்படுத்தப்பட்டு, பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையிலேயே கம்பஹா வெயாங்கொட, திவுலப்பிட்டிய, மினுவாங்கொட பகுதியில் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தேவை ஏற்படின் ஏனைய பகுதிகளிலும் ஊரடங்கு அமுல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (பா)

## போலிப் பிரசாரங்களை...

ஊடகப் பிரிவு அல்லது அரசாங்க தகவல் திணைக்களத்தினால் வெளியிடப்படுகின்ற விசேட ஊடக அறிக்கை இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களில் மாத்திரம் வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## ரூபவாஹினி செய்தி வாசிப்பாளர்...

தொழுகையின் பின்னர் சம்மாந்துறை கல்லரிச்சல் மஸ்ஜிதுல் ஸலாம் பள்ளிவாசல் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இதில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

## மாணவர்கள் 1500 பேர்...

தொடர்புகளை பேணிய மேலும் 400 ற்கு மேற்பட்டோருக்கு நேற்று பீ.சீ.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இந்நிலையில் தற்போது 69 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக, இராணுவத்தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 3471 அதிகரித்துள்ளது. இதில் 200பேர், வைத்தியசாலையில் தொடர்ந்து சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.

## ரிசாத் பதியுதீனின் ஆதரவை பெற...

எந்த முன்னெடுப்பும் எடுக்கப்படவில்லை என்றார்.

இது தொடர்பில் நேற்று நடைபெற்ற பொதுஜன பெரமுன செயலாளர் சாகர காரியவசம் எம்.பி , ஜனாதிபதியோ பிரதமரோ ராஜபக்ஷ குடும்பத்தினரோ ரிசாத் பதியுதீனின் விடுதலை தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

அரசாங்கத்துடன் இணைக்க எந்த உடன்பாடும் எடுக்கப்படவில்லை.

இது தொடர்பில் எந்த பேச்சுவார்த்தையும் நடத்தப்படவில்லை. பொய்யான வதந்தியே பரப்படுகிறது என்றார்.

## கைதிகளை பார்வையிடுவது...

இனங்காணப்பட்டுள்ள நிலையில் இத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அதற்கிணங்க மறு அறிவித்தல் வரை சிறைக்கைத்திகளை பார்வையிடுவது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கொரோன தொற்று பரவலாக காணப்பட்ட காலப்பகுதியிலும் இவ்வாறு றைக்கைதிகளைப் பார்வையிடுவதற்கு வருபவர்களுக்கான அனுமதி நிறுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## தகவல் மறைக்கும் நபர்களுக்கு...

கள் மற்றும் நிறுவனங்களுக்கு வருகை தந்து தகவல் திரட்டுகின்றனர்.

இந்த சமயங்களில் தகவல்கள் வழங்காமல் மறைத்தால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க நேரிடும். தமது வீடுகளில் உள்ளவர்கள், வீடுவந்த சென்றோர்,பழகியோர், போன்ற அனைத்து தகவல்களையும் வழங்க வேண்டும். யாராவது தகவல் வழங்காமல் மறைத்து பின்னர் அது பற்றிய உண்மை கிடைத்தால் கைது செய்து சிறையில் அடைக்க நேரிடும். எனவே சகலரும் சுகாதார தரப்பினருக்கும் பொலிஸாருக்கும் ஒத்துழைப்ப வழங்க வேண்டும். சமூகத்தில் இது பரவுவதை தடுக்க பங்களிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார். (பா)

## 20 ஆவது திருத்தம் மீதான ...

நீதிபதிகள் குழு முன்னிலையில் கடந்த 29 ஆம் திகதி பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த மனுக்கள் மீதான சமர்ப்பிப்பு அனைத்தும் கடந்த வெள்ளிக்கிழமைக்குள் முடிவடைய இருந்தாலும், மேலதிக சமர்ப்பிப்புகளை முன்வைக்க சட்டமா அதிபருக்கு நீதிமன்றம் கால அவகாசம் வழங்கியது.

அதன்படி நேற்று திங்கட்கிழமை அவர் மேலதிக சமர்ப்பிப்புகளை முன்வைத்திருந்தார் .

20 ஆவது திருத்த சட்ட நகல் கடந்த மாதம் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.இதற்கு எதிராக வழக்கு தொடர ஒரு வார காலம் அவகாசம் வழங்கப்பட்டது.இந்த நிலையில் 39 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

நீதிமன்ற தீர்ப்பு 12 ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதிக்கும் சபாநாயகருக்கும் அறிவிக்கப்பட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.(பா)

## எதிர்வரும் 72 மணிநேரம்...

கடந்த 7 நாட்களுக்குள் வருகை தந்த பலர் இருக்கலாம்.

அத்துடன் ஊழியர்களை சந்திப்பதற்காக இலங்கையின் பல்வேறு பாகங்களில் இருந்து மக்கள் வருகை தந்துள்ளதாக அறிய கிடைத்துள்ளது. எனவே, இவர்கள் அனைவருக்கும் பி.சி.ஆர்.பரிசோதனைகளை மேற்கொள்ளும் வரையில் எவ்வாறான நிலைமை ஏற்படும் என்று கூற முடியாது.

அத்தியவசிய தேவையின்றி வெளியே செல்லுவதனை பொதுமக்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும். எதிர்வரும் 72 மணித்தியலாங்களுக்குள் நாங்கள் இதனை இனங்கண்டு கொள்ளும் வரையில், யாரேனும் இப்பகுதிகளுக்கு வருகை தந்திருந்தால் அதனை ஒருபோதும் மறைக்க வேண்டாம்” என அவர் வலியுறுத்தியுள்ளார்.

காய்ச்சல் இருந்தால் கட்டாயம் பீசீஆர் பரிசோதனைக்குமுகங்கொடுக்குமாறும் அவர் கம்பஹ மாவட்ட மக்களிடம் கோரியுள்ளார்.

திவுலபிடிய பகுதி பெண் ஒருவருக்கு கொரோனா தொற்றியதையடுத்து அவர் பணியாற்றிய தொழிற்சாலை மூடப்பட்டுள்ளது.அங்கு பணியாற்றும் பலருக்கு கொரோனா தொற்றியது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதோடு அவரின் மகளுக்கும் கொரோனா தொற்றியது உறுதியாகியுள்ளது.

கம்பஹ மாவட்டத்தில் பல கிராமங்கள் மூடப்பட்டுள்ளதோடு சில பகுதிகளில் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது தெரிந்ததே.(பா)

தினகரன்

வடக்கின் உதயம்

Vadakkin Uthayam




# மக்கள் விழிப்பாக செயற்பட வேண்டும்

## யாழ். போதனா வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர்

**பருத்தித்துறை விசேட நிருபர்**

சமூகத்தில் கொரோனா தொற்று பரவுவதை தடுப்பதற்கு பொதுமக்கள் விழிப்பாக செயற்பட வேண்டியது அவசியம் என யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் சி. யமுனாநந்தா தெரிவித்தார்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா தொற்று நிலைமை தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். மேலும் கூறுகையில்,

இலங்கையில் கொரோனா தொற்றானது மீண்டும் சமூகமட்டத்தில் பரவும் ஏதுநிலை உருவாகியுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. இது பொதுமக்கள் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டிய காலத்தினை எடுத்துக்காட்டுகின்றது.



அதாவது யாழ்.மாவட்டத்தினை பொறுத்தவரை சமூக தொற்றினை கட்டுப்படுத்துவதற்கு நாம் அனைவரும் முகக் கவசங்கள் அணிவது அவசியம். அடுத்ததாக சமூக இடைவெளி மிகவும் அவசியமாகும். இவை இரண்டையும் தவிர்த்து கட்டாயமாக கைகளை கழுவுதல் வேண்டும். கண்ட இடங்களில் கை தொடுதல் கூடாது. பயணங்கள் செய்துவிட்டு வீடுகளுக்கு வரும் போது தமது கைகளை சுத்தமாக கழுவிய பின்னரே வீட்டுக்குள் செல்ல வேண்டும்.

இத்தகைய பாதுகாப்பு நடவடிக்கைகளை செயற்படுத்துவதன் மூலம் யாழ்.மாவட்டத்தில் சமூகத்தொற்று ஏற்படுவதனை கட்டுப்படுத்த முடியும். அடுத்ததாக அநாவசியமாக வீதிகளில் பயணிப்பதை தவிர்த்தல் வேண்டும்.

மேலும் மக்கள் ஒன்றுகூடும் நிகழ்வுகளை தற்காலிகமாக இடை நிறுத்த வேண்டும். கொரோனா தொற்று மீண்டும் ஏற்படுகின்றது என்ற அச்சத்தினால் மக்கள் எல்லோரும் பொது இடங்களில் ஒன்று கூடுகிறார்கள். அதாவது வியாபார நிலையங்களில் பொருட்களை வாங்குவதற்காக முண்டியடிக்கிறார்கள். இது மிகவும் தவறான விடயமாகும் என்றார்.

# துணுக்காய் செயலகத்தில் அதிக பதவி வெற்றிடங்கள்

**பரந்தன் குறூப் நிருபர்**

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச செயலகத்தில் பதவிகளுக்கான வெற்றிடங்கள் காணப்படுவதாக பிரதேச செயலர் து.லதுமீரா தெரிவித்தார்.

பதவி வெற்றிடங்களை பூர்த்தி செய்தால் தம்மால் கூடுதலான பணிகளை வினைத்திறனாக மேற்கொள்ளமுடியும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

செவ்வாய்க்கிழமை நடைபெற்ற துணுக்காய் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

துணுக்காய் பிரதேச செயலகத்தினுடைய கணக்காளர் நிரந்தரமான கணக்காளராக இருந்தாலும் மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தில் பதில் கடமை மேற்கொள்கின்றவராக இருக்கின்றார்.

அதேவேளை இங்கு உதவித் திட்டமிடல் பணிப்பாளராகப் பணிபுரியும் உத்தியோகத்தர் கிழக்குப் பிரதேச செயலகத்தில் நிரந்தர நியமனம் பெற்று எமது பிரதேச செயலகத்தில் பதில் கடமை புரிபவராகவும் உள்ளார். அத்தோடு மேலதிக பதிவாளர் வெற்றிடம் ஒன்று நீண்டகாலமாகவே காணப்படுகின்றது.

தொழில்நுட்ப அலுவலர் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர்களுக்குரிய வெற்றிடங்களும் காணப்படுகின்றன. தொழில்நுட்ப உதவியாளர் ஒருவர் மாத்திரமே மாந்தை கிழக்கு மற்றும் துணுக்காய் பிரதேச செயலக பிரிவுகள் இரண்டையும் இணைத்தபடி வேலைத்திட்டங்களைப் பார்வையிடுகின்றார் என்றார்.

# ஆடு, மாடுகளை களவாடிய 5 இளைஞர்கள் கைது

**வவுனியா விசேட நிருபர்**

வவுனியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஆடு, மாடுகளை களவாடிய 5 இளைஞர்களை வவுனியா குற்றத்தடுப்பு பொலிசார் கைது செய்துள்ளனர்.

பண்டாரிக்குளம் பகுதியில் மாடொன்றும் மகாறம்பைக்குளம் பகுதியில் பெரிய இன ஆடு ஒன்றும் காணாமல் போன நிலையில் அவற்றின் உரிமையாளர்களினால் வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதனையடுத்து வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி சுனில் சாந்த தலைமையிலான பொலிஸ் குழுவினர் மேற்கொண்ட விசாரணைகளிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைப்பற்றப்பட்ட மாட்டின் இறைச்சி மற்றும் ஆடு ஆகியவற்றினையும் கைது செய்யப்பட்ட ஐந்து சந்தேகநபர்களையும் வவுனியா மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆயர்படுத்த பொலிசார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# பொலிஸ் ஆட்சேர்ப்பு நேர்முக தேர்வு நிறுத்தம்

**வவுனியா விசேட நிருபர்**

வடக்கு மாகாணத்தில் இளைஞர், யுவதிகளை பொலிஸ் திணைக்களத்தில் இணைத்து கொள்வதற்கான ஆரம்ப நேர்முக தேர்வு இன்று வவுனியாவில் நடைபெறவிருந்த நிலையில் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் திஸ்சலால் த சில்வா தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொவிட் 19 காரணமாகவே நேர்முகத்தேர்வு நடைபெறமாட்டாது என அவர் குறிப்பிட்டார். நேர்முகத் தேர்வுக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் கூறினார்.

# முதியவரை மோதிய மோட்டார் சைக்கிள்

**சாவகச்சேரி விசேட நிருபர்**

கொடிகாமம் - கச்சாய் வீதி ஒட்டங்கேணிப் பகுதியில் வீதியைக் கடந்த முதியவர் ஒருவரை வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் முதியவர் தலையில் படுகாயமடைந்துள்ளார். அப் பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றுக்கு முதியவர் வருகை தந்த போதே இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

படுகாயமடைந்த முதியவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். மோட்டார் சைக்கிளை செலுத்தி வந்த யுவதி சிறு உரசல் காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

# கலாசாலை பதிவுகள் நிறுத்தம்

**சுண்டுக்குளி நிருபர்**

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் 2020 2021 கல்வியாண்டுக்கான புதிய மாணவர் பதிவுகள் இன்று நடைபெற இருந்த போதிலும் கல்வி அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைவாக பதிவுகள் மறு அறிவித்தல் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக கலாசாலை அதிபர் வீ.கருணலிங்கம் அறிவித்துள்ளார்.

# முகக் கவசம், இடைவெளி அவசியம்

**வவுனியா விசேட நிருபர்**

நாட்டின் சில பாகங்களில் கொவிட் 19 இன் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில் வவுனியா பொலிசார் பொதுமக்களிடம் அவசர அறிவித்தல் ஒன்றினை விடுத்துள்ளனர்.

இலங்கையில் தற்போது கொவிட் 19 தொற்றின் இரண்டாவது அலை பெருக்கெடுத்துள்ளது. இதனால் இலங்கையில் பல இடங்கள் முடக்கப்பட்டுள்ளதுடன் பாதுகாப்பு ஆலோசனைகள் பெற்றுக்கொள்ளப்பட்டு சுகாதாரத்துறையினரின் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு வருகின்றன. வவுனியா மாவட்டத்தில் கொவிட் 19 சுகாதார நடைமுறையினை நேற்று தொடக்கம் பொதுமக்கள், வர்த்தக நிலையங்கள் பின்பற்ற வேண்டும். குறிப்பாக பொதுமக்கள் அனைவருக்கும் சமூக இடைவெளி, முகக்கவசம் என்பன கட்டாயமாக்கப்பட்டுள்ளதுடன் இதனை மீறுபவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும் வவுனியாவிலுள்ள வர்த்தக நிலையங்கள் அனைத்திலும் கைகழுவும் வசதிகள் அல்லது தொற்று நீக்கி மருந்து கட்டாயம் வைப்பதுடன் சுகாதார நடைமுறையினையும் பின்பற்றுமாறு வவுனியா வர்த்தக சங்கத்தினரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# 'குளத்துக்காக சுவரொட்டிகள்'

**வவுனியா விசேட நிருபர்**

'குளத்தை காப்பாற்ற வேண்டியவர்களே ஆக்கிரமிப்புக்கு துணை போவதா' போன்ற பல்வேறு வாசகங்களை தாங்கிய சுவரொட்டிகள் வவுனியா நகர் முழுவதும் ஒட்டப்பட்டுள்ளன.

குறித்த சுவரொட்டிகள் நேற்று காலை தொடக்கம் வவுனியா நகர், கண்டி வீதி, மன்னார் வீதி, நூலக வீதி, வைரவபுளியங்குளம் ஆகிய பகுதிகளில் ஒட்டப்பட்டு காணப்பட்டன.

நிலத்தடி நீருக்கும் நெல் உற்பத்திக்கும் ஆப்பு வைப்பதா அபிவிருத்தி?, இயற்கைச் சூழலை நாசப்படுத்தி களியாட்டங்கள் வேண்டுமா?, வவுனியா நகரசபையே வவுனியாக் குளத்தைக் கூறு போட்டு விற்காதே, நீர்ப்பாசனத் திணைக்களமே குளத்தை காப்பாற்ற வேண்டியவர்களே ஆக்கிரமிப்புக்கு துணை போவதா போன்ற வாசகங்கள் குறித்த சுவரொட்டிகளில் காணப்படுகின்றன. வவுனியாக் குளத்திற்கான மக்கள் செயலனி என சுவரொட்டியின் கிழே உரிமை கோரப்பட்டுள்ளது.





நீருயிரின வள தொழில்நுட்ப பாட ஆசிரியர்களுக்கான நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு நேற்று வட மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது. இதன்போது வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸ் ஆசிரியர் ஒருவருக்கு நியமனம் வழங்கிய போது...

# மன்னாருக்கு கடல் மார்க்க தொடர்பு உள்ளமையால் அவதானம் அவசியம்

## -பதில் அரசாங்க அதிபர்

**மன்னார் குறூப் நிருபர்**

மன்னார் மாவட்டம் கடல்மார்க்க தொடர்புகளை கொண்ட மாவட்டமாக உள்ளமையால் அனைவரும் அவதானமாக செயற்பட வேண்டும் என மன்னார் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ். குணபாலன் தெரிவித்தார்.



டெங்கு நுளம்பு கட்டுப்பாடு மற்றும் கொரோனா தொற்று தொடர்பான அவசர கலந்துரையாடல் நேற்று காலை 10 மணியளவில் மன்னார் மாவட்டச் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இக் கூட்டம் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். மேலும் கூறுகையில்,

நாட்டின் சில பகுதிகளில் மீண்டும் கொரோனா தொற்று அபாயம் ஏற்பட்டுள்ள நிலையில் மாவட்ட மட்டத்தில் அனைத்து உத்தியோகத்தர்களையும், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் உட்பட சுகாதார துறையினரை அழைத்து அவசர கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டிருந்தோம்.

டெங்கு மற்றும் கொரோனா தொற்று தொடர்பாகவும் கலந்துரையாடியுள்ளதோடு எச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளோம். எதிர்வரும் 14ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை டெங்கு ஒழிப்பு வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டு மன்னார் மாவட்டத்தில் டெங்கு ஒழிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் மேற்பார்வையில் இங்கு இருக்கக் கூடிய சுகாதார உத்தியோகத்தர்களின் உதவியுடன் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் பிரதேச செயலாளர் உட்பட கிராம அலுவலகர், சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகஸ்தர் ஆகியோருடன் இணைந்து மேற்கொள்ளப்படவுள்ளது.

எவ்வாறு சுகாதார நடவடிக்கைகளை பின்பற்றி கொரோனா தொற்றில் இருந்து பாதுகாக்கப்பட்ட மாவட்டமாக இருந்தோமோ அதேவகையிலே உங்களினுடைய பூரணமான ஒத்துழைப்பை மக்களாகிய நீங்கள் எங்களுக்கு வழங்க வேண்டும் என்றார்.

# மன்னார் கரவலைபாட்டில் கட்டடம் அமைப்பதை ஆராய குழு அமைப்பு

**தலைமன்னார் விஷேட நிருபர்**

மன்னார் பள்ளிமுனை கடற்கரைப் பகுதியில் கரவலைபாடு ஒன்றில் தனியார் கட்டடம் அமைக்கப்படுவது தொடர்பாக ஆராய மீனவ அமைப்புக்களையும், அதிகாரிகளையும் உள்ளடக்கிய குழு அமைக்கப்பட்டுள்ளது.

மேற்படி பிரச்சினை தொடர்பாக மன்னார் பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் மீனவர்களால் குறிப்பிடப்பட்டிருந்தது. இக் கூட்டத்தில் பள்ளிமுனை மக்கள் சார்பாகவும் பொது அமைப்புக்களின் சார்பாகவும் கூறுகையில், பள்ளிமுனை பகுதியில் இங்கு பல பிரச்சினைகள் இருக்கின்றன. இப் பகுதியில் மீனவர்களின் வாழ்வாதாரத்தில் ஒன்றான கரவலைப் பிரச்சினை சம்பந்தமாக நாம் கடந்த இரு வருடங்களாக போராடி வருகின்றோம்.

இப் பகுதியில் ஒரு கரவலைபாடு இருக்கின்றது. இதில் கட்டடம் ஒன்று அமைப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளனர். இந்த இடம் இரு பக்கங்களாலும் கடலால் சூழப்பட்டது. இதனால் கரவலை மீன்பிடி காலத்தில் பள்ளிமுனை மீனவர்கள் கரவலை தொழிலை செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது.

கட்டடம் அமைப்பதற்கு நகர சபையால் தடை உத்தரவும் உண்டு. அதை மீறியும் இவ் இடம் ஆக்கிரமிக்கப்பட்டு வருகின்றது. ஆனால் ஓரிரு திணைக்களத்தால் கட்டடம் அமைப்பதற்கு அனுமதியும் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. சுற்றுச் சூழல் திணைக்களத்துக்கு மற்றும் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் இது விடயமாக முறைப்பாடு செய்தும் சரியான நடவடிக்கைகள் எடுக்காதிருக்கின்றனர்.

இது ஒரு தனியார் காணி என்ற அடிப்படையில் அது அமைக்கப்படுவதாக இங்கு கருத்து தெரிவிக்கப்பட்டபோதும் இது அரச காணியா அல்லது தனியார் காணியா என்பதை கண்டறிவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றனர்.

# த.தே.ம. முன்னணிக்கு வரவேற்பு நிகழ்வு

**சாவகச்சேரி விசேட நிருபர்**

தென்மராட்சி கைதடி புலம் பெயர் தமிழ் உறவுகளின் அனுசரணையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்களை வரவேற்கும் நிகழ்வும்,பாடசாலை மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டி அன்பளிப்புச் செய்யும் நிகழ்வும் நேற்று முன்தினம் நடைபெற்றது. கைதடி இணுங்கித் தோட்டம் அன்னை இரத்தினம் மணி மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் செ.கஜேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# யாழின் அபிவிருத்தி; இராணுவம் அரச அதிபருடன் பேச்சு

**பருத்திதுறை விசேட நிருபர்**

பலாலி கட்டளைத் தலைமையகத்திற்கு உட்பட்ட இராணுவத்தின் 51ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதியாக புதிதாக பதவியேற்றுள்ள பிரிகேடியர் சுமித் பிறேமலால் நேற்று யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரை உத்தியோகபூர்வமாக சந்தித்தார்.

குறித்த சந்திப்பின் போது யாழ்.மாவட்டத்தில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்திட்டங்கள் தொடர்பாக ஆராய்ந்ததோடு யாழ்ப்பாண மாவட்டத்தில் இனிவரும் காலங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பிலும் விரிவாக ஆராய்ந்தனர். மேலும் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா அச்ச நிலைமையினை யாழ்ப்பாணத்தில் எவ்வாறு எதிர்நோக்குவது, சமூகத் தொற்று ஏற்படாமல் எவ்வாறு தடுப்பது போன்ற விடயங்கள் தொடர்பிலும் கலந்துரையாடினர்.

# லேக்ஹவுஸ் வெளியீடுகளின் விற்பனை முகவர்களுக்கான விசேட கௌரவிப்பு



தினகரன் பத்திரிகையின் விற்பனையில் சாதனை படைத்து வருவதை பாராட்டி சிறந்த விற்பனை முகவருக்கான பிளாட்டினம் விருதும், 1990 முதல் லேக்ஹவுஸ் நிறுவன வெளியீடுகளை விற்பனை செய்து வருவதற்காக அமரர் பரம்சோதியின் சேவையை நினைவுகூர்ந்து அவரது மகனான மன்னார் ஜோதி புத்தகசாலை உரிமையாளர் பரம்ஜோதி கஜமுகனுக்கு சேவை பாராட்டு விருதும் வழங்கப்பட்ட போது...















# பசுமை நிலத்துக்கு வேட்டு வைக்கும் நவீன விவசாயம்

உலகப் பொருளாதாரத்தில் முதல் நிலை வகிக்கின்ற முதலாம் இரண்டாம் மண்டல நாடுகளில் அதிகளவானவை விவசாயத்தினூடாகவே வளர்ச்சி கண்ட நாடுகளாக உள்ளன. விவசாயத்தில் முன்னேற்றம் காண்பதற்கும், வருமானத்தை பெருக்குவதற்கும் இராசயன உரப்பாவனை, களைநாசினி, கிருமிநாசினி ஆகியன அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றன.

முன்னோர்களால் மேற்கொள்ளப்பட்டு வந்த இயற்கை உரப்பாவனைகள் மற்றும் இயற்கை களை கட்டல், நோய்க் கட்டுப்பாடுகள் அருகிப் போயுள்ளன. இதனால் பயிர்ச் செய்கை நிலங்கள் உவர் நிலங்களாக மாறி வருவதுடன் சூழலுக்கும் பாதிப்புக்களும் ஏற்பட்டு வருகின்றன.

ஆதி காலத்தில் மிருகங்களுடன் மிருகளாக வாழ்ந்த மனிதன் தனது உணவுத் தேவைகளுக்கு மிருகங்களையே வேட்டையாடினான். உணவுத் தேவைக்காக மிருகங்கள் போன்று வாழ்ந்த மனித சமுகம் நாளடைவில் உணவுக்காக பயிர்ச் செய்கைகளை மேற்கொள்ளத் தொடங்கினான். இதன்மூலம் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய தொழில் முறைகளையும் உருவாக்கி உணவுத்தேவையை பூர்த்தி செய்து கொண்டான்.

எமது மூதாதையர் இரசாயன உரங்களை பாவிக்கவில்லை; இயற்கையை பாதிப்படைய செய்யவில்லை. மாறாக இயற்கையோடு இணைந்த விவசாயத்தை மேற்கொண்டு அதன்மூலம் நிறைந்த வருமானத்தை பெற்றுக்கொண்டதுடன் உணவிலும் தன்னிறைவும் பெற்றுக்கொண்டனர். இதனூடாக ஆரோக்கியமான சமூகத்தை கட்டமைத்துக்கொண்டனர்.

ஆனால் இன்று நவீன விவசாய முறையில் அதிகூடிய விளைச்சலுக்குக்காக கட்டுப்பாடுகளற்ற இரசாயனப் பயன்பாடு அதிகரித்துள்ளது. இயற்கை பசளையே அருகிவிட்டது. இதனால் ஒரு மனிதன் தனது வாழ் நாளில் அரைவாசிக் காலத்திற்கும் அதிக காலத்தை மருத்துவமனையிலேயே கழிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இரசாயன உரப் பயன்பாடு, கரையோரப் பகுதிகளில் மேற்கொள்ளப்படுகின்ற மணல் அகழ்வுகள், அதிக ஆழத்துக்கு குழாய்க் கிணறுகளை அமைத்தல், கழிவு வாய்க்கால்களை அபகரித்தல், குளங்களை ஆக்கிரமித்தல் எனப் பல்வேறு காரணிகளால் விவசாயம் செய்யக்கூடிய வளமான நிலங்கள் உவர் நிலங்களாக மாறிவருகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் குடியேற்றத்திட்டங்கள் ஆரம்பிப்பதற்கு முன்னரான காலத்தில் பூநகரி, பொன்னாவெளி, குஞ்சுக்குளம், பல்லவராயன்கட்டு, ஊரியான், தட்டுவன்கொட்டி போன்ற பழமையான பகுதிகளில் வாழ்ந்த மக்களின் பிரதான ஜீவனோபாயமாக விவசாயமே காணப்பட்டது. குறிப்பாக, நெற்செய்கை முக்கிய இடத்தைப் பெற்றிருந்தது.

கடந்த கால யுத்தம் மற்றும் பல்வேறு காரணங்களால் பல கிராமங்கள் இன்று அழிவடைந்தும் சிதைவடைந்தும் காணப்படுகின்றன. பூநகரி பிரசேதத்திற்குட்பட்ட பொன்னாவெளி என்ற கிராமம் கடந்த மன்னர் ஆட்சிக்காலத்தில் இருந்தே விவசாயத்திக்கு முக்கிய பிரதேசமாக காணப்பட்டதாக கூறப்படுகின்றது.

இங்கே ஒரு நூற்றாண்டு கடந்த பாடசாலை, ஆலயங்கள் ஏனைய கட்டமைப்புக்கள் காணப்பட்டிருக்கின்றன. இதேபோல குஞ்சுக்குளம், பல்லவராயன்கட்டு போன்ற பகுதிகளிலும் இவ்வாறு பழைமையான பாடசாலைகள், ஆலயங்கள், குளங்கள், குடியிருப்புக்களின் சிதைவுகள் அக் காலப்பகுதிகளில் கட்டப்பட்ட குடிநீர் தேவைக்கான கிணறுகள் என பல்வேறு அடையாளங்கள் காணப்படுகின்றன.

ஆனால் இப்போது அந்த இடங்களில் மக்கள் எவரும் இல்லை. காரணம் உவர் நிலப் பரம்பலால்



நிலமும் நீரும் உவராகி குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டதால் மக்கள் இப்பகுதிகளை விட்டு வெளியேறியுள்ளனர்.

மீள்குடியேற்றத்தின் பின்னரான கடந்த 2015ம் ஆண்டுக்கு முன்னரான காலப்பகுதியில் பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களின்படி, சுமார் ஐயாயிரம் ஏக்கருக்கும் அதிகமான பயிர்ச் செய்கைகள் மேற்கொண்ட நிலப்பகுதி உவர் நிலங்களாக காணப்பட்டதாக கணக்கிடப்பட்டுள்ளது.

இந் நிலங்கள் தற்போது பண்படுத்தப்பட்டு பயிர்ச் செய்கைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருவதாகவும் தற்போது 643 கெக்ரேயரில் மாத்திரமே பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படவில்லை என விவசாயத் திணைக்களத் தகவல் மூலம் அறியமுடிகின்றது.

அதாவது உருத்திரபுரம், வன்னேரிக்குளம், பள்ளிக்குடா, பூநகரி, நல்லூர் ஆகிய பிரதேசங்களில் 1,672 கெக்ரேயர் நிலப்பகுதி உவர் நிலங்களாக காணப்படுகின்றன. இதில் 1,029 கெக்ரேயர் பரப்பு செய்கைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் எஞ்சிய 643 கெக்ரேயர் செய்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும் மேற்படி திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டம் விவசாய மாவட்டமாக காணப்படுவதுடன் இங்குள்ள எழுபது வீதத்திற்கும் அதிகமான மக்கள் விவசாயத்தை பிரதான தொழிலாக கொண்டுள்ளனர். ஏஞ்சியவர்கள் ஏனைய தொழில்களை மேற்கொண்டாலும் அதனோடு விவசாயத்தை முன்னெடுப்பவர்களாவே காணப்படுகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் யுத்த காலத்தில் கடற்கரையோரங்களில் காணப்பட்ட உவர் நீர் தடுப்பணைகள் அழிவடைந்தமை, வெள்ளநீர் கடலுக்கு செல்லக்கூடிய வகையில் காணப்பட்ட கழிவு வாய்க்கால்கள் அழிவடைந்தமை, சேதனைப் பசளைப் பயன்பாடுகள் இல்லாமல் போனமை, மழை வீழ்ச்சி குறைவடைந்துள்ளமை என்பன உவர் பரம்பலுக்கு காரணமாக அமைந்துள்ளன.

உவரடைந்த நிலங்களை மூன்று வகையாக வகுக்க முடியும் என விவசாயத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அதாவது உயர் அல்லது அதிகூடிய உவர் தன்மை, நடுத்தர உவர் தன்மை, குறைவான உவர் தன்மையான பிரதேசம் என்பனவாகும்.

இதில் முதல் நிலையில் உள்ளது தவிர ஏனைய நிலப்பகுதிகளில் பவரு காலங்களில் 362 வர்க்கமுடைய சிபார்சு செய்யப்பட்ட நெல்லினங்களை பயிரிட முடியும் எனவும் மேலும் தெரிவித்துள்ளனர்.

## உவர் நீர் தடுப்பணைகள் பாதுகாப்பட வேண்டும்

கரையோரங்களில் உள்ள உவர் நீர்தடுப்பணைகள் உரிய முறையில் பாதுகாக்கப்படவேண்டும். இன்றைய சூழலில் விவசாய நிலங்களை அண்மித்த பகுதிகளில் மேற்கொள்ளப்படுகின்ற மணல் அகழ்வுகளை அதிகாரிகள் அல்லது பொலிசார் தான் தடுக்க வேண்டும் என்றில்லாமல் அந்தப் பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் விவசாய அமைப்புக்கள் இணைந்து கட்டுப்படுத்த வேண்டும்.

இது பல இடங்களில் வெற்றியளித்திருக்கின்றது. இதன்மூலம் கடல் நீர் உட்புகுதலை தடுக்கக்கூடியதாக இருக்கும். மழை காலங்களில் வெள்ளநீர் தேங்காது வழிந்தோடக்கூடிய வகையில் கழிவு வாய்க்கால்கள் அமைக்கப்பட வேண்டும்.

இவ்வாறு அமைக்கப்படாதவிடத்து மழை நீர் நீண்டகாலம் தரைகளில் தேங்கி நின்று ஆவியாகும் போது நீர்மட்டுமே வெளியேறும். ஏனைய உவர் தன்மை பொருட்கள் மண்ணிலே படிந்துவிடும். இதனாலும் உவர் தன்மை மண்ணில் காணப்படுகின்றது.

தற்போதைய சூழலில் மழைவீழ்ச்சி குறைவாக காணப்படுவதனால் நிலத்தை பண்படுத்துவதற்கான கால அவகாசமில்லாமல் போய்விடுகின்றது. எமது முன்னோர் ஆடி மாதத்திலே உழுதல் வேண்டும் என்று சொல்லுவார்கள்.

அதாவது பயிர்ச் செய்கை மேற்கொள்வதற்கு முன்னர் ஆடி மாதத்திலே நிலத்தை பண்படுத்திக்கொள்வார்கள். அப்போது நிலத்தின் மேற்பரப்பில் காணப்படுகின்ற உவர் தன்மை ஏனைய நிலத்திற்கு தீங்கு விளைவிக்க கூடியவையும் நிலத்தின் கீழ்ப் பகுதிக்குச் சென்று விடுகின்றன.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக இன்று சேதன பசளைகளின் பயன்பாடு என்பது இல்லாது போய்விட்டது. எமது முன்னோர்கள் பயிர்ச் செய்கை நிலங்களில் கால்நடைகளை கட்டுதல், பட்டியடைத்தல், இலைகுழைகளை இடுதல், பனையோலை பரவுதல், மண்ணில் நைதரசன் தன்மையை அதிகரிக்க சனல் விதைத்தல் போன்ற பல்வேறு முறைகளை கைக்கொண்டு அதன் மூலம் அமோக விளைச்சலை பெற்று ஆரோக்கியமாக வாழ்ந்தார்கள். ஆனால் இன்று இவ்வாறு எதுவும் செய்யப்படுவதில்லை.

இன்று பயன்படுத்தப்படுகின்ற இராசயன உரப் பாவனையை குறைத்து மேற்கண்ட சேதனப் பசளையை பயன்படுத்திக்கொள்வதன் மூலம் மண்ணினது போசனை தன்மையை பாதுகாக்க முடியும். இவ்வாறு சேதன உரப் பயன்பாட்டை ஊக்குவிப்பதற்கு அரசாங்கத்தினால் தற்போது பல்வேறுபட்ட ஊக்குவிப்பு திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படுகின்றன.

இதைவிட இன்று அதிகளவான குழாய்க் கிணறுகள் அமைக்கப்படுகின்றன. இதனால் நிலத்தடி நீர் அற்றுப்போகின்றது. ஆரம்பத்தில் ஆறுகளிலும், நீர்த்தேக்கங்களிலும் நீரை பெற்றுக்கொண்ட மனிதன் காலபோக்கில் கிணறுகள் குளங்களை அமைத்தான்.

இப்போது 100 அடி 150 அடி வரை சென்று குழாய்க் கிணறுகளை அமைக்கின்றான். இவ்வாறு ஆழத்திற்கு குழாய்க் கிணறுகளை அமைத்து எடுக்கின்ற நீர் எமக்கு சொந்தமானது அல்ல, எமது எதிர்கால சந்ததியின் நீரையே தோண்டி எடுக்கிறோம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

எனவே எமக்கு இயற்கையாக கிடைத்த இந்த கொடைகளை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எமக்குள்ளது.இதன்மூலம் நிலம் உவராதலையும் நீரத்தட்டுப்பாட்டையும் தடுக்க முடியும்.



சு.பாஸ்கரன்







# உதைபந்தாட்டத்தில் வெற்றி பெற்ற செம்மலை உதயசூரியன் கழக அணி

*மாங்குளம் குறூப் நிருபர்*

முல்லைத்தீவு மாவட்ட உதைபந்தாட்ட சம்மேளனத்தின் அனுசரணையோடு வற்றாப்பளை செந்தமிழ் விளையாட்டு கழகத்தினால் நடத்தப்பட்ட மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை வற்றாப்பளை செந்தமிழ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது.

இறுதி போட்டி நிகழ்வில் செம்மலை உதயசூரியன் விளையாட்டுக்கழக அணியும் முல்லைநகர் சென்யூட் விளையாட்டுக்கழக அணி மோதின.

இதில் 1:0 என்ற கோல் அடிப்படையில் செம்மலை உதயசூரியன் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது. இறுதி போட்டி நிகழ்வில் வற்றாப்பளை செந்தமிழ் விளையாட்டுக் கழகத்திற்காக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் அவர்களுடைய நிதியில் கட்டப்பட்ட கட்டடம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது. கட்டடத்தினை வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் நாடாவை வெட்டி திறந்துவைத்தார்.













செந்தமிழ் விளையாட்டுக்கழக மைதானத்திற்கான மின்னொளி தொகுதி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவப்பிரகாசம் சிவமோகனின் நிதியுதவியில் செய்யப்பட்டிருந்தது. இந்த மின்னொளி தொகுதியை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவப்பிரகாசம் சிவமோகன் இயங்க செய்து ஆரம்பித்து வைத்தார்.

போட்டி நிகழ்வுகளின் இறுதியில் பரிசளிப்பு நிகழ்வுகளும் இடம்பெற்றிருந்தன.

நிகழ்வு மற்றும் பரிசளிப்பு நிகழ்வுகளில் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவப்பிரகாசம் சிவமோகன் முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் செ.மயூரன் கரைதுறைப்பற்று பிரதேச சபை உப தவிசாளர் இ.இ ரவீந்திரன் கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் க.விஜிந்தன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் சம்மேளனத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கான பந்துகள் வழங்கி வைக்கப்பட்டன. அத்தோடு இறுதிப் போட்டியில் வெற்றியீட்டிய அணிகளுக்கான வெற்றி கேடயங்களும் சிறந்த ஆட்டநாயகன், சிறந்த கோல் காப்பாளர் ஆகியோருக்கான வெற்றி கேடயங்களும் விருந்தினர்களால் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

# புதிய சாதனை படைத்த கஜன்

*யாழ்.விளையாட்டு நிருபர்*

யாழ்.மாவட்ட செயலக விளையாட்டு பிரிவினரால் பிரதேச செயலகங்களுக்கு இடையில் நடத்தப்படும் தடகளப் போட்டியில் ஆண்களுக்கான ஈட்டி எறிதல் போட்டியில் யாழ்ப்பாண பிரதேச செயலக சார்பில் கலந்து கொண்ட கஜன் புதிய சாதனையுடன் தங்கப்பதக்கதினை கைப்பற்றினார்.

யாழ்.மாவட்ட செயலக விளையாட்டு பிரிவினரால் பிரதேச செயலகங்களுக்கு இடையில் நடத்தப்படும் தடகளப் போட்டி யாழ் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

சனிக்கிழமை காலை இடம் பெற்ற ஆண்களுக்கான ஈட்டி ஏறிதல் போட்டியில் 2013 ஆம் ஆண்டு யாழ்.மாவட்ட செயலக விளையாட்டு பிரிவினரால் நடத்தப்பட்ட பிரதேச செயலகளுக்கு இடையிலான தடகளப் போட்டியில் ஆண்களுக்கான ஈட்டி ஏறிதல் போட்டியில் யாழ்ப்பாண பிரதேச செயலகத்தினை பிரதிநிதித்துவப்படுத்தி டபிள்யு.சி.எல்.லிவிங்ஸ்ரன் 58.84மீற்றர் தூரம் ஏறிந்து நிலைநாட்டிய சாதனையை 7 வருடங்களின் பின்னர் இவ் வருடம் (2020 ஆம் ஆண்டு) நடைபெற்ற பிரதேச செயலகளுக்கு இடையிலான தடகளப் போட்டியில் யாழ்ப்பாண பிரதேச செயலகத்தினை பிரதிநிதித்துவப்படுத்தி கலந்து கொண்ட எஸ்.கஜன் 59.77மீற்றர் தூரம் ஏறிந்து புதிய சாதனையுடன் தங்கப் பதக்கதினை கைப்பற்றினார்.

நல்லூர் பிரதேச செயலகத்தின் சார்பில் கலந்து கொண்ட எஸ். செந்துரன் 57.20 மீற்றர் தூரம் ஏறிந்து வெள்ளிப்பதக்கத்தினையும், கோப்பாய் பிரதேச செயலகத்தின் சார்பில் கலந்து கொண்ட ஆர். நீகன் 51.94மீற்றர் தூரம் ஏறிந்து வெண்கலப் பதக்கத்தினையும் கைப்பற்றினார்.




## தாச்சிச் சுற்றுத் தொடர்:

# வைகறை, நாவலர் அணிகள் அரையிறுதியாட்டத்திற்கு தகுதி

*யாழ்.விளையாட்டு நிருபர்*

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச்சங்கத்தினால் அங்கத்துவக்கழகங்களுக்கு இடையில் நடைபெற்று வருகின்ற தாச்சிச் சுற்றுத் தொடரில் வைகறை அணி, சுதுமலை நாவலர் அணி அரையிறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றன.

கைதடி குமரநகர் விளையாட்டுக்கழக மைதனத்தில் இடம் பெற்ற காலிறுதியாட்டத்தில் வைகறை விளையாட்டுக்கழக அணிக்கும், பல்லசுட்டி காந்திஜீ விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் வைகறை விளையாட்டுக்கழக அணி 6:4 என்ற பழங்களைப் பெற்று அரையிறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றது. இரண்டாவது காலிறுதியாட்டத்தில் சுதுமலை நாவலர் விளையாட்டுக்கழக அணிக்கும், சங்கானை கீங் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் சுதுமலை நாவலர் விளையாட்டுக்கழக அணி 12:1 என்ற பழங்களைப் பெற்று அரையிறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றது.

# ஆண்களுக்கான சம்மட்டி எறிதல் பிரகாஸ்ராஜ் புதிய சாதனை

*யாழ்.விளையாட்டு நிருபர்*

யாழ். மாவட்ட செயலக விளையாட்டு பிரிவினரால் பிரதேச செயலகங்களுக்கு இடையில் நடத்தப்படும் தடகளப் போட்டியில் ஆண்களுக்கான சம்மட்டி எறிதல் போட்டியில் பருத்தித்துறை பிரதேச செயலக சார்பில் கலந்து கொண்ட பிரகாஸ்ராஜ் புதிய சாதனையுடன் தங்கப்பதக்கத்தினை கைப்பற்றினார்.

யாழ். மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவினரால் பிரதேச செயலகங்களுக்கு இடையில் நடத்தப்படும் தடகளப் போட்டி யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.




# ஆண்களுக்கான தட்டு எறிதல் மதுன்ராஜ் புதிய சாதனை

*யாழ்.விளையாட்டு நிருபர்*

யாழ்.மாவட்ட செயலக விளையாட்டு பிரிவினரால் பிரதேச செயலங்களுங்களுக்கு இடையில் நடத்தப்படும் தடகளப் போட்டி போட்டியில் ஆண்களுக்கான தட்டு எறிதல் போட்டியில் பருத்தித்துறை பிரதேச செயலக சார்பில் கலந்து கொண்ட மதுன்ராஜ் புதிய சாதனையுடன் தங்கப்ப தக்கதினை கைப்பற்றினார்.

யாழ்.மாவட்ட செயலக விளையாட்டு பிரிவினரால் பிரதேச செயலங்களுங்களுக்கு இடையில் நடத்தப்படும் தடகளப் போட்டி யாழ் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. கடந்த சனிக்கிழமை காலை இடம் பெற்ற ஆண்களுக்கான தட்டு எறிதல் போட்டியில் 2019 ஆம் ஆண்டு யாழ்.மாவட்ட செயலக விளையாட்டு பிரிவினரால் நடத்தப்பட்ட பிரதேச செயலகளுக்கு இடையிலான தடகளப் போட்டியில் ஆண்களுக்கான தட்டு எறிதல் போட்டியில் பருத்தித்துறை பிரதேச செயலகத்தினை பிரதிநிதித்துவப்படுத்தி பிரகாஸ்ராஜ் 39.01 மீற்றர் தூரம் ஏறிந்து நிலைநாட்டிய சாதனையை இவ் வருடம் (2020 ஆம் ஆண்டு) நடைபெற்ற பிரதேச செயலகளுக்கு இடையிலான தடகளப் போட்டியில் பருத்தித்துறை பிரதேச செயலகத்தினை பிரதிநிதித்துவப்படுத்தி கலந்து கொண்ட மதுன்ராஜ் 39.42 மீற்றர் தூரம் எறிந்து புதிய சாதனையுடன் தங்கப் பதக்கதினை கைப்பற்றினார்.

பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் சார்பில்கலந்து கொண்ட பிரகாஸ்ராஸ் 38.67 மீற்றர் தூரம் ஏறிந்து வெள்ளிப்பதக்கத்தினையும், கரவெட்டி பிரதேச செயலகத்தின் சார்பில்கலந்து கொண்ட திவன்சாஜன் 31.54 மீற்றர் தூரம் ஏறிந்து வெண்கலப் பதக்கத்தினையும் கைப்பற்றினர்.




# கபடிப்போட்டியில் கரவெட்டி பிரதேச செயலக அணி வெற்றி

*யாழ்.விளையாட்டு நிருபர்*

யாழ்.மாவட்ட செயலக விளையாட்டு பிரிவினரால் பிரதேச செயலகங்களுக்கு இடையில் நடத்தப்பட்ட ஆண்களுக்கான கபடிப்போட்டியில் கரவெட்டி பிரதேச செயலக அணி கிண்ணத்தை வென்றது.

வியாழக்கிழமை நெல்லியடி மத்திய கல்லூரியில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் கரவெட்டி பிரதேச செயலக அணியை எதிர்த்து தெல்லிப்பளை பிரதேச செயலக அணி மோதியது.

இதில் கரவெட்டி பிரதேச செயலக அணி 30:18 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது.



# முல்லைத்தீவு மாவட்ட அணி சம்பியன்

*யாழ்.விளையாட்டு நிருபர்*

வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட மாவட்டங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான வளைகோல் போட்டியில் முல்லைத்தீவு மாவட்ட அணி வரலாற்றுச் சாதனை படைத்து சம்பியனானது.

நேற்றுமுன்தினம் சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் யாழ்.மாவட்ட அணியை எதிர்த்து முல்லைத்தீவு மாவட்ட அணி மோதியது. ஆட்ட நேர முடிவில் இரண்டு அணியினரும் எது வித கோல்களைப் பதிவு செய்யாது போக ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. ஆட்டம் வெற்றி தோல்வி காண்பதற்காக சமநிலை தகர்ப்பு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. இதில் முல்லைத்தீவு மாவட்ட அணி 2: 1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

# வட மத்திய மாகாணத்தில் புத்திஜீவிகளை உருவாக்க அதிகாரிகள் உழைக்க வேண்டும்



**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

வட மத்திய மாகாணத்தில் அறிஞர்கள், புத்தி ஜீவிகள் உருவாகாவிட்டால் அதற்கான முழுப் பொறுப்பையும் மாகாண கல்வி அதிகாரிகள் பொறுப்பேற்க வேண்டுமென வட மத்திய மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத் தெரிவித்தார்.

வடமத்திய மாகாண ஆசிரியர் வகைப்படுத்தல், ஆசிரியர் வெற்றிடம் மற்றும் கல்விச் சேவையின் குறைபாடுகள் தொடர்பில், வலய பணிப்பாளர்கள் மாகாண கல்வி பணிப்பாளர்கள் மற்றும் கல்விசார் அதிகாரிகளுடன் நடத்திய சந்திப்பிலே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இக்கலந்துரையாடல் மாகாண கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது.தொடர்ந்து அவர் கருத்து தெரிவிக்கையில் : எதிர் வரும் இரண்டு வாரங்களினுள் ஆசிரியர் வகைப்படுத்தல் மற்றும் ஆசிரியர் குறைபாடு தொடர்பிலான முழுமையான தகவல்களை தனக்கு சமர்பிக்க வேண்டும்.

பிரதேசத்திலுள்ள பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்கி, கல்வி அதிகாரிகள் செயற்படுவது அவசியம். ஜனாதிபதியின் கல்வி செயற்பாடுகளுக்கு அமைவாக கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்துவது தொடர்பில் செயற்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

அவ்வாறு செயற்படாவிட்டால் எதிர்காலத்தில் மாகாணத்தில் திறமையான அறிஞர்களையும் புத்திஜீவிகளையும் உருவாக்க முடியாமல் போய்விடும்.அது தொடர்பில் கல்வி அதிகாரிகள் பொறுப்புகூற வேண்டிவரும்.

மாகாணத்தினுள் ஆசிரியர் வெற்றிடம் சம்பந்தமாக வலய மட்டத்தில் வெவ்வேறாக அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். இதற்காக தெரிவு செய்யப்படவுள்ள பட்டதாரிகள், திறமை, தகுதிகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர். இதற்கான விண்ணப்பங்கள் விரைவில் கோரப்பட வேண்டும்.தகமைகளை பூர்த்தி செய்யாது ஆசிரியர் நியமனங்களைப் பெற்றுக் கொண்டோரின் விபரங்களை

விரைவில் சமர்ப்பிக்குமாறு கோருகிறேன்.

வலய கல்வி பொறுப்பதிகாரிகளுக்கு இது தொடர்பில், நான் ஆலோசனை வழங்குகிறேன். பட்டதாரிகளை ஆசிரியர் சேவையில் இணைத்து கொள்வதற்கான நேர்முகப் பரீட்சை நடாத்திய அதிகாரிகளை இனம் கண்டு அவர்களை சேவையிலிருந்து நீக்க வேண்டும். சேவை இணைப்பு நிபந்தனைகளுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்காமையால் இன்று அவ்வாசிரியர்கள் பாரிய பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளனர். இவர்கள் சம்பந்தப்பட்ட தகமையை பூர்த்தி செய்யவில்லையாயின் உடன் நிராகரிக்கப்பட்டிருக்க வேண்டும்.இவ்வாறு செய்யாமைக்கு, நேர்முக பரீட்சைக் குழு பொறுப்புகூற வேண்டும். வலய பணிப்பாளர்கள் அந்தந்த பிரதேச ஆசிரியர்களின் வீட்டுப் பிரச்சினைகள் தொடர்பில் அவதானம் செலுத்தி இது தொடர்பில் அறிக்கை சமர்பிக்க வேண்டும். வீடுகளை புனரமைப்பு செய்வதற்கான நிதியினை முடியுமானளவு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஆளுநர் தெரிவித்தார்.

இதன் போது ஆளுநரின் செயலாளர் ஏ.கே.என்.விக்ரமசிங்க பிரதான அமைச்சின் செயலாளர் பேமசிறி ரத்நாயகவும் கலந்து கொண்டனர்.



சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி வெலிகமஅறபா மத்திய கல்லூரியில் (தேசிய பாடசாலை) இடம்பெற்ற நிகழ்வில் கல்லூரி அதிபர் எம்.எ.எம். முதஹ்ஹர் மாணவர்களுக்கு அன்பளிப்புகள் வழங்குவதைக் காணலாம்.

படம்: வெலிகம தினகரன் நிருபர்

## விஷேட தேவையுடையோருக்கு சக்கர நாற்காலிகள்

**புத்தளம் தினகரன் நிருபர்**

புத்தளம் வை.எம்.எம்.ஏ. பேரவையின் ஏற்பாட்டில் புத்தளம் நகரில் இங்காணப்பட்ட விஷேட தேவையுடையோர் மற்றும் முதியோருக்கு சக்கர நாற்காலிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் ஏற்பாட்டில், புத்தளம் வை.எம்.எம்.ஏ. பேரவை அமைப்பினர்,இதற்கான ஏற்பாடுகளைச் செய்தனர். விஷேட தேவையுடையோரின் வீடுகளுக்குச் சென்று இவை விநியோகிக்கப்பட்டன. குறித்த நபர்களின் வீடுகளுக்கு கள விஜயம் மேற்கொண்டு உரியவர்களிடம் இவைகளை கையளித்தனர்.

## கேள்விக்கான அழைப்பு

**விவசாய, காணி, நீர்ப்பாசனம், மீன்பிடி, கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரம் மற்றும் கமநல அபிவிருத்தி அமைச்சு**

**மேல் மாகாணம்**

மேல் மாகாண விவசாய, காணி, நீர்ப்பாசனம், மீன்பிடி, கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரம் மற்றும் கமநல அபிவிருத்தி அமைச்சின் கீழ் செயற்படும் விசேட செயற்றிட்டங்களுடன் சம்பந்தப்பட்ட கீழ்க்காணும் விடயங்களுடன் சம்பந்தப்பட்ட அமைச்சு பெறுகைக் குழுவின் தலைவரால் பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| திட்டத்தின் பெயர் | மீளளிக்கப்படாத கட்டணம் | ICTAD பதிவு | கேள்விப் பிணையின் பெறுமதி |
|---|---|---|---|
| (அ) பிட்டிபன நீரியல்வள நிலையத்தின் உர ஆய்வு நிலையத்தின் பழுது பார்த்தல்கள் | ரூ. 1,000.00 | C9 அல்லது அதற்கு மேல் | ரூ. 13,000.00 |
| (ஆ) பிட்டிபன நீரியல்வள நிலையத்தின் உர உற்பத்தி அலகின் பழுது பார்த்தல் | ரூ. 1,000.00 | C9 அல்லது அதற்கு மேல் | ரூ. 19,000.00 |
| (இ) ஜப்பான் ஜபர சார்ந்த சேதன உரம் உற்பத்தி செய்யும் செயற்றிட்டத்திற்கு ஹோமாகம விவசாய பயிற்சி நிறுவன வளாகத்தில் கட்டிடமொன்றை நிர்மாணித்தல் | ரூ. 4,000.00 | C6 அல்லது அதற்கு மேல் | ரூ. 160,000.00 |

1. தேசிய போட்டி கேள்வி மதிப்பீட்டு செயன்முறைமையின் பிரகாரம் இப் பெறுகை செயற்பாடுகள் நடைபெறும்.
2. இவ் (அ), (ஆ) மற்றும் (இ) செயற்றிட்டங்கள் ஒன்றிலிருந்து ஒன்று வேறாக செயற்படுவதுடன் அதற்காக வேறுவேறாக கேள்வி ஆவணங்களை கொள்வனவு செய்து சமர்ப்பித்தல் வேண்டும்.
3. அமைச்சு செயலாரிடம் எழுத்து மூல வேண்டுதலை சமர்ப்பித்து, மீளளிக்கப்படாத கேள்வி கட்டணத்தை காசாக செலுத்தி கேள்வி ஆவணத் தொகுதியை 2020.10.06 முதல் 2020.10.19 வரை அரச வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை கீழ்க்காணும் முகவரியில் அமைந்துள்ள மேல்மாகாண விவசாய அமைச்சின் நிறுவனப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.
4. பதிவுத் தபாலில் அல்லது அமைச்சின் கணக்குப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டு கேள்விகளை சமர்ப்பிக்க முடியும். அத்துடன் 2020.10.20ம் திகதி கீழ்க்காணும் நேரம் வரை கேள்விகள் ஏற்கப்படும். ஏற்கப்படும் நேரம் முடிவடைந்தவுடன் அமைச்சு கேட்போர் கூடத்தில் அக் கேள்விகள் திறக்கப்படும்.

   அ. செயற்றிட்டம் - மு.ப. 10.00
   ஆ. செயற்றிட்டம் - மு.ப. 10.45
   இ. செயற்றிட்டம் - மு.ப. 11.30
5. அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது எழுத்துமூல அனுமதி பெற்ற அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.
6. மத்திய வங்கியில் பதிவு செய்துள்ள நிதி நிறுவனமொன்றிலிருந்து 'செயலாளர், விவசாய, காணி, நீர்ப்பாசன, மீன்பிடி, கால் நடை உற்பத்தி மற்றும் சுகாதாரம் மற்றும் கமநல அபிவிருத்தி அமைச்சு - (மேல் மாகாணம்)' என்ற பெயரில் பெற்றுக்கொண்ட, மேற்கண்ட விதத்தில் கேள்விப் பிணையொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.
7. இப் பெறுகை சம்பந்தமாக மேல் மாகாண விவசாய அமைச்சின் பெறுகைக் குழுவின் தலைவரின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.
8. மேலதிக விபரங்கள் தேவையெனில் தொ.பே. இலக்கம் 011-2092660 மூலம் மேல் மாகாண விவசாய அமைச்சின் உதவிச் செயலாளரை அழைத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு,**
**விவசாய, காணி, நீர்ப்பாசன, மீன்பிடி, கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரம் மற்றும் கமநல அபிவிருத்தி அமைச்சு - மேல் மாகாணம்**
**7ஆம் மாடி, 204, மேல் மாகாண சபை,**
**டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்ல.**

NLB

## விலைமனுக்களுக்கான அழைப்பு

# தேசிய லொத்தர் சபை

**நிதி அமைச்சு**

## தேசிய லொத்தர் சபைக்கு ஓர் ஆண்டு காலத்திற்கு காகித மறுசுழற்சி சேவை வழங்கலுக்கான பெறுகை

ஓர் ஆண்டு காலத்திற்கு தேசிய லொத்தர் சபைக்காக காகித மறுசுழற்சி சேவை வழங்கலுக்கான பெறுகைக்கு பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து தேசிய லொத்தர் சபையின் (NLB) திணைக்கள பெறுகைக்குழு (DPC) சார்பில் தலைவரினால் தற்போது பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

தேசிய போட்டி ரீதியான விலைமனு நடைமுறை அடிப்படையில் விலைகேட்பு நடத்தப்படும்.

வெற்றி பெறும் விலைமனுதாரர் துண்டாக்கும் இயந்திரத்தை பயன்படுத்தி காலாவதியான லொத்தர் சீட்டுகளை சிறு துண்டுகளாக கிழிக்க முடியுமாக இருத்தல் வேண்டும். இந்த நடைமுறை ஒவ்வொரு 2 மாதங்களுக்கு ஒரு முறை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் இல. 32, தேசமான்ய என். டபிள்யூ.ஜே. முதலிகே மாவத்தை, கொழும்பு 01இல் தேசிய லொத்தர் சபை, 1ஆவது மாடி, பெறுகை பிரிவு, உதவிப் பொது முகாமையாளரிடம் (பெறுகை) இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் (தொ. 0114607020) என்பதோடு கீழ் தரப்பட்டுள்ள முகவரியில் **9.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை** எந்த ஒரு வேலை நாளிலும் விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.

ஆயிரம் ரூபா (1,000.00) (VAT உடன்) கட்டணத்தை செலுத்தி எந்த ஒரு வேலை நாளிலும் **9.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை 2020.10.06 தொடக்கம் 2020.10.20 வரை** கீழுள்ள முகவரிக்கு கோரிக்கை கடிதம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவு ரொக்கப் பணத்தில் செலுத்துதல் வேண்டும்.

விலைமனுக்கள் **2020.10.21 அன்று 14.30** மணி அல்லது அதற்கு முன்னர் கீழ் தரப்பட்டுள்ள முகவரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் கொழும்பு 01, என்.டபிள்யூ.ஜே. முதலிகே மாவத்தை, இல. 32, தேசிய லொத்தர் சபை, 5ஆவது மாடி, நிர்வாகப் பிரிவில் விலைமனுக்கள் மூடப்பட்ட பின் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் நாற்பதாயிரம் ரூபாவின் (ரூபா 40,000) விலைமனுப் பிணையைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதோடு, அது 2021.01.19ஆம் திகதி வரை செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.

வெற்றிகரமான விலைமனுதாரர் இரண்டு இலட்சத்து அறுபதாயிரம் ரூபாவுக்கு (ரூ. 260,000.00) இணையான செயல்திறன் முறி ஒன்றை வழங்கல் வேண்டும். இந்த செயல்திறன் முறி உறுதிக் கடிதம் வழங்கப்பட்ட திகதியில் இருந்து 12 மாத காலத்திற்கு செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.

முத்திரை பொறிக்கப்பட்ட உறையில் ஆவணங்கள் பதிவுத் தபாலில் அல்லது கைகளால் கொண்டுவந்து சேர்த்தல் வேண்டும் என்பதோடு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"காகித மறுசுழற்சி சேவையின் வழங்கலுக்கான விலைமனு (NLB/SUP/08/PRS/2020)"** என்று குறிப்பிடப்படல் வேண்டும்.

விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு கொழும்பு 01, தேசமான்ய என். டபிள்யூ.ஜே. முதலிகே மாவத்தை, இல. 32, தேசிய லொத்தர் சபையில் 2020.10.13 அன்று 10.00 மணிக்கு இடம்பெறும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக்குழு,**
**தேசிய லொத்தர் சபை,**
**இல. 32, தேசமான்ய என்.டபிள்யூ.ஜே.**
**முதலிகே மாவத்தை,**
**கொழும்பு 01.**

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board


04.10.2020 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை **604,286**

பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை **25,251,130.00**

ரூ. 2,000,000.00 பரிசுகள் **01** ரூ. 1,000,000.00 பரிசுகள் **02** ரூ. 100,000.00 பரிசுகள் **25**

www.nlb.lk
NLB NATIONAL LOTTERIES

### கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 2560 சீட்டிழுப்பு திகதி 04.10.2020

ஆங்கில எழுத்து: M — வெற்றி இலக்கங்கள்: 23 29 30 78

| | பரிசு கட்டமைப்பு | பரிசுத்தொகை | வெற்றியாளரர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000,000.00 | 01 |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100,000.00 | 04 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000.00 | 147 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000.00 | 361 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100.00 | 8745 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூ. 40.00 | 5716 |
| 7 பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20.00 | 143421 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20.00 | 26229 |

இந்த சீட்டிழுப்பில் உருவாகிய வெற்றயாளர்களின் எண்ணிக்கை **184,624**

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத்தொகை ரூ. **6,551,140.00**

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. **61,203,581.60**

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சமோ அதற்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

ජාතික ලොතරැයි මණ්ඩලය தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD
இல 32 தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை கொழும்பு 01
தொலைபேசி : 0114 607 000, 0112 324 324 Fax: 0114 663 416 Web: www.nlb.lk

### மஹஜன சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் : 4265 உத்தியோகபூர்வ முடிவுகள்

திகதி: 04-10-2020

வெற்றி எழுத்து: H — வெற்றி இலக்கங்கள்: 3 5 1 1 6 2

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| பரிசு | இலக்கங்கள் | தொகை | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1ஆம் பரிசு | 3 5 1 1 6 2 | ரூபா. 2,000,000/- | 01 |
| 2ஆம் பரிசு | 5 1 1 6 2 | ரூபா. 100,000/- | 10 |
| 3ஆம் பரிசு | 1 1 6 2 | ரூபா. 10,000/- | 102 |
| 4 ஆம் பரிசு | 1 6 2 | ரூபா. 1,000/- | 989 |
| 5ஆம் பரிசு | 6 2 | ரூபா. 100/- | 9,886 |
| 6ஆம் பரிசு | 2 | ரூபா. 20/- | 97,819 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| பரிசு | இலக்கங்கள் | தொகை | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 7ஆம் பரிசு | 3 5 1 1 6 | ரூபா. 10,000/- | 09 |
| 8ஆம் பரிசு | 3 5 1 1 | ரூபா. 1,000/- | 92 |
| 9ஆம் பரிசு | 3 5 1 | ரூபா. 100/- | 978 |
| 10ஆம் பரிசு | 3 5 | ரூபா. 50/- | 9,785 |
| 11ஆம் பரிசு | H | ரூபா. 20/- | 39,187 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை – ரூ. **9,506,770.00**

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும். பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. **20,909,999.00**

NLB வாழ்வின் கனவிற்கு அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்

தேசிய லொத்தர் சபை www.nlb.lk
32, தேஷமான்ய N. W. J. முதலிகே மாவத்தை, கொழும்பு - 01.
தொலைபேசி: 011-4607000, 011-2324324. Fax: 011-4669416.

### செவண

உத்தியோகபூர்வ முடிவுகள்

உங்களுக்கு வீடு - கைகளில் காசு

திகதி 2020/10/04
சீட்டிழுப்பு இலக்கம் 301

ஆங்கில எழுத்து: Y — வெல்லப்பட்ட இலக்கங்கள்: 03 36 43 52

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுகள் | வெற்றியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1ம் பரிசு | 4 இலக்கங்களும் சரியாக இருப்பின் | ரூ. 1,000,000/- வீதம் | - |
| 2ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 100,000/- வீதம் | 02 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 1,000/- வீதம் | 63 |
| 4ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 200/- வீதம் | 139 |
| 5ம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 100/- வீதம் | 3,426 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் மட்டும் சரியாக இருப்பின் | ரூ. 50/- வீதம் | 2,008 |
| 7ம் பரிசு | 1 இலக்கம் மட்டும் சரியாக இருப்பின் | ரூ. 20/- வீதம் | 48,210 |
| 8ம் பரிசு | ஆங்கில எழுத்து மட்டும் சரியாக இருப்பின் | ரூ. 20/- வீதம் | 7,433 |

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசுத் தொகை ரூ. 14,000,000/-
இச் சீட்டிழுப்பில் வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 1,846,660/-

- ரூ.500,000.00 மற்றும் அதற்குக் கூடிய பரிசுகள் அரச வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்படும்.
- வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்பு திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும்.
- பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

ජාතික ලොතරැයි මණ්ඩලය தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD
இல.32, தேசமான்ய என்.டபிள்யூ.ஜே. முதலிகே மாவத்தை, கொழும்பு 01. இலங்கை
தொ.பே.: 011 460 7000, 011 460 7000, தொ.நகல்: 011 4669416
www.nlb.lk

### Mega Power மெகா பவர்

சீட்டிழுப்பு இலக்கம்: 632
உத்தியோகபூர்வ முடிவுகள்
திகதி: 04/10/2020

ஆங்கில எழுத்து: K — சுப்பர் இலக்கம்: 23 — வெற்றி இலக்கங்கள்: 26 27 58 77

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | 01 |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 08 |
| 3 ஆம் பரிசு | இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000.00 | 107 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 500.00 | 231 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 5,955 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 4,030 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 98,487 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 17,912 |

அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ .51,880,633.20

அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.11,151,072.80
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.18,612,194.40

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. 5,107,180.00

### தன நிதானய

உத்தியோகபூர்வ முடிவுகள்

திகதி - 2020/10/04
சீட்டிழுப்பு இலக்கம் - 324

ஆங்கில எழுத்து: F — வெற்றி இலக்கங்கள்: 01 05 13 33

| | கட்டமைப்பு | பரிசுகள் | வெற்றியாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 1,000,000.00 | - |
| 2 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 100,000.00 | 01 |
| 3 ஆம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 3,000.00 | 61 |
| 4 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 1,000.00 | 147 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 100.00 | 3,343 |
| 6 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூபா. 60.00 | 2,257 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூபா. 20.00 | 56,379 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூபா. 20.00 | 10,604 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூபா. **2,239,380.00**
பரிசுகளை வென்ற வெற்றியாளர்களின் எண்ணிக்கை. **72,792**

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசுத்தொகை **118,270,917.04**

- ரூபா. 5 இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசின் வரி சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது.
- பரிசுத்தொகையை பெற்றுக்கொள்ளும் போது தேசிய அடையாள அட்டை கட்டாயமானது.
- சீட்டிழுப்பு தினத்திலிருந்து 6 மாதகாலத்திற்கு மாத்திரமே வெற்றி லொத்தர் செல்லுபடியாகும்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

# புனித செபமாலை மாதா திருவிழா



கத்தோலிக்கத் திருச்சபையானது அக்டோபர் 7ஆம் திகதி திருச்சபையின் தாயும் நம் அனைவரது அன்னையுமான புனித மரியாளை கௌரவிக்கும் வகையில் செபமாலை மாதா திருவிழாவை கொண்டாடுகிறது.

அதற்கிணங்க அக்டோபர்மாதம்முழுவதும் செபமாலை தியானத்திற்கு முக்கியம் அளிப்பதுடன் உலகெங்கிலும் உள்ள ஆலயங்களில் செபமாலை மாதா தொடர்பான பக்தி முயற்சிகள், விசேட திருப்பலிகளும் இம் மாதம் முழுவதும் இடம்பெறுகின்றன.

மாதா என்றாலே கத்தோலிக்கர்கள் மட்டுமன்றி பிற மதத்தவர்களும் அன்போடும் நம்பிக்கையோடும் விசுவாசத்தோடும் நெருங்கிப் பழகுகின்ற ஒரு சிறந்த தாயாக திகழ்கின்றார்.

அன்னை மரியாள்" இதோ நான் உமது அடிமை. உம் சித்தப்படியே ஆகட்டும்" என தம் உள்ளத்தைத் திறந்து ஆண்டவருக்கு முழுமையாக இடம் கொடுத்தவள்.

அன்று முதல் வாழ்வில் எல்லா சந்தர்ப்பங்களிலும் இறைவனுக்கு கீழ்ப்படிந்து அவருக்கு முதலிடம் அளித்து அவரது அதீத அன்பை பெற்றுக்கொண்டவள்.

தன் ஒரே பேறான மகன் சிலுவைச் சாவை ஏற்றுக்கொண்ட போதும் அது ஆண்டவருடைய திருச்சித்தம் என அதற்கு இடம் கொடுத்தவள் அன்னை மரியாள்.



புனித செபமாலை மாதா திருவிழாவை கொண்டாடும் நாம் அனைவருமே நம் அன்னையைப் போல் எல்லா சந்தர்ப்பத்திலும் இறைவனுக்கு கீழ்ப்படிந்து அவருக்கு முதலிடம் அளித்து அவரது அதீத அன்பையும் அருளையும் பெற்றுக் கொள்ள திருச்சபை நமக்கு அழைப்பு விடுக்கின்றது. செபமாலை மாதா திருவிழாவுக்கு ஒரு நீண்ட வரலாறு உள்ளது.

செபமாலை பக்தி வழியாக அன்னை மரியாள் நமக்கு உதவி செய்கிறார் என்பதை நினைவூட்டும் திருநாள் இது. திருச்சபை விழாக்களின் பட்டியலில் பொது நிகழ்வாக இது இடம் பெற்றுள்ளது.

கடவுள் அனுப்பிய வானதூதர் மரியாவுக்குத் தோன்றி "அருள் மிகப் பெற்றவரே வாழ்க! ஆண்டவர் உம்மோடு இருக்கிறார்" என்றார்.

தூய ஆவியால் முற்றிலும் ஆட்கொள்ளப் பட்ட எலிசபெத்து உரத்த குரலில் மரியாவிடம் "பெண்களுக்குள் நீர் ஆசி பெற்றவர்; உம் வயிற்றில் வளரும் குழந்தையும் ஆசி பெற்றதே!" என்றார். (லூக்கா 2:28,42)

கடவுளிடம் இருந்து வந்த இவ் வாழ்த்தின் வழியாக அன்னை மரியாளின் உதவியை நாம் பெற்றுக்கொள்ள முடியும் செபமாலை திருநாள் நமக்கு எடுத்துரைக்கிறது. மங்கள வார்த்தை செபத்தை 150 முறை சொல்லி செபமாலையாக அர்ப்பணிக்கும் வழக்கம்

**லோரன்ஸ் செல்வநாயகம்...**

11ஆம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றியது. 1208ல் அன்னை மரியாவைக் காட்சியில் கண்ட புனித டொமினிக் தமது சபையினர் மூலம் செபமாலை பக்தியை மக்களிடையே ஊக்குவித்தார்.

15ஆம் நூற்றாண்டில் ஜெர்மனியில் வாழ்ந்த கார்த்தூசியன் துறவி டொமினிக், செபமாலைக்கான விவிலிய சிந்தனைகளை 1410ல் அறிமுகம் செய்தார். 1464ஆம் ஆண்டு மகிழ்ச்சி, துயரம், மகிமை ஆகியவற்றின் 15 மறையுண்மைகளை அருளாளர் அலன் டீ ரூப்பே வெளியிட்டார். 1569ல் திருத்தந்தை புனித 5ம் பயஸ், அதிகாரபூர்வ செபமாலை பக்தியை ஏற்படுத்தினார்.

1571 அக்டோபர் 7ஆந் திகதி உரோமில் நடைபெற்ற செபமாலை திருப்பவனியால் லெப்பன்டோ கடற்போரில் துருக்கியரைத் தோற்கடித்து கிறிஸ்தவர்கள் வெற்றி பெற்றனர்.

அதேநாளில் திருத்தந்தை புனித 5அம் பியுஸ் 'வெற்றியின் அன்னை' விழாவை ஏற்படுத்தினார். 1573ல் திருத்தந்தை 13ம் கிரகோரி இதற்கு 'திருச்செபமாலை விழா' என்று பெயர் மாற்றினார். திருச்செபமாலை விழாவை அக்டோபர் முதல் ஞாயிற்றுக்கிழமைக்கு மாற்றிய திருத்தந்தை 11ம் கிளமெண்ட் 1716ஆம் ஆண்டில் திருச்சபை முழுவதற்கும் அதனை விரிவுபடுத்தினார். செபமாலையின் திருத்தந்தை என்று அழைக்கப்படும் 13ம் லியோ 1883ல் அக்டோபரை செபமாலை மாதமாக அறிவித்தார். இதனால் "திருச்செபமாலையின் அரசியே எங்களுக்காக மன்றாடும்" என்ற மன்றாட்டு தோன்றியது. 1913ல் திருத்தந்தை புனித 10ம் பியுஸ் திருச்செபமாலை விழாவை அக்டோபர் 7ஆந் திகதிக்கு மாற்றம் செய்தார். 1917ஆம் ஆண்டு பாத்திமாவில் காட்சியளித்த கன்னி மரியாள் "நான் செபமாலை அன்னை" என்று கூறினார். இதன் அடிப்படையில் இத்திருநாளை, 'செபமாலை அன்னை' விழா என்று 1960ல் திருத்தந்தை 23ஆம் ஜோன் பெயர் மாற்றம் செய்தார். 2002ல் திருத்தந்தை 2ம் ஜோன் பவுல் இயேசு கிறிஸ்துவின் பணி வாழ்வை மையப்படுத்தி ஒளியின் மறையுண்மைகளை செபமாலையில் இணைத்தார்.

**அக்டோபர் செபமாலை மாதாவுக்கு அர்ப்பணிக்கப்பட்ட மாதம்**



# பரிசுத்த பாப்பரசர் தினம்

திருச்சபையின் தலைவரான பரிசுத்த பாப்பரசரின் தினத்தை கத்தோலிக்க திருச்சபை கடந்த 4 ஆம் திகதி நினைவு கூர்ந்தது.

இந்த ஆண்டிற்கான பாப்பரசர் தினம் கடந்த ஆனிமாதம் நினைவு கூரப்படவிருந்த நிலையில் உலகெங்கிலும் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக பரிசுத்த பாப்பரசர் முதலாவது பிரான்சிஸ் அவர்களின் விசேட வேண்டுகோளுக்கிணங்க அந்த தினம் இம்மாதம் 4ஆம் திகதி நினைவு கூரப்பட்டது.



கத்தோலிக்கத் திருச்சபையின் தலைவராகவும் உலகின் சமாதானத் தூதுவராகவும் நம் ஆண்டவராம் இயேசு கிறிஸ்துவின் பிரதிநிதியாகவும் செயற்பட்டு வருகின்ற நமது திருத்தந்தை முதலாம் பிரான்சிஸ் அவர்கள் எளிமையான வாழ்க்கை முறையை பின்பற்றுபவர்.

ஆண்டவர் முன்னிலையில் நம் அனைவருக்காகவும் பரிந்து பேசுகின்ற அவர், சிறந்த உடல் நலத்துடன் மக்களை விசுவாச பாதையில் வழிநடத்த தேவையான அருள் வரங்களை ஆண்டவர் அவருக்கு அதிகதிகமாக வழங்க வேண்டுமென்று இந்த பாப்பரசர் தினத்தில் மன்றாடுவோம்.

எந்த நேரத்திலும் புன்னகை முகத்துடன் இறைவனின் அன்பையும் அமைதியையும் உலகெங்கும் எடுத்துச் சென்று நற்செய்தியின் தூதுவனாக அவர் விளங்குகின்றார்.

"என் ஆடுகளைமேய்ப்பாயாக என பரிசுத்த வேதாகமத்தில் யோவான் நற்செய்தியில் ஆண்டவர் இயேசு கூறியது போல திருத்தந்தை முதலாம் பிரான்சிஸ் அவர்கள் உள்ளங்களை அமைதிப்படுத்தி ஆழமான விசுவாசத்தில் மக்களை வழி நடத்துவதில் சிறப்பாக செயல்படுபவர்.

சமாதானம் எதிர்பார்ப்பின் பயணமாவதோடு உரையாடல், நல்லிணக்கம் மற்றும் சுற்றுச்சூழல் மாற்றத்தின் அடிப்படையில் அது தங்கியுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

ஏழைகள் மற்றும் கைவிடப்பட்ட மக்கள் தொடர்பில் தெரிவித்துள்ள திருத்தந்தை, இக்காலத்தில் மக்கள் முகம் கொடுக்கும் வறுமையின் மத்தியில் சமாதானம் தொடர்பான எதிர்பார்ப்பின் வெற்றியை நிலைநாட்ட முடியுமானால் அது எம்மை வலிமைப்படுத்தி தடைகளை வெற்றி கொள்ள வழிவகுக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

பரிசுத்த பாப்பரசர் தினத்தை நினைவு கூரும் நாம் புன்னகைக்கும் அமைதியின் தூதுவரான அவரை ஆண்டவர் தாமே மென்மேலும் பலப்படுத்தி வழிநடத்த மன்றாடுவோம். (ஸ)




## 35 வருட நிறைவில் அன்பின் பரிணாமச் சங்கம்






அன்பின் பரிணாமச் சங்கத்தின் 35 வருட நிறைவு விழா நிகழ்வுகள் சகோதரர் பேராசிரியர் எஸ்.ஜே. யோகராசாவின் தலைமையில் கொழும்பு மட்டக்குளி பாம் வீதி மண்டபத்தில் இடம்பெற்றன. நிகழ்வில் சிறப்பதிதியாக கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயர் பேரருட்திரு அன்ரன் ரஞ்சித் ஆண்டகை கலந்துகொண்டு சிறப்புத் திருப்பலியையும் நிறைவேற்றினார். (பட உதவி: ரோஜர் பெர்னாண்டோ)

# பேராசையின் பிரதிபலன்

**நற்செய்தி தரும் வாழ்க்கைப் பாடம்**

நீண்ட காலம் பயன்படுத்தாமல் இருந்தால் நல்ல தண்ணீரும் கெட்ட தண்ணீராக மாற வாய்ப்புண்டு. அல்லதுஇன்று நல்ல தண்ணீராக இருப்பதால் அது என்றும் நல்ல தண்ணீராக இருக்கும் என்ற உத்தரவாதமும் கிடையாது.மனிதர்களும் அப்படித்தான் என்கிறது கடந்த ஞாயிறு நற்செய்தி வாசகம்.

நல்லவர்கள் காலப் போக்கில் கெட்டவர்களாக மாறுவதுண்டு என்றும், அப்படிக் கெட்டவர்களாக மாறுபவர்கள் திராட்சைக் கனிகளைத் தருவதற்குப் பதிலாக புளித்த கனிகளை அல்லது காட்டுப் பழங்களையே தருவர் என்றும் அது குறிப்பிடுகிறது

கடந்த ஞாயிறு நற்செய்தி வாசகத்தில் (மத் 21:3343) திராட்சைத் தோட்டம் உருவகம் முன்வைக்கப்படுகிறது.

நிலக்கிழார் ஒருவர் ஒரு திராட்சைத் தோட்டம் உருவாக்கி சுற்றிலும் வேலி அடைத்து பிழிவுக் குழி வெட்டி காவல் மாடமும் கட்டி தோட்டத் தொழிலாளர்களிடம் குத்தகைக்கு விடுகின்றார். அவர் அப்படி குத்தகைக்கு விடும்போது அவர்கள் நல்லவர்களாகத் தெரிகின்றனர். அல்லது நல்லவர்களாக இருக்கின்றனர். அவர்களுக்கு எந்தக் குறையும் இல்லாதவாறு தலைவர் பார்த்துக் கொள்கின்றார். தலைவர் அளவுக்கு மீறி நல்லவராக இருக்கின்றார். அல்லது தாராள மனதுடையவராக இருக்கின்றார்.

அவரது தாராள குணத்தையும் நன்மைத்தனத்தையும் பணியாளர்கள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்கின்றனர். தங்கள் தலைவர் தங்களிடம் தாராளமாக இருக்கிறார் ஆகவே தாங்களும் தாராளமாக உழைக்க வேண்டும் என்ற எண்ணம் இல்லாமல், அதற்கு எதிர்மாறாக நடக்கின்றனர்.

நம் வாழ்விலும் இதை நாம் பார்க்கலாம். நாம் யாரிடம் தாராளமாக இருக்கிறோமோ அல்லது யாரிடம் நம் நன்மைத்தனத்தைக் காட்டுகிறோமோ அவர்கள் தாம் நம் முதல் எதிரிகளாக மாறுவர். அல்லது தங்களுடைய குறுகிய எண்ணத்தால் நம்மை வாட்டி வதைப்பர் அல்லது நம் அழிவை விரும்புவர்.



நற்செய்தியில், நல்லவர்களாக இருந்த அவர்கள் மூன்று நிலைகளில் தீயவர்களாக மாறுகின்றனர்.தலைவருக்கு உரிய கனிகளைக் கொடுக்க மறுத்தனர். இது அவர்களுடைய பேராசையின் வெளிப்பாடு. 'என்னுடையதும் என்னுடையது. உன்னுடையதும் என்னுடையது' என்ற மனப்பான்மை அவர்களிடம் வளர ஆரம்பிக்கிறது. இந்த மனப்பாங்குதான் திருட்டு மனப்பான்மை. தலைவரது பணியாளர்களுக்குத் தீங்கிழைக்கின்றனர். இது அவர்களுடைய தீய எண்ணத்தைக் காட்டுகிறது. தலைவன்மேல் உள்ள கோபத்தைத் தலைவன்மேல் காட்டுவதற்குப் பதிலாக, அப்பாவிகளான பணியாளர்கள்மேல் காட்டுகின்றனர்.

அவர்களது தீய எண்ணம் அவர்களுயை கோபத்தைவிடக் கொடுமையானது. அதிகம் கோபப்படுகிறவர்கள் அருகில் இருக்கக் கூடாது என்று விவிலியம் சொல்கிறது. ஏனெனில் கோபத்தில் அவர்கள் எப்படிச் செயலாற்றுவார்கள் என்பது யாருக்கும் தெரியாது.தலைவரது ஒரே மகனைக் கொன்று போடுகின்றனர். இது அவர்களுடைய பொறாமை உணர்வைக் காட்டுகிறது. 'என்னிடம் இல்லாத ஒன்று அவனிடம் இருக்கிறது' என்று எண்ணுகின்ற அவர்கள், திராட்சைத் தோட்டத்தை உரிமையாக்கிக் கொள்ளும் நோக்கத்துடன் தலைவரது ஒரே மகனை அழிக்கத் துணிகின்றனர்..ஆக நல்லவர்களாக இருந்த பணியாளர்கள் தங்களது பேராசை, தீய எண்ணம், பொறாமை ஆகியவற்றால் தலைவருக்குத் தீங்கிழைத்ததுமல்லாமல் தங்களுக்கும் தீங்கிழைத்துக் கொள்கின்றனர். தலைவர் அவர்களை ஈவிரக்கமின்றி ஒழித்து தோட்டத்தை வேறொரு தரப்பினருக்குக் கொடுக்கின்றார்.

தலைவர் தாராள உள்ளம் கொண்டவராக இருந்தாலும் கண்டிப்புடன் செயலாற்ற வேண்டிய நேரத்தில் கண்டிப்புடன் செயலாற்றியுள்ளார்.

யாரும் எதிர்பாராத ஒன்றைத் தலைவர் செய்கின்றார்.

ஒதுக்கப்பட்டுக் கிடந்த பணியாளர்கள் கையில் தலைவர் தனது தோட்டத்தைக் கொடுக்கின்றார். தலைவரை அழித்து விடலாம் என எண்ணியவர்கள் அழிந்து போகின்றனர்.கடந்த ஞாயிறு முதல் வாசகத்திலும் ஏறக்குறைய இதே நிகழ்வுதான் நடக்கிறது. 'என் அன்பரின் திராட்சைத் தோட்டம் பற்றிக் கவி பாடுவேன்' என்று ஏசாயா இறைவாக்கினர், தன் ஆண்டவராகிய கடவுளை, 'அன்பர்' என அழைக்கிறார்.

இங்கே திராட்சைத் தோட்டம் என்பது இஸ்ரயேல் மக்களைக் குறிக்கிறது. இஸ்ரயேல் மக்கள் பாலும் தேனும் பொழியும் கானான் நாட்டில் குடியேறியவுடன் ஒரு வகையான தேக்கநிலையை அடைகின்றனர்.

**(மிகுதி அடுத்த வாரம்)**

அருட்பணி
**யேசு கருணாநிதி ...**

# கிழக்கின் குரல்



# சுற்றாடலை பாதுகாக்க அனைவரும் ஒன்றுபட்டு பணியாற்ற வேண்டும்

## மட்டக்ளப்பில் அமைச்சர் மஹிந்த அமரவீர

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்களின் பெயர்கரளைப் பயன்படுத்தி மணல் அகழ்வுக்கு அனுமதி கோரினால் அதிகாரிகள் அனுமதி கொடுக்க வேண்டாம் என சுற்றாடல் துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

மட்டக்களப்புக்கு விஜயம் செய்த அமைச்சர், மண்முனை வடக்கு பிரதேச செயலகத்திலுள்ள அதிகாரிகளை சனிக்கிழமை (03) சந்தித்த போது அங்கு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

மட்டக்களப்பு அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜாவின் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அமைச்சர், சுற்றாடலை பாதுகாப்பது நமது அனைவரினதும் கடமையாகும். சுற்றாடலை பாதுகாக்கின்ற விடயத்தில் அனைவரும் ஒன்றுபட்டு பணியாற்ற வேண்டும் என்றார்.

ஜனாதிபதி மற்றும் பிரதமர் அமைச்சர்களின் பெயர்களை பயன்படுத்தி மண் வியாபாரத்தில் ஈடுபடுவோர் மீது மிகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இயற்கை வளங்களை அழிப்பதற்கு நாம் ஒரு போதும் இடமளிக்க முடியாது. இந்த மாவட்டத்திலுள்ள மணல் வளத்தினை மாவட்டத்திலுள்ள மக்களே அதிகளவில் பயன்படுத்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். சுற்றாடலை பாதிக்கும் எந்த நடவடிக்கைகளையும் நாம் அனுமதிக்க முடியாது.

அனுமதியுடன் மணல் அகழ்வில் ஈடுபடுவோர் கட்டாயமாக சுற்றாடலை பாதுகாக்க வேண்டும்.

எமது அதிகாரிகள் வழங்கும் அறிவுறுத்தலை பின் பற்றாமல் மணல் அகழ்வில் ஈடுபட்டால் இதனை அரசாங்கம் பொறுப்பேற்கும் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் கூறி வைக்க விரும்புகின்றேன்.



கிராம உத்தியோகத்தர்கள் கள உத்தியோகத்தர்கள் சுற்றாடலை பாதுகாக்கின்ற விடயங்களில் முன்னின்று செயற்பட வேண்டும் எனவும் மேலும் தெரிவித்தார்.

இந்த சந்திப்பில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா, மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் எம். வாசுதேவன், கிழக்கு மாகாண மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பணிப்பாளர் எம்.சிவகுமார், புவிச்சரிதவியல் அளவை சுரங்கப்பணியகத்தின் பிராந்திய முகாமையாளர் எம்.ஏ.எம்.பாரிஸ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# அரச உத்தியோகத்தர்களுக்கு பஸ்சேவை ஆரம்பிப்பு



கல்லடி குறூப் நிருபர்

மட்டக்களப்பிலிருந்து திருகோணமலைக்கான புதிய பஸ் சேவை ராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனினால் நேற்று இலங்கை போக்குவரத்துச் சபையின் மட்டக்களப்பு பிரதான பஸ் தரிப்பு நிலையத்திலிருந்து உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கடந்த பல வருடங்களாக மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து திருகோணமலைக்கு சேவைக்காக நாளாந்தம் சென்று வரும் நூற்றுக்கு மேற்பட்ட அரச உத்தியோகத்தர்கள் பல்வேறுபட்ட சிரமங்களுக்கு மத்தியில் தமது சேவை நிலையங்களுக்கு கடமைக்காக சென்று வந்த நிலையில், இந்த பஸ் சேவை நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் இலங்கை போ.சபையின் கிழக்கு பிராந்திய முகாமையாளர் எச்.ஏ.எம். உவைஸ் கலந்து கொண்டார்.

# அரச உத்தியோகத்தர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்

ஒலுவில் விசேட நிருப

பொருளாதார வளர்ச்சிக்கு அரசாங்க உத்தியோகத்தர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டுமென அக்கரைப்பற்று மற்றும் அம்பாறை பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் ஆர். எம்.ஆர். ஹேமந்த தெரிவித்தார்.

அக்கரைப்பற்று பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் பிரிவுக்குட்பட்ட உப தபாலகங்களில் கடமையாற்றும் உப தபால் அதிபர்களுக்கான பயிற்சி செயலமர்வு ஞாயிற்றுக்கிழமை (04) நிந்தவூர் மாவட்ட தொழில் பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அஞ்சல் அத்தியட்சகர் அலுவலக பிரதம இலிகிதர் ஏ.சீ. நளீர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் எஸ். ஜெகன் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், திணைக்களத்தின் அபிவிருத்திக்காகவும் சேவையுடனும் வருமானத்தை ஈட்டக் கூடிய வகையிலும் தபால் திணைக்களம் மாறி வருகின்றது. தபால் திணைக்களத்தின் வருமானத்தை அதிகரிப்பதற்காக புதிய தொழில்நுட்ப ரீதியிலான சேவைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.



தபால் திணைக்களம் நவீன தொழில்நுட்ப ரீதியிலான சேவைகளை வழங்கி மக்களின் நன்மதிப்பை பெற்ற திணைக்களமாக மாறியுள்ளது.

உலகில் எவ்வாறான தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்து காணப்பட்டாலும் தபால் சேவையை மக்களிடமிருந்து பிரிக்க முடியாது.

தபால் திணைக்களத்தை மேலும் அபிவிருத்தி செய்து மக்களுக்கு விரைவாகவும் சிறப்பாகவும் சேவையை வழங்குவதற்காக அரசாங்கத்தினால் பல வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

புதிய தகவல் தொழில்நுட்ப ரீதியிலான அறிவினை ஒவ்வொரு உத்தியோகத்தரும் அறிந்திருத்தல் வேண்டும். அப்போதுதான் எமது திணைக்களத்தின் சேவைகளை பொது மக்களுக்கு விரைவாகவும் வினைத்திறனுடையதாகவும் வழங்க முடியும்.

திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத் திட்டங்களுக்கு உத்தியோகத்தர்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அப்போது தான் திணைக்களத்தின் இலக்கை அடைவதோடு சிறந்த சேவையையும் வழங்க முடியுமென்றார்.

# நாளைய தலைவர்களை உருவாக்குவதில் முக்கிய பங்காற்றுவது பாலர் பாடசாலைகளாகும்

## சட்ட வைத்தியர் எஸ்.எம்.றிபாஸ்தீன்

பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்



இன்றைய சிறுவர்களை நாளைய தலைவர்களாக உருவாக்கும் பொறுப்பில் முக்கிய பங்கு வகிப்பது பாலர் பாடசாலையாகும் என அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் சட்ட வைத்தியர் எஸ்.எம்.றிபாஸ்தீன் தெரிவித்தார்.

உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு பாலமுனை ஹெப்பி கிட்ஸ் பாலர் பாடசாலை மாணவர்களிடையே நடைபெற்ற விளையாட்டு போட்டியும், மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் நேற்று முன்தினம் பாலமுனையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உயையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து இங்கு உரையாற்றுகையில்,

மாணவர்கள் வகுப்பறைக் கற்றலுக்கு மாத்திரம் முக்கியத்துவம் அளிக்காது இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கும் முன்னுரிமை வழங்க வேண்டும். அதே போன்று பிள்ளைகளின் சுகாதார மற்றும் ஆரோக்கியமான உணவு பழக்க வழக்கங்களிலும் கவனம்செலுத்த வேண்டும்.

சிறுவர் தினத்தை முன்னிட்டு பல்வேறு விளையாட்டு நிகழ்வுகள் நடைபெற்றன. இதில் மாணவர்கள் சிறந்த உற்சாகத்துடனும் ஊக்கத்துடன் செயற்பட்டதை அவதானிக்க முடிந்தது. ஒரு மாணவனின் ஆளுமை விருத்திக்கு பாடசாலைகளில் இடம்பெறுகின்ற விளையாட்டுப் போட்டிகள் ஆக்கத்திறன் போட்டிகள், இலக்கியப் போட்டிகள் மாணவர் மன்றங்கள் என பல்வேறு நிகழ்ச்சிகள் பங்களிப்பு செய்கின்றன.

# அடையாளம் காண உதவுமாறு கோரிக்கை



காரைதீவு குறூப் நிருபர்

ஒருமாதகாலம் அடையாளம் காணப்படாத நிலையில் வயோதிபர் ஒருவரின் சடலம் உள்ளது. குறித்த வயோதிபர் கடந்த ஆகஸ்ட் மாதம் காரைதீவு பிரதான வீதியில் விபத்துக்குள்ளாகி படுகாயமடைந்த நிலையில் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டிருந்தார். சிகிச்சை பலனின்றி குறித்த நபர் கடந்த மாதம் 01.09.2020 அன்று உயிரிழந்துள்ளார். ஆனால் உயிரிழந்தவரின் உடல் அடையாளம் காணப்படாத நிலையில் ஒரு மாதகாலமாக மட்டக்களப்பு வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

குறித்த நபரை அறிந்தவர்கள், அவரது உறவினர்கள் பொலிஸ் நிலையத்துடன் தொடர்புகொள்ளுமாறு சம்மாந்துறை பொலிஸ் நிலைய அதிகாரி தெரிவித்தார்.

# திருமலையில் சமாதான நீதவான்கள் கௌரவிப்பும் மலர் வெளியீடும்



திருமலை மாவட்ட விசேட நிருபர்

திருகோணமலை மாவட்ட சமாதான நீதவான்கள் கௌரவிப்பும் 'நீதியின் நிஜம் மலர்' வெளியீடும் கிண்ணியா பொது நூலக மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை (04) மிக விமரிசையாக நடை பெற்றது.

இந் நிகழ்விற்கு திருகோணமலை மாவட்ட சமாதான நீதவான்கள் பேரவைத் தலைவர் ஹனிபா சஹீட் தலைமை வகித்தார்.

இந் நிகழ்விலற்கு பிரதம விருந்தினராக திருகோணமலை நீதிமன்ற பதில் நீதவான் எம்.வீ. அன்பார், சிறப்பு விருந்தினராக கிண்ணியா நகர சபை தவிசாளர் எஸ்.எச்.எம். நளீம், திருகோணமலை மாவட்ட சமாதான நீதிவான்கள் பேரவை செயலாளர் எம்.ரீ. சபறுள்ளாகான், உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# திறன்கள் விருத்தி செய்யப்படாமையே இன்று இளைஞர்கள் வழிதவற காரணம்

## ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபை இணைப்பாளர்

சம்மாந்துறை கிழக்கு தினகரன் நிருபர்

இளைஞர்கள் இன்று போதைப் பொருள் பக்கம் செல்வதற்கு மிக முக்கிய காரணம் அவர்களுக்குள் காணப்படுகின்ற திறன்கள் விருத்தி செய்யப்படாமையாகும் என தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையின் வட,கிழக்கு மாகாண இணைப்பாளர் எம்.எம். ஜீ.பீ.எம்.றஸாட் தெரிவித்தார்.

சம்மாந்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜயலத் தலைமையில் நேற்றுமுன்தினம் (04) இடம் பெற்ற நிகழ்வில் வளவாளராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில், இன்றைய இளைஞர்களுக்குள்ளே பல திறமைகள் காணப்படுகின்றன. புத்தகக் கல்வியில் மாத்திரம் முக்கியத்துவம் கொடுக்காமல் அவர்களுக்குள்ளே ஒழிந்திருக்கின்ற திறமைகளை இனங்கண்டு தொழிற் கல்வியினை வழங்குவதன் மூலம் சமூகத்தில் நல்லதொரு பிரஜையாக உருவாக்க முடியும்.



இளைஞர்களின் திறன்களை கண்டெடுத்து அதனை விருத்தி செய்ய வேண்டும். அவர்களின் திறன்களை வளர்த்தெடுக்கக் கூடிய இடமாக அரச தொழிற் பயிற்சி நிறுவனங்கள் காணப்படுகின்றன. போதைப் பொருள் பாவனைக்கு அடிமைப்பட்ட இளைஞர்களின் பிரதான பிரச்சினை வேலையின்மையாகும். இதனால் இளைஞர்கள் பிழையான வழியில் செல்கின்றார்கள். இவர்களை நாட்டின் நற்பிரஜையாக மாற்றியமைக்க நாங்கள் சிறந்த வழிகாட்டலை முன்னெடுக்க வேண்டும்.

இன்று பாடசாலை மாணவர்களை நோக்காகக் கொண்டு போதைப் பொருள் பாவனை வந்துள்ளது.

போதைப் பொருள் உற்பத்தியாளர்களும், கடத்தல்காரர்களும் பல்வேறு உத்திகளைப் பயன்படுத்தி மாணவர்கள் மத்தியில் போதைப் பொருளை அறிமுகப்படுத்துகின்றார்கள். அவ்வாறான போதைப்பொருளாகத்தான் மாணவர்கள் மத்தியில் இனிப்பு பாக்கு விற்கப்படுகின்றது. இது போன்ற விடயங்களில் ஆசிரியர்கள் உள்ளிட்ட அனைவரும் கவனம் செலுத்த வேண்டும்.

# நூல்களின் அறிமுகம்

மண்டூர் குறூப் நிருபர்

மட்டக்களப்பு பெரியார் வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில் ஜென்ம பூமியே மற்றும் மலைகளை வரைதல் ஆகிய இரு நூல்களின் அறிமுக நிகழ்வு மட்டு. பயணியர் வீதியிலுள்ள cafe chill விடுதியில் நேற்றுமுன்தினம் (04) இடம்பெற்றது.

சென்று வருகிறேன் ஜென்ம பூமியே நூல் தொடர்பாக நிலாந்தியும் மலைகளை வரைதல் தொடர்பாக ஜெயதீபனும் அறிமுக உரையாற்றியதுடன், நூல்கள் தொடர்பான ஏற்புரை கலந்துரையாடலை நுவரெலியா மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் எழுத்திலக்கிய ஆளுமையுமான ம.திலகராஜ் ஆற்றியிருந்தார்.





ஒலுவில் வெளிச்ச வீட்டு பிரதான வீதியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கிராம சுத்தப்படுத்தல் தினத்தை ஒட்டி அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி தலைமையில் கிராம உத்தியோகத்தர்கள், பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் இணைந்து துப்பரவுப் பணியில் ஈடுபட்ட போது. படம்: ஒலுவில் நிருபர்



"கிராமத்தை சுத்தப்படுத்தல் 2020" வேலைத்திட்டத்திற்கமைவாக பாலமுனை அல் ஹிக்மா வித்தியாலய முன்வீதி கிராம உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் பொதுமக்களின் பங்கு பற்றுதலுடன் சிரமதான நிகழ்வு இடம் பெறுவதைக் காணலாம். படம்: பாலமுனை தினகரன் நிருபர்

# கிழக்கின் குரல்



# திலீபனின் போராட்டத்தை இழிவுபடுத்த முடியாது

## இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன்

(கல்லடி குறூப் நிருபர்)

திலீபனின் அகிம்சைவழி போராட்டத்தை நாங்கள் இழிவுபடுத்த முடியாது என தபால் சேவைகள் மற்றும் ஊடக தொழில் அபிவிருத்தி ராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்தார்.

உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு ஞாயிற்றுக்கிழமை (04) மட்டக்களப்பு புளியந்தீவு மெதடிஸ்த திருச்சபையில் கிறிஸ்தவ மத நிகழ்வில் கலந்து கொண்ட அவர் மத வழிபாட்டின் பின்னர் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இவ்வாறு தெரிவித்தார்.

நாங்கள் கடந்த காலங்களில் கூட திலீபனின் அகிம்சைவழி போராட்டத்தை கொச்சப்படுத்தியவர்கள் அல்ல, அதனை அசிங்கப்படுத்தியவர்களும் அல்ல, நாங்கள் அதனை மதித்திருக்கின்றோம். திலீபனின் கனவு என்ன?

தமிழ் மக்களும் ஏனைய சமூகத்துக்கு இணையாக வாழவேண்டும். இன்று அரசாங்கத்தோடு இணைந்திருந்து மக்கள் ஒரு நிம்மதியான வாழ்கையை வாழ வேண்டும் என்பதற்காக நாங்கள் வேலை செய்து கொண்டிருக்கின்றோம்.



தீலீபனை வைத்துக் கொண்டு அரசியல் பிழைப்பு நடத்துகின்ற ஒரு சிலர் எங்கள் மீது நாங்கள் அமைதியாக இருந்தோம் என குற்றமாக கருதுகின்றனர். நாங்கள் ஆரம்ப கால கட்டத்தில் இருந்து இப்போதும் திலீபனின் அந்த அகிம்சைவழி போராட்டத்தை மதிக்கின்றோம்.

பிரச்சினையை வைத்து நாங்கள் இனிமேல் அரசியல் செய்ய முடியாது. நாங்கள் அரசாங்கத்தோடு இருப்பது என்பது பிரச்சினையை வைத்துக் கொண்டு எங்களுடைய குறுகிய அரசியல் நோக்கத்துக்காக அரசியலை செய்ய முடியாது.

நாங்கள் வடக்கு, கிழக்கில் இடம்பெற்ற கடையடைப்பு ஹர்த்தாலை குழப்பவில்லை. அதற்கு எதிர்மாறாக செயற்படவில்லை. அந்த சாத்வீக போராட்டத்துக்கு மறுப்பு தெரிவித்ததில்லை. கடந்த காலத்தில் 42 க்கு மேற்பட்ட போராட்டங்களை மேற்கொண்டோம். மக்களின் நியாயமான போராட்டங்களை மதிக்கின்றோம்.

ஒரு சில அரசியல்வாதிகள் கடந்த காலங்களில் நடந்த போராட்டத்தில் வீடுகளிலே ஒழிந்து கொண்டிருந்தார்கள். நாங்கள் அவ்வாறனவர்கள் அல்ல. அரசாங்கத்துடன் இருக்கின்றோம் என்பதற்காக எங்களது மக்களின் உரிமைகள் மீறப்படுகின்றபோது நாங்கள் அரசாங்கத்துக்குள் இருந்தாலும் எங்கள் மக்கள் சார்ந்தகுரல் எப்போதும் ஒலித்துக் கொண்டிருக்கும் என அவர் தெரிவித்தார்.



மூதூர் மக்கள் அபிவிருத்தி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற சிறுவர் தின விழா நிகழ்வில் மாணவர்கள் கலைநிகழ்ச்சியில் பங்கு கொண்ட போது.. (படம்; மூதூர் தினகரன் நிருபர்)

# காரைதீவை சுத்தம் செய்யும் வேலைத்திட்டம்

காரைதீவு குறூப் நிருபர்



இராணுவத்தின் கிழக்கு மாகாண கட்டளை தலைமையகத்தின் ஏற்பாட்டில் 'கிராமங்களை சுத்தம் செய்யும் வேலை திட்டம்' இராணுவத்தினரும் காரைதீவு பிரதேச செயலகமும் இணைந்து காரைதீவு பிரதேச சபை. சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தின் பங்களிப்புடன் காரைதீவு பிரதேச செயலகப் பிரிவிலுள்ள 17 கிராம சேவகர் பிரிவுகளிலும் கிராமங்களை சுத்தப்படுத்தும் வேலைத்திட்டம் ஞாயிற்றுக்கிழமை (04) இடம்பெற்றது.

பிரதேச செயலாளர் சிவ. ஜெகராஜன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில், காரைதீவு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் ஜீவா, உதவி பிரதேச செயலாளர், கிராம நிர்வாக உத்தியோகத்தர் பொது சுகாதார பரிசோதகர்கள், இராணு வத்தினர், கிராம உத்தியோகத்தர்கள் ,பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலரும் இணைந்துகொண்டனர்.

காரைதீவு பொது இடங்கள் மற்றும் காணிகள் சிரமதானம் மூலம் சுத்தம் செய்யப்பட்டது.

# ஏறாவூரில் இருவர் கைது

ஏறாவூர் நிருபர்

மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள சில பிரதேசங்களில் அண்மைக் காலமாக இடம்பெற்றுவந்த திருட்டுச் சம்பவங்களின் சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக, ஏறாவூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எச்.டபிளியு.கே. ஜயந்த தெரிவித்துள்ளார்.

இவர்களிடமிருந்து தங்க ஆபரணங்கள் மற்றும் மலிகைக்கடை பொருட்களும் மீட்கப்பட்டுள்ளன.

ஏறாவூர் பொலிஸ் குற்றப்பிரிவுப் பொறுப்பதிகாரி ஜி. உதயகுமார தலைமையிலான குழுவினர் இதுதொடர்பான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

கொம்மாதுறை, செங்கலடி மற்றும் எல்லை வீதி ஆகிய பிரதேசங்களில் அமைந்துள்ள மலிகைக் கடைகளில் பெருந்தொகையான பொருட்களைக் கொள்ளையிட்ட நபரிடமிருந்து பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

இதேவேளை கிரான் கோரகல்லிமடு பிரதேச வீடொன்றில் சுமார் ஒன்பது இலட்சம் ரூபா பெறுமதியான தங்க ஆபரணம் கொள்ளையிடப்பட்ட சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டு ஏற்கனவே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள மற்றுமொரு நபர் வழங்கிய தகவலின் அடிப்படையில் அந்த ஆபரணத்தையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டுள்ள நபர்கள் ஏறாவூர் சுற்றலா நீதிமன்றில் ஆஜர்செய்யப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை;

# பயிற்சி ஆசிரியர்களின் அனுமதி மறுஅறிவித்தல் வரை இடைநிறுத்தம்

அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்)

அட்டாளைச்சேனை அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு இன்று செவ்வாய்க்கிழமை புதிதாக அனுமதிக்கப்படவிருந்த பயிற்சி ஆசிரியர்களின் அனுமதி நடவடிக்கைகள் அனைத்தும் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக கலாசாலை அதிபர் பி.பரமேஸ்வரன் தெரிவித்தார்.

இவ் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு 2020/2021 ஆம் கல்வி ஆண்டுக்காக பயிற்சியினைப் பெற்றுக் கொள்ளும் வகையில் புதிய ஆசிரியர் பயிற்சியாளர்களை கலாசாலைகளுக்கு உள்வாங்கும் நடவடிக்கைகள் இன்று (06) இடம் பெறுவதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இருந்த போதிலும், நாட்டில் திடீரென கொவிட் 19 சமூக மட்டப் பரவல் கண்டறியப்பட்டதனையடுத்து இவ் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு இன்றைய தினம் புதிதாக அனுமதிக்கப்படவிருந்த பயிற்சி ஆசிரியர்களின் அனுமதி நடவடிக்கைகளை மறு அறிவித்தல் வரை தற்காலிகமாக இடை நிறுத்துமாறு கல்வி அமைச்சு பணித்திருப்பதாக கலாசாலை நிருவாகத்தினர் தெரிவிக்கின்றனர்.

அட்டாளைச்சேனை அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு உள்வாரி பயிற்சி ஆசிரியகளை தெரிவு செய்வதற்கான நேர்முகப்பரீட்சை கடந்த மாதம் இடம்பெற்றது. இந்நேர்முகப் பரீட்சையின் மூலம் தெரிவு செய்யப்பட்ட பயிற்சி ஆசிரியர்களுக்கான கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்படவிருந்தன. இப் பயிற்சிக் கலாசாலையில் ஆங்கிலம், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், இஸ்லாம், இரண்டாம் மொழி தமிழ் மற்றும் உடற் கல்வி ஆகிய பாட நெறிகளில் பயிற்சியினைத் தொடர்வதற்காக 235 பயிற்சி ஆசிரியர்கள் இணைத்துக் கொள்ளப்படுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இதற்கமைவாக ஆரம்பக் கல்வி பாடநெறிக்கு 186 பேரும், ஆங்கிலப் பாடநெறிக்கு 21 பேரும், இஸ்லாம் பாடநெறிக்கு 11 பேரும், உடற்கல்வி பாடநெறிக்கு 10 பேரும், இரண்டாம் மொழி தமிழ் பாடநெறிக்கு ஐவரும், தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பவியல் பாடநெறிக்கு இருவரும் இணைத்துக் கொள்ளப்படவிருந்தனர்.

இப்பயிற்சி நெறிகளுக்காக தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான அழைப்புக் கடிதங்கள் உரியவர்களுக்கு எற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், இவர்கள் மறு அறிவித்தல் வரை கலாசாலைக்கு சமுகமளிக்க வேண்டியதில்லை என அதிபர் மேலும் தெரிவித்தார்.

# மட்டக்களப்பு வானிலை அவதான நிலையத்தின் சிரேஷ்ட பொறுப்பதிகாரி சூரியகுமாரன் ஓய்வு

பெரியபோரதீவு தினகரன் நிருபர்)



மட்டக்களப்பு வானிலை அவதான நிலையத்தின் சிரேஸ்ட பொறுப்பதிகாரி கே.சூரியகுமாரன் 35 வருட அரச சேவையிலிருந்து நேற்று திங்கட்கிழமை ஓய்வு பெற்றுச் செல்கின்றார்.

மட்டக்களப்பு மாவட்டத்திலும், இலங்கையின் ஏனைய பல பாகங்களிலுமிருந்து மிகவும் அர்ப்பணிப்புடன் தனது சேவையை மேற்கொண்டு வந்த அவரது சேவை இலங்கை மக்களுக்கு மிகவும் சிறந்த சேவையாக அமைந்திருந்தது என அவரது ஓய்வையடுத்து பலரும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

வானிலை அவதான நிலையத்தின் நிலையப் பொறுப்பதிகாரியாக அவர் கடமையாற்றி வந்ததோடு, வானிலை தொடர்பில் ஊடகவியலாளர்கள், துறைசார்ந்த அரச மற்றும் அரச சார்பற்ற உத்தியோகஸ்த்தர்கள், கடற்தொழிலாளர்களுக்கும் விவசாயிகள், உள்ளிட்ட பலருக்கும் வளவாளராகக் கலந்து கொண்டு பல பயிற்சிகளையும் வழங்கி வந்ததோடு, பொது மக்களுக்கும் இவ்விடயத்தில் உடனுக்குடன் அறிவுறுத்தல்களையும் மேற்கொண்டு வந்தவராவார்.

ஓய்வு பெற்றுச் செல்லும் வானிலை அவதான நிலையத்தின் சிரேஸ்ட பொறுப்பதிகாரி க.சூரியகுமாரன் தெரிவித்துள்ளார்.

# மின்னியலாளர்களுக்கு உரிமம் வழங்குவது தொடர்பான செயலமர்வு

கந்தளாய் தினகரன் நிருபர்

திருகோணமலை மாவட்டத்தில் மின்னியலாளர்களாக சேவையாற்றுபவர்களுக்கு தொழில் துறை உரிமம் வழங்குவது தொடர்பிலான விழிப்புணர்வு செயலமர்வு ஞாயிற்றுக்கிழமை (4) திருகோணமலை உவர்மலை விவேகானந்தாக் கல்லூரியில் நடைபெற்றது.

மின்னியலாளர்களாக அதிகமானோர் செயற்படுவதாகவும் அவர்களில் அதிகமானோர் நிபுணத்துவம் பெற்றவர்களாக இருந்தபோதும் உரிய தொழில்துறைக்கான அனுமதிப்பத்திரம் இன்றி செயற்படுகிறார்கள்.

உரிய தொழிலில் ஈடுபடுபவர்கள் குறித்த பதிவு மற்றும் உரிமங்களை பெற கூடிய கவனம் செலுத்துவது காலத்தின் தேவையாக அமைவதாக பட்டிணமும் சூழலும் பிரதேச செயலாளர் ஜே.எஸ்.அருள்ராஜ் தெரிவித்தார்.

இத்துறையில் ஈடுபட்டுள்ளவர்களின் பதிவுகளை மேற்கொண்டு தொழில் தகைமை சான்றிதழ் அற்றவர்களுக்கு உரிய சான்றிதழ் வழங்கல் போன்ற செயற்பாடுகள் உரிய திணைக்களங்களை இணைத்து இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு மேற்கொண்டு வருவதாக இதன்போது பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவின் உதவிப் பணிப்பாளர் ஜயசூரியன் தெரிவித்தார்.

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில், இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் நிறுவன தொடர்பாடல் பிரிவின் பணிப்பாளர் ஜயனாத் ஹேரத், நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பொ. பிரதீபன், உட்பட அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

# விரைவில் மாகாண சபை தேர்தல் நடாத்தப்படும்

## தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர்

(வெல்லாவெளி தினகரன் நிருபர்)

கிழக்கு மாகாண சபை தேர்தல் விரைவில் நடாத்தப்படும், அதற்கான அழுத்தங்களை நாங்கள் வழங்கியுள்ளோம். விரைவில் கிழக்கு மாகாண சபை தேர்தல் நடாத்தப்படும் என தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் பூ.பிரசாந்தன் தெரிவித்தார்.

மாகாண சபை தொடர்பில் யார் எதனைக் கூறினாலும் மாகாண சபை தேர்தலை நடாத்துவதில் அரசாங்கம் தெளிவாகவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆற்றல் பேரவையும் பிரதேச அபிவிருத்தி வங்கியும் இணைந்து நடாத்திய சிறுவர் தின நிகழ்வு நேற்று (5) ஆரையம்பதியில் நடைபெற்றது.

ஆரையம்பதி சிறுவர் பூங்காவில் ஆற்றல் பேரவையின் தலைவரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளருமான பூ.பிரசாந்தன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.



இந் நிகழ்வில், மண்முனைப்பற்று பிரதேச சபையின் தவிசாளர் சோ.மகேந்திரலிங்கம், கிராமிய அபிவிருத்தி வங்கியின் கிழக்கு பிராந்திய விரிவாக்கல் பிரிவிற்கான முகாமையாளர் மற்றும் வங்கியின் முகாமையாளர்கள், உத்தியோகத்தர்கள், ஆற்றல் பேரவையின் உறுப்பினர்கள், பாடசாலை அதிபர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

தொடர்ந்தும் உரையாற்றிய பிரசாந்தன்,

கடந்த அரசாங்கம் இழைத்த மோசமான தவறின் காரணமாக, இன்றுவரை கிழக்கு மாகாண சபைத் தேர்தலானது நடத்தப்படாமல் நீண்ட காலமாக தள்ளிச் செல்கின்றது. நாங்கள் கடந்த வாரம் அரசாங்கத்துடன் இது தொடர்பில் பேசியிருந்தோம். மாகாண சபை தேர்தல் நடத்தப்படக்கூடாது, அது தேவையற்றது என பலரும் பல கருத்துக்களை சொல்லிக்கொண்டு இருக்கின்றார்கள். யார் என்ன பேசினாலும் அரசாங்கம் மிகத் தெளிவாக இருக்கின்றது என நாம் நம்புகின்றோம். சிவநேசதுரை சந்திரகாந்தன் அவர்களின் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியும் மிகத் தெளிவாக இருக்கின்றது.



'லங்கையர் நம்பிக்கை நிதியம்' அமைப்பினர் வறுமைக் கோட்டில் வாழும் மக்களுக்கு உடுதுணிகள் வழங்கி வருகின்றனர். இந்நிகழ்வில் அமைப்பின் ஸ்தாபக தவிசாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான பொறியியலாளர் ஜாஹ்பர் மொகமட் இஸ்மாயில் பெண்ணொருவருக்கு உடுதுணி பொதியொன்றை வழங்கி வைப்பதையும், மௌலவி எ.எல். அஷ்ரப், அமைப்பின் இணைப்பு அதிகாரி பொறியியலாளர் எம்.எ. ரமீஸ் ஆகியோரும் காணப்படுகின்றனர்.

படம்: அட்டாளைச்சேனை குறூப் நிருபர்

# சந்தேக நபர்களின் விளக்கமறியல் நீடிப்பு

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள காத்தான்குடி மற்றும் காத்தான்குடியை அண்டிய பிரதேசங்களைச் சேர்ந்த 61 பேரினதும் விளக்கமறியல் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு இடம்பெற்ற தாக்குதலின் பின்னர் ஸஹ்றான் குழுவோடு தொடர்புடையவர்கள் என்றும் ஹம்பாந்தோட்டை மற்றும் நுவரெலியா போன்ற இடங்களுக்கு பயிற்சிக்காக சென்றார்கள் என்ற சந்தேகத்தின் பேரிலும் கைது செய்யப்பட்ட குறித்த சந்தேக நபர்கள் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.சி. ரிஸ்வான் முன்னிலையில் நேற்று (05) ஆஜர்படுத்தப்பட்டபோதே விளக்கமறியல் 19 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

குறித்த சந்தேக நபர்கள் பலர் தற்போது நாட்டில் வெவ்வேறு பாகங்களிலுமுள்ள சிறைச்சாலைகளில் இருந்து மட்டக்களப்பு நீதிமன்றுக்கு கொண்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

# வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

( தோப்பூர் தினகரன் நிருபர் )

மூதூர் நல்லூர் நீனாக்கேணி வீதியை புனரமைத்துத் தருமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இவ்வீதியானது நீண்டகாலம் புனரமைக்கப்படாது குண்டும் குழியுமாக மாறியுள்ளது. இவ்வீதியூடாக சென்றுவரவேண்டிய பொதுமக்கள், மாணவர்கள் சிரமப்படுகின்றனர். இவ்வீதியை புனரமைத்துத்தருமாறு பொதுமக்கள் உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கின்றனர்.






## பெருந்தோட்டத்துறை வைத்தியசாலைகளில்
# PCR பரிசோதனை வசதிகளை ஏற்படுத்த வேண்டும்



**தலவாக்கலை குறூப் நிருபர்**

மலையக பெருந்தோட்டத்துறை சார்ந்த அனைத்து வைத்தியசாலைகளிலும் பி.சி.ஆர் பரிசோதனை வசதிகளை சுகாதார திணைக்களம் உறுதி செய்ய வேண்டுமென சட்டத்தரணி அனுஷா சந்திரசேகரன் வலியுறுத்தியுள்ளார்.

ஊடகச் சந்திப்பொன்றின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா அச்சுறுத்தல் சமூக தொற்றாக மாறி இரண்டாம் கட்ட அலையாக தீவிரமடையுமாயின் நாம் உயிரிழப்புக்களை மட்டுமல்லாது பொருளாதார நெருக்கடிக்கும் முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும். குறிப்பாக அடிப்படை சுகாதார வசதிகள் எதுவும் இன்றி நெருக்கமான வசிப்பிடங்களில் செறிந்து வாழும் மலையக மக்கள் பாரிய அனர்த்தங்களுக்கு முகம் கொடுக்க நேரிடலாம். நோய் தொற்றுகாணப்பட்டால்அவ்வாறானவர்களை சுய தனிமைப்படுத்துவது எமது சமூக கட்டமைப்பில் சிரமமானது.

தொழிலுக்கு கூட்டமாக செல்வது தமது வாழ்வாதார தேவைகளுக்காக நகரங்களுக்கு அதிகளவில் ஒரே நேரத்தில் செல்வது போன்ற தவிர்க்க முடியாத செயற்பாடுகளினால் இந்நோய் பரவுவது தீவிரமாகலாம். ஆகவே சுகாதார துறையினர் இவ்விடயத்தில் விஷேட கவனம் எடுத்து பெருந்தோட்டத் துறை சார்ந்த மக்களுக்கான சகாதார முறைகளை தெளிவாக அறிவுறுத்த வேண்டும். சளி,காய்ச்சல்,இருமல் போன்ற நோய்கள் கொரோனாவிற்கான ஆரம்ப அறிகுறிகளாக அறியப்படுகின்றன. ஆனால் குளிரிலும் மழையிலும் போசாக்கின்மையாலும் நலிவுற்றுள்ள எமது மக்களின் அநேகமானவர்கள் தினமும் இவ்வாறான வருத்தங்களுடனேயே தொழில் புரிந்து வருகின்றனர்.

இத்தகைய அன்றாட நோய்களுக்கு கூட ஒழுங்கான மருத்துவ சிகிச்சைகளை பெற்றுக் கொள்ள முடியாத நிலையிலுள்ள எம்மவர்களால் கொரோனா தொற்றுக்கான அறிகுறிகளை இலகுவில் கண்டறிந்து கொள்வது கடினம். இது ஆரம்பத்திலேயே கண்டறியப்படாது விட்டால் முழு சமூகத்துக்கமான சவாலாக மாறி விடலாம்.

இவ்விடயங்களில் சுகாதாரத்துறை மாத்திரமன்றி இங்கு இயங்கும் அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்களும் இம்மக்களை நம்பி வாழும் தொழிற் சங்கங்களும் முழுமையாக விழிப்புணர்வு செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்றார்.

# கினிகத்தேனையில் வேன் குடைசாய்ந்ததில் 14 பேர் காயமடைந்து வைத்தியசாலையில்

**நோட்டன் பிரிட்ஜ் நிருபர்**



நுவரெலியா சாந்திபுர பகுதியில் இருந்து கம்பஹாவுக்கு சென்ற வேன் ஒன்று ஹற்றன் கொழும்பு பிரதான வீதியின் கினிகத்தேனை வைத்திய சாலை சந்தியில் குடைசாய்ந்ததில் 14 பேர் காயங்களுக்கு உள்ளாகி கினிகத்தேனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள தாக கினிகத்தேனை பொலிஸார் தெரிவித்தனர் .

இச் சம்பவம் நேற்றுக் காலை 09 மணியளவில் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.



கம்பஹா தெல்கொட பகுதியில் இருந்து நுவரெலியா சாந்திபுர பகுதியில் உள்ள வைபவம் ஒன்றிற்கு வந்து மீண்டும் வீடு திரும்பிக் கொண்டிருந்த போதே இந்த விபத்து ஏற்பட்டதாகவும் வேனின் சாரதிக்கு நித்திரைகலக்கம் ஏற்பட்டமையினாலே விபத்து ஏற்பட்டதாகவும் மேலதிக சிகிச்சைக்காக நாவலபிட்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கினிகத்தேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பலாங்கொடை நகர தனியார் எரிபொருள் நிலையத்திற்கு சீல் வைப்பு

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

பலாங்கொடை நகரில் அமைந்துள்ள தனியார் எரிபொருள் நிரப்பும் நிலையமொன்றுக்கு இரத்தினபுரி மாவட்ட செயலக அளவு நிறுவைகள் பிரிவு சீல் வைத்துள்ளது.

பொது மக்கள் மற்றும் நுகர்வோரினால் நீண்ட காலமாக கிடைத்து வந்த முறைப் பாடுகளையடுத்து இந்த எரிபொருள் நிரப்பு நிலையம் இரத்தினபுரி மாவட்ட செயலகத்தின் அளவு நிறுவைகள் பிரிவுத் தலைவர் டி.விமல சேன நேற்று தெரிவித்தார்.

மேற்படி முறைப்பாடுகளை அடுத்து இத்தனியார் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் நிரப்பும் உபகரணங்கள் மற்றும் இலத்திரனியல் சாதனங்கள் பரீட்சிக்கப்பட்டதாகவும் அதன் போது நுகர்வோருக்கு விநியோகிக்கப்படும் எரிபொருளின் அளவு குறைவாக விநியோகம் ஆகும் விதத்தில் மோசடி இடம்பெற் றுள்ளமை தெரியவந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன் பிரகாரம் நீண்ட காலமாக இந்த எரிபொருள் நிலையத்திலிருந்து விநியோகிக்கப்பட்டு வந்த ஒவ்வொரு 5 லீட்டர் எரிபொருளில்

இருந்தும் 200 மில்லி லீட்டர் எரிபொருள் வருடக்கணக்கில் மோசடி செய்யப்பட்டு வந்துள்ளதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.






சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு பண்டாரவளை நாயபெத்த தோட்டத்தில் நவீன முறையில் அமைக்கப்பட்ட சிறுவர் பராமரிப்பு நிலையம், விளையாட்டு பூங்காவும் பிரதமரின் இணைப்பு செயலாளர் செந்தில் தொண்டமானால் சிறுவர்களுக்கு கையளிக்கப்பட்டது. இந்நிகழ்வில் தோட்ட முகாமையாளர் மற்றும் பொதுமக்களும் கலந்து கொண்டதோடு சிறுவர்களின் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

# பெண் எழுத்தாளருக்கான 'ரூபராணி ஜோசப்' ஞாபகார்த்த விருது



**அக்குறணை குறூப் நிருபர்**

கண்டி மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தின் ஏற்பாட்டில் வருடாவருடம் வழங்கப்பட்டு வரும் பெண் எழுத்தாளருக்கான ரூபராணி ஜோசப் ஞாபகார்த்த விருது இம் முறை 'விடுமுறைக்கு விடுமுறை' நூலாசிரியை திருமதி பவானி தேவதாஸ் இற்கு வழங்கப் பட வுள்ளது.

கண்டி செரின் அழகியற் கல்வி நிறுவனத்தின் வருடாந்த பரிசளிப்பு வைபவத்தின்போது வருடா வருடம். தமிழ் சிரேஷ்ட ஊடகவியலாளர் ஒருவரும், பெண் தமிழ் எழுத்தாளர் ஒருவரும் கௌரவிக்கப்படுவது வழக்கம். இம்முறை ஊடகத்துறை சார்பாக 30 வருடங்களுக்குமேல் பிரதேச செய்தியாளராக இருக்கும் கலாபூசணம் ஜே.எம். ஹாபீஸ், பெண் எழுத்தாளர் சார்பாக 'விடுமுறைக்கு விடுமுறை' நூலாசிரியை பவானி தேவதாஸூம் கௌரவிக்கப்படவுள்ளனர்.

கண்டி செரின் அழகியற் கல்வி நிறுவனத்தினால் நடத்தப்பட்ட கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ் மற்றும் விருது வழங்கும் வருடாந்த வைபவம் 10ம் திகதி கண்டி இந்து கலாசார மண்டபத்தில் பி.ப.2 மணிக்கு இடம் பெறவுள்ளது. பிரதம அதிதியாக கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் கண்டி மாவட்ட ஒழுங்கிணைப்புக் குழுவின் தலைவருமான சட்டத்தரணி வசந்த யாப்பா பண்டார கலந்து கொள்கிறார்.

கண்டி, மாத்தளை, ஹற்றன் ஆகிய இடங்களில் கடந்த 9 வருடங்களாக மலையக யுவதிகளுக்கு பல்வேறு தொழில் மற்றும் வாழ்வாதார வழிகாட்டல்களை மேற்படி நிறுவனம் மேற்கொண்டுவருகிறது.

# ஆயிரம் ரூபாவை பெற்றுக் கொடுக்க எவர் முன் வந்தாலும் அதனை ஆதரிக்க தயார்

**ஹற்றன் சுழற்சி நிருபர்**

ஆயிரம் ரூபாவை பெற்றுக் கொடுக்க எவர் முன் வந்தாலும் அதனை ஆதரிக்கரச தயார். இன்னும் 10 நாளில் சாதகமான பதில் கிடைக்காவிடின் பாரிய ஒத்துழையாமை போராட்டத்தை நடத்த தயார் என பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸ் தெரிவித்துள்ளார்.

தோட்ட தொழிலாளர்களுக்கான ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு தொடர்பிலும் ஊடவியலாளர்கள் வினவிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நுவரெலியாவில் வைத்து நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை கூறியுள்ளார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,. இது தொடர்பில் தீர்மானிக்க முதலாளிமார் சம்மேளனத்திற்கு தொழில் அமைச்சர் இரண்டு வாரகால அவகாசத்தை வழங்கியுள்ளார். அது தொடர்பில் முடிவெடுக்க வழங்கப்பட்ட இரு வாரத்தில் 4 நாட்கள் முடிவடைந்துள்ளது. இன்னும் 10 நாட்கள் உள்ளன. எனவே அவர்களின் பதிலுக்காக காத்திருக்கின்றோம். இது தொடர்பில் செயலாற்ற அரசாங்கத்திற்கும் எதிர்க்கட்சி என்ற வகையில் எமக்கும் ஒரு தார்மீக பொறுப்பு உள்ளது. ஆகவே பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபாவுக்கும் மேல் வழங்க வேண்டும். முதலாளிமார் சம்மேளனம் மனிதாபிமானமாக நடந்துக்கொள்ள வேண்டும். ஆயிரம் ரூபாவை பெற்றுக்கொடுக்க எவர் முன் வந்தாலும் அதனை ஆதரிக்கத் தயார். இன்னும் 10 நாளில் சாதகமான பதில் கிடைக்காவிடின் பாரிய ஒத்துழையாமை போராட்டத்தை நடத்த தயார்.



இதேவேளை சுத்தமானவர்களை ஐக்கிய மக்கள் சக்தியில் இணைத்துக் கொள்வதில் தவறில்லை எனவும் ஊழல்வாதிகளை இணைத்துக் கொண்டால் அதற்கு எதிராக செயற்படவுள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸ் மேலும் தெரிவித்துள்ளார்.

# மவுசாக்கலை தோட்ம் சீட்டன் பிரிவு குடியிருப்பில் தீ



**மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்**

மஸ்கெலியா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மவுசாக்கலை தோட்டம் சீட்டன் பிரிவில் காலை 9 மணியளவில் குடியிருப்பு பகுதியில் உள்ள வீடு ஒன்றில் தீ ஏற்பட்டுள்ளதாக மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

அது தொடர்பில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மேலும் கூறுகையில்,

குடியிருப்பின் வழிபாட்டறை பகுதியில் தீ பரவல் ஏற்பட்டுள்ளது. இதனால் எவரும் பாதிக்கப்பட்டவில்லை என்றும் ஆனால் அக்குடியிருப்பில் வசித்தவர்களின் உடமைகள் பாதிக்கப்பட்டுள்ளது எனவும் குறிப்பிட்டார்.அத்துடன் இத்தீயை தோட்ட மக்களின் ஒத்துழைப்புடன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டதாகவும் தெரிவித்தார்.

மேலதிக விசாரணைகளை மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொலிஸார் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சப்ரகமுவ மாகாணத்தில் பழுதடைந்து ஒதுக்கப்பட்ட கதிரை, மேசைகள்;

## மீண்டும் திருத்தி அமைக்கப்பட்டு பாடசாலைகளுக்கு கையளிப்பு

**காவத்தை தினகரன் விசேட நிருபர்**

சப்ரகமுவ மாகாணத்தில் இரத்தினபுரி, கேகாலை மாவட்டங்களில் உள்ள பாடசாலைகளில் பழுதடைந்து ஒதுக்கப்பட்ட 14,000 கதிரை, மேசைகளை மீண்டும் திருத்தி அமைக்கப் பட்டு பாடசாலைகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தெரிவித்தார்.

இவ்வாறு திருத்தி அமைக்கப்பட்ட கதிரை, மேசைகளை பாடசாலை அதிபர்களிடம் கையளிக்கும் நிகழ்வு பலாங்கொடை கல்வி வலயத்தில் இடம்பெற்றபோது அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



மாகாண ஆளுநர் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், சப்ரகமுவ மாகாணத்தில் 7 வலய கல்வி அலுவலகங்களில் கீழ் உள்ள பாடசாலைகளில் பழுதடைந்த கதிரை, மேசைகளை மீண்டும் திருத்தி அமைத்து கொடுப்பதற்கு சப்ரகமுவ மாகாண கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்கென 70 இலட்சம் ரூபா நிதி சப்ரகமுவ மாகாண சபையின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பழுதடைந்த மேசை, கதிரைகளை திருத்தி அமைத்து பாடசாலைகளுக்கு வழங்குவதன் மூலம் 200 இலட்சம் ரூபா அரசாங்கத்திற்கு இலாபத்தை பெற்று கொடுக்க முடியும். அத்தோடு பாடசாலை மாணவர்களின் கணனி கல்வியை மேலும் ஊக்குவிப்பதற்கு சப்ரகமுவ மாகாண சபை நடவடிக்கை எடுத்துள்ளது. இதன் அடிப்படையில் பாடசாலைகளுக்கு கணனி இயந்திரங்கள் வழங்கி வருவதாகவும் சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ மேலும் தெரிவித்தார்.

# தேசிய கரப்பந்தாட்ட சம்பியன்சிப் போட்டி: 13ஆவது ஆண்டாக மஞ்சி அனுசரணை




மஞ்சி, சிலோன் பிஸ்கட்ஸ் லிமிடெட்டின் முன்னணி வர்த்தக நாமமாகத் திகழ்வதுடன், தேசிய விளையாட்டான கரப்பந்தாட்டத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து, அந்த விளையாட்டை மேம்படுத்தும் வகையில், தேசிய கரப்பந்தாட்ட சம்பியன்சிப் போட்டிகளுக்கு 13 ஆவது தடவையாகவும் அனுசரணை வழங்க முன்வந்துள்ளது.

கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது, இந்த அனுசரணைக் காசோலை கையளிக்கப்பட்டிருந்தது. இந்நிகழ்வில் சிபிஎல் நிறுவனத்தின் சிரேஷ்ட நிர்வாகிகளும், இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனத்தின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

மஞ்சி தேசிய கரப்பந்தாட்ட சம்பியன்சிப் சுப்பர் லீக் போட்டிகள் மற்றும் ஆரம்பநிலை வீரர்களுக்கான போட்டிகள் இம்மாதம் 16 ஆம் திகதி முதல் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. நாடு முழுவதையும் சேர்ந்த திறமை வாய்ந்த வீரர்களுக்கு தமது திறமைகளை வெளிப்படுத்த சிறந்த களத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் அமைந்துள்ளது. இந்த போட்டியில் பங்கேற்பதற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி ஒக்டோபர் 15 ஆகும்.

சுப்பர் லீக் போட்டிகள் ஆண்கள் மற்றும் பெண்கள் என இரு பிரிவுகளில் இடம்பெறும். முற்றிலும் உள்நாட்டு கரப்பந்தாட்ட விளையாட்டு வீரர்களை உள்ளடக்கி இடம்பெறும் இந்த போட்டிகளில் எட்டு ஆண்கள் அணிகள் மற்றும் ஆறு பெண்கள் அணிகள் போன்றன இடம்பெறும்.

ஆண்கள் சுப்பர் லீக் போட்டிகளில் பங்கேற்கும் அணிகளில் இராணுவம், கடற்படை, விமானப்படை, துறைமுக அதிகார சபை, இலங்கை பொலிஸ், தேசிய இளைஞர் சேவைகள், இலங்கை மின்சார சபை மற்றும் ஓசியன் லங்கா ஆகியன அடங்கியுள்ளன. பெண்கள் சுப்பர் லீக் போட்டிகளில் பங்கேற்கும் அணிகளில் விமானப்படை, இராணுவம், கடற்படை, துறைமுக அதிகாரசபை, ஹைட்ரா மணி விளையாட்டு கழகம் மற்றும் மகா உஸ்வெள ரத்னபால விளையாட்டு கழகம் போன்றன அடங்குகின்றன. மஹரகம இளைஞர் சேவைகள் உள்ளக விளையாட்டரங்கில் சுப்பர் லீக் போட்டிகள் இடம்பெறும். இந்த போட்டித் தொடரின் இறுதிப் போட்டிகள் நவம்பர் மாதம் 28 ஆம் திகதி இடம்பெறும்.

ஆரம்பநிலை விளையாட்டு வீரர்களுக்கான போட்டிகள் ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவுகளில் இடம்பெறும். மாவட்ட மற்றும் தேசிய மட்டங்களில் இரண்டு நிலைகளில் இடம்பெறும். நவம்பர் 14 ஆம் திகதி முதல் ப்ளேஓவ் போட்டிகள் இடம்பெறும் என்பதுடன், இறுதிப் போட்டிகள் நவம்பர் மாதம் 28 ஆம் திகதி மஹரகம விளையாட்டரங்களில் இடம்பெறும்.

கொவிட்19 தொற்றுப் பரவலின் பின்னரான சவால்கள் நிறைந்த சூழலில் இந்த சம்பியன்சிப் போட்டிகள் இடம்பெறுகின்ற போதிலும், போட்டியில் பங்கேற்போர் இந்த போட்டிகள் இடம்பெறுவது தொடர்பில் அதிகளவு ஆர்வத்துடன் காணப்படுவதுடன், ரசிகர்களும் பெருமளவு எதிர்பார்ப்புகளைக் கொண்டுள்ளனர். 2000 க்கும் அதிகமான அணிகள் மஞ்சி தேசிய கரப்பந்தாட்ட சம்பியன்சிப் போட்டிகளில் பங்கேற்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. விளையாட்டுக்கு மேலும் ஊக்குவிப்பை வழங்கும் வகையில், இந்த போட்டிக்கு நிகராக, சகல மாவட்டங்களிலும் பயிற்சிகளை முன்னெடுப்பதற்கான உதவிகளையும் மஞ்சி வழங்கும்.

இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனத்தின் தலைவரும் பிரதி சபாநாயகருமான ரஞ்சித் சியம்பலாபிட்டிய கருத்துத் தெரிவிக்கையில், 'இலங்கையின் கரப்பந்தாட்ட விளையாட்டின் தரத்தை மேம்படுத்துவதற்கான எமது பொறுப்பு என்பது, மஞ்சியிடமிருந்து எமக்கு தொடர்ச்சியாகக் கிடைக்கும் உதவியினால் ஊக்குவிக்கப்பட்டுள்ளது. விளையாட்டை மேம்படுத்த மஞ்சி தொடர்ச்சியாக 13 ஆவது வருடமாக இம்முறையும் இணைந்துள்ளது. இலங்கையில் அதிகளவானோர் விளையாடும் விளையாட்டாக கரப்பந்தாட்டம் அமைந்துள்ளதுடன், பெருமளவு வளர்ச்சியையும் பதிவு செய்துள்ளது. திறமையான விளையாட்டு வீரர்களின் திறமைகளை வெளிக்கொணர்வதற்கு இந்த போட்டித் தொடர் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது.

எதிர்கால வெற்றியை கவனத்தில் கொண்டு செயலாற்றுவோருக்கு பங்கேற்கக்கூடிய ஒரு சிறந்த போட்டித் தொடராகவும் இது அமைந்துள்ளது.' என்றார். தேசிய விளையாட்டை ஊக்குவிப்பதற்காக கடந்த ஒரு தசாப்த காலப்பகுதிக்கு மேலாக மஞ்சி வெளிப்படுத்தி வரும் உறுதியான அர்ப்பணிப்பு ஊடாக, தேசிய விளையாட்டு வீரர்களை ஊக்குவித்து, சர்வதேச மட்டத்தில் நாட்டை பிரதிநித்துவப்படுத்தக்கூடிய வீரர்களை உருவாக்க வழிகோலியுள்ளது.

இந்த போட்டித் தொடருக்கு அனுசரணை வழங்குவது தொடர்பில் சிலோன் பிஸ்கட்ஸ் லிமிடெட் பிரதம நிறைவேற்று அதிகாரியும் பணிப்பாளருமான நளின் பி. கருணாரட்ன கருத்துத் தெரிவிக்கையில், 'விளையாட்டுக்களை ஊக்குவிப்பதற்கு மஞ்சி தன்னை அர்ப்பணித்துள்ளது. கரப்பந்தாட்ட சம்மேளனத்துடன் எமது கைகோர்ப்பு தசாப்த காலப்பகுதிக்கு மேலானதாக அமைந்துள்ளது. இந்த விளையாட்டின் மிகவும் புகழ்பெற்ற போட்டித் தொடருக்கு தொடர்ச்சியான 13 வருடங்களாக நாம் அனுசரணை வழங்குவதுடன், திறமை வாய்ந்த விளையாட்டு வீரர்களுக்கு சம்பியன் பட்டத்தை பெற்றுக் கொள்வதற்கு களத்தை ஏற்படுத்திக் கொடுத்திருந்தோம். சவால்கள் நிறைந்த சூழலிலும், விளையாட்டு வீரர்கள் மற்றும் ரசிகர்களுக்கு இந்த போட்டித் தொடர் மிகவும் விறுவிறுப்பானதாக அமைந்திருக்கும் என நம்புகின்றேன் என்றார். விளையாட்டுக்கான அதீத ஆர்வத்தை மஞ்சி கொண்டுள்ளதுடன், நாட்டின் இதர விளையாட்டுக்கான கிரிக்கெட், உதைபந்தாட்டம், ஸ்கொஷ், மெய்வல்லுநர் போன்றவற்றை மேம்படுத்துவதற்கும் முழுமையாக தன்னை அர்ப்பணித்துள்ளது.

SINCE 1978
42nd
OBSERVER MOBITEL
SCHOOL CRICKETER
OF THE YEAR 2020
Recognizing talent, inspiring greatness.
Sri Lanka Telecom Mobitel
உங்களுடனே. என்றும்.

## 42வது ஒப்சவர்–மொபிடெல்

### மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை- 2020

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் ஒப்சேவர் - மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ **மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2020**

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2019/2020 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ **மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2020**

தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2019/2020 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது : ....................
வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐
தேசிய மட்ட வீராங்கனை : ....................
(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)
பாடசாலை : ....................
வாக்களித்தவர் பெயர் : ....................
முகவரி : ....................
மொபைல் இல. : ....................
SUNDAY OBSERVER

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

**வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:**

1வது பரிசு : Mobitel 4G Wi-Fi Router — 2வது பரிசு: ரூ. 2,500
3வது பரிசு: ரூ.1,500 — 4வது பரிசு: ரூ. 1,000

42வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், **சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10** எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

**நிபந்தனைகள்:**

மொபிடெல் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்குபெற முடியாது.

ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி **2020-10-10** இல. **31**

UNLIMITED YouTube
HD quality up to 25GB*
மாதாந்தம் ரூ.249+வரிகள்
அழையுங்கள் #170#
4G LTE
Sri Lanka Telecom Mobitel

## இலவன் ஹீரோஸ் விளையாட்டு கழக 14 வருட நிறைவு

**மாளிகைக்காடு குறூப் நிருபர்**




சாய்ந்தமருது இலவன் ஹீரோஸ் விளையாட்டு கழகத்தின் 14 வருட நிறைவையொட்டிய இலவன் ஹீரோஸியன்ஸ் நைட் நிகழ்வு 2020 கடந்த சனிக்கிழமை (3) சாய்ந்தமருது சிறிலங்கா இளைஞர் நிலைய கட்டடத் தொகுதியில் இடம்பெற்றது.

கழகத்தின் செயலாளர் ஏ.ஏ.எம். இல்யாஸ் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் கடந்த வருடங்களில் தமது திறமைகளை வெளிக்காட்டி கழகத்தின் பெயருக்கு பெருமை சேர்த்த கழக வீரர்கள் நினைவுச்சின்னம் வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

கிரிக்கெட் துறையில் சிறந்த பல்துறை ஆட்டக்காரரர் விருது அப்லால் காரியப்பருக்கும், சகலதுறை ஆட்டக்காரருக்கான விருது இஸ்கி ஜீஸானுக்கும் , வளர்ந்துவரும் இளம் கிரிக்கெட் வீரருக்கான விருது விதாத் ஜீஸானுக்கும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் சாய்ந்தமருது பிரதேச செயலக இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் றிஹான் பிரதம அதிதியாகவும், சிரேஸ்ட ஆசிரியரும், ஊடகவியலாளருமான எம்.ஐ. எம்.அஸ்ஹர் கௌரவ அதிதியாகவும், ஊடகவியலாளர் யு.கே.காலித்தீன் மற்றும் கிராம சேவை உத்தியோகஸ்தர் ஏ.எம்.அஜ்ஹர் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

கழகத்தின் உறுப்பினர் ஆஸாத் காமில் நன்றி தெரிவித்ததுடன் நிகழ்வுகளை ஏ.என்.எம். ஜாபித் தொகுத்து வழங்கினார்.

இந்நிகழ்வின் போது சாய்ந்தமருது பிரதேச செயலக இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் றிஹான் கழகத்தினரால் பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கியும், கழக செயலாளர் ஏ.ஏ.எம்.இஸ்யாஸ் நினைவுச்சின்னம் வழங்கியும் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

### சூசிற்றி வெற்றிக் கிண்ணம்:

## அட்டாளைச்சேனை சுப்பர்சொனிக் விளையாட்டுக் கழக அணியினர் இறுதிப் போட்டிக்குத் தெரிவு

**ஒலுவில் கிழக்கு தினகரன், அட்டாளைச்சேனை மத்திய நிருபர்கள்**



அக்கரைப்பற்று சூசிற்றி விளையாட்டுக் கழகத்தின் மூன்று வருட நிறைவையொட்டி ஏற்பாடு செய்து நடாத்தப்படும் சூசிற்றி வெற்றிக் கிண்ணம்2020, கால்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டிக்கு அட்டாளைச்சேனை சுப்பர்சொனிக் விளையாட்டுக் கழக அணியினர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மொத்தம் எட்டு கழகங்கள் பங்குபற்றும் இச்சுற்றுப் போட்டியின் முதல் சுற்றில், அட்டாளைச்சேனை சுப்பர்சொனிக் விளையாட்டுக் கழக அணியினரும், அக்கரைப்பற்று சூசிற்றி விளையாட்டுக் கழக அணியினரும் மோதினர்.

இப்போட்டியில், சுப்பர்சொனிக் விளையாட்டுக் கழக அணியினர் 3:2 என்ற கோல் அடிப்படையில் வெற்றியீட்டினர். இப்போட்டியில், அட்டாளைச்சேனை சுப்பர்சொனிக் விளையாட்டுக் கழக அணியைச் சேர்ந்த அப்ரிடி 2 கோல்களையும், முபாரிஸ் 01 கோலையும் புகுத்தி, வெற்றிக்கு காலாக அமைந்தனர்.அதனைத் தொடர்ந்து, அட்டாளைச்சேனை சுப்பர்சொனிக் விளையாட்டுக் கழக அணியினருக்கும், எப்.எஸ்.எம்.அணியினருக்குமிடையில் நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில், பனால்டி அடிப்படையில் 4:3 என்ற கோல் கணக்கில் அட்டாளைச்சேனை சுப்பர்சொனிக் விளையாட்டுக் கழக அணி வெற்றியீட்டி, இறுதிப் போட்டிக்குத் தெரிவானது.முதலாவது போட்டியில் ஆட்ட நாயகனாக சுப்பர்சொனிக் விளையாட்டுக் கழக வீரர் எஸ்.சாதிர் அஹமட் தெரிவு செய்யப்பட்டார். இரண்டாவது போட்டியில் ஆட்ட நாயகனாக ஐ.அப்ரிடி தெரிவு செய்யப்பட்டதாக அட்டாளைச்சேனை சுப்பர்சொனிக் விளையாட்டுக்கழக முகாமையாளர் ஏ.ஆர்.எம்.சாதிக் தெரிவித்தார்.

## பிரெஞ்ச் பகிரங்க டென்னிஸ் : கால்இறுதிக்கு நடால் முன்னேற்றம்



பிரெஞ்ச் பகிரங்க டென்னிஸ் போட்டியில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் ரபெல் நடால், செபாஸ்டியன் கோர்டாவை விரட்டியடித்து 14வது முறையாக கால்இறுதிக்கு முன்னேறினார்.

'கிராண்ட்ஸ்லம்' அந்தஸ்து பெற்ற பிரெஞ்ச் பகிரங்க டென்னிஸ் போட்டி பாரீஸ் நகரில் நடந்து வருகிறது. இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று நடந்த 4வது சுற்று ஆட்டம் ஒன்றில் 'களிமண் தரையின் ஹீரோ'வான ரபெல் நடால் (ஸ்பெயின்) 6-1, 6-1, 6-2 என்ற நேர் செட்டில் தகுதிநிலை வீரர் செபாஸ்டியன் கோர்டாவை (அமெரிக்கா) விரட்டியடித்து 14வது முறையாக கால்இறுதிக்கு முன்னேறினார்.

நடப்பு சம்பியனான நடால் பிரெஞ்ச் ஓபனில் பதிவு செய்த 97வது வெற்றி இதுவாகும். மற்றொரு ஆட்டத்தில் 7ம் நிலை வீரர் அலெக்சாண்டர் ஸ்வெரேவ் (ஜெர்மனி) 3-6, 3-6, 6-4, 3-6 என்ற செட் கணக்கில் ஜானிக் சினெரிடம் (இத்தாலி) பணிந்தார். தரவரிசையில் 75வது இடத்தில் இருக்கும் ஜானிக் சினெர் கால்இறுதியில் நடாலுடன் மோதுகிறார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2020 ஒக்டோபர் மாதம் 6ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.



# யாழ். பெண்களின் காலமாற்றமும் கலாசார மாற்றமும்



யாழ்ப்பாணம் தமிழ் மக்களின் பாரம்பரியப் பிரதேசமாகும் அங்கு வாழ்ந்த வாழ்ந்து கொண்டிருக்கும் பெண்களின் காலமாற்றம் கலாசார மாற்றம் என்பவை பற்றி எண்ணிப் பார்க்கிறேன்.

நானறிந்த யாழ்ப்பாணம் சுமார் எழுபது வருடங்களாயினும் என் பூட்டி வழியாகவே அங்குள்ள வாழ்வியலைக் கற்றிருப்பதால் அந்த அனுபவம் கேள்வி வழியையும் சேர்த்தால் சுமார் நூற்றைம்பது ஆண்டுகள் யாழ்ப்பாணம் எப்படி மாறியது என்பதை குறிப்பாக பெண்களின் பெரும்

பங்களிப்பைக் கொண்டு எப்படி மாறியது என்பதை மட்டும் பார்க்கப்போகிறோம்.

யாழ்ப்பாணத்துப் பெண்கள் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினாலும் அவர்கள் வெளியே செல்வதை பெரும்பாலும் சமூகம் அங்கீகரிக்கவில்லை. அல்லது அவர்கள் முயலவில்லை. பெரும் பாண்டித்தியம் பெற்ற கல்வியாளர்கள் இருந்த குடும்பங்களில் பெண்கள் கற்றிருந்தாலும் அவர்கள் அதைக் கொண்டு தொழில் செய்யப் புறப்படவில்லை. மிகக் குறைந்த அளவில் பெண்கள் ஆசிரியப்பணி ஆற்றினர். மிக கஷ்;டப்பட்டு ஐந்தாம் வகுப்பு படித்துவிட்டு வைத்தியசாலைகளில் தாதியராகவும் அக்கால மொழிவழக்கப்படி கங்காணிகளாகவும்(அட்டெண்டர்) தொழில் செய்திருக்கிறார்கள் எனவும் அறிய முடிகிறது.

ஊருக்கு ஊர் நாட்டு வைத்தியர்களும் மருத்துவிச்சிகளும் இருந்திருக்கிறார்கள். கிராம மக்கள் அவர்களால் கைவிடப்படும்வரை அரசாங்க வைத்திசாலைகளுக்கு செல்வதில்லை. வீட்டு வைத்தியமும் பரவலாக கையாளப்பட்டு வந்தது.

ஒரு பெண்குழந்தை பிறந்த உடனேயே அதற்காக சேமிக்க வேண்டிய கட்டாயம் பெற்றோருக்கு ஏற்படுகிறது. காரணம் பெண்கள் திருமணச் சந்தைகளை இலக்கு வைத்தே வளர்க்கப்பட்டார்கள். எழுதப் படிக்கத் தெரிந்தால் மிக அதிகமான படிப்பாக கருதப்பட்டது. கிராமங்களில் பண்டிதர் எனப்படுபவர் மட்டுமே படித்தவராக இருப்பாh.; அதுவும் கோவில்களில் புராணங்கள் படிக்கவும் விளக்கம் உரைக்கவும் வல்லவராக இருப்பார். இதே அளவுக்கு பெண்களும் திறமை வாய்ந்தவர்களாக இருந்தாலும் அவற்றை செய்வதில்லை.

பெண்கள் பருவமடைந்ததும் அது பெரிய சடங்குள் சம்பிரதாயங்களை கொண்டதாக மாறிவிடும் அந்தப்பெண்ணுக்குரிய சடங்குகளை தாய்மாமனே செய்தாக வேண்டும். காலப்போக்கில் அவள் அவருடைய வீட்டுக்கு மருமகளாக வரவேண்டியதால் அதை அவரது கடமையாக்கினார்கள் என என் பூட்டி சொல்லியிருக்கிறார். பெண் பூப்படைந்தபின்னர் புடவை கட்டியாகவேண்டும்.

அதற்கும் காரணம் உண்டு அக்காலத்தில் மாதவிடாய் காலத்தில் தற்போத பாவனையிலிள்ள 'பாட்'கள் இல்லை. பதினாறு முழம் சேலை பின்கொசுவம் வைத்துக் கட்டியாகவேண்டும். மாதவிடாய் காலங்களில் அந்த சேலையை அரணாக கால்களுக்கிடையில் இழுத்து விட்டுக் கொண்டு தீட்டு முடியும்வரை தனியாக உட்கார வைக்கப்படுவா. வீட்டுக்குள் ஏனைய பகுதிகளுக்கு செல்ல முடியாது சத்தான உணவுகள் வழங்கப்படும.; ஐந்தாம் நாள் தலைக்கு குளித்து பாய் படுக்கைகளை சுத்தம் செய்து வீடுவாசல்களை மெழுகியோ கழுவியோ சுத்தம் செய்தபின் இயல்பு வாழ்க்கைக்கு வருவார்கள். இச்சம்பவம் 'தொடமாட்டார்' 'வீட்டுக்குத் தூரம்' என்ற சங்கேதப் பெயர்களால் குறிக்கப்படும். மாதவிடாய் காலத்தில் மட்டுமல்ல, ஏனைய சந்தர்ப்பத்திலும் பூப்படைந்த பெண் கோவிலுக்குசெல்ல அனுமதிக்கப் படுவதில்லை.

நிறைந்த சீதனம் வழங்கி திருமணம் செய்வதால், சொத்துகள் பிறத்தியாருக்குப் போகக்கூடாது என்பதால் உறவுக்குள்ளேயே திருமணம் பேசி முடிப்பர். திருமணம் முடிந்ததும் மாப்பிள்ளை பெண்வீட்டிற்கு வந்து விடுவார். பெண்ணுடனேயே பெண்ணின் பெற்றோர் இருப்பார்கள். இங்கே மாமியார் தொல்லையில்லை. நாத்தனாரும் கிடையாது. இந்த வழமை இன்றும் இருக்கிறது என்றாலும் இப்போது பெண்கள் வெளியே சென்று வேலைபார்க்கும் காலமாதலால், வேலைக்கு ஏற்ப தனிக்குடித்தனம் போக வேண்டிய தேவையும் வந்துவிட்டது.

ஒரு பெண் கர்ப்பமடைந்துவிட்டால் அந்த வீட்டில் மட்டுமல்ல



அயலவர்களும் மிக கவனமாக அவதானமாக பார்த்துக்கொள்வார்கள். பிறக்கும் பிள்ளைகள் எல்லா வீடுகளுக்கும் பொதுவாக செல்லமாக கவனிப்பார்களா.; அவர்களது கல்வி பாலப்பருவத்திலேயே தொடங்கி விடும். தாய்மாரின் அழகான தமிழ் தாலாட்டுகளை வீட்டுக்கு வீடு கேட்க முடியும.; பிள்ளைகளுக்கு கிராமிய பாடல்கள் அப்போதிருந்தே அறிமுகமாகும் தாலாட்டு, நாலைந்து மாதத்தில் சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு. எட்டுமாதம் போக, கைவீசம்மா கைவீசு. சாளை சாளை குண்டாளம், கூத்து கூத்து குமரப்பா. என வயதுக்கேற்ப பாடல்கள் பிள்ளைக்கு கிடைக்கும் இதைத்தான் பிள்ளை தாளங்களோடும் கைதட்டலோடும் கற்றுக் கொள்கிறது

காலப்போக்கில் அது தானாகவும் பாட ஆரம்பிக்கும். எமது பெண்கள் அத்தோடு நிறுத்துவதில்லை. பிள்ளையின் நாக்கு பேச ஆரம்பிக்கும் போது அதற்கும் சிறு பயிற்சி கொடுக்க பாடுவர். மனனப்பயிற்சிக்கும் பாடல்கள் உண்டு. இந்த குழந்தைகள் தமது ஆற்றலை வளர்த்து தாமும் வளர்ந்து விடுகதைகள் பழமொழிகள் என்று பயின்று தொட்டிலிலிருந்து பழகிய இந்தப்பாடல் திறமையை சுடுகாடு வரை கொண்டு செல்வார்கள். 'தொட்டில் பழக்கம் சுடுகாடு வரை' ஆம் படிப்பறிவே இல்லாத யாழ்ப்பாணத்து மூத்த பெண்கள் எப்படி வக்கணையாக ஒப்பாரி வைக்கிறார்கள் என்று பலரும் வியப்பது எதனால் என்று புரிந்திருக்குமே.

சமையல் கலை என்பது எமது பெண்களுக்கு கைவந்தகலை. எத்தனை பெரிய விருந்தானாலும் பத்துப் பெண்களே கூடி சமைத்த காலம் அது. முழுக்க முழுக்க எமது மண்ணில் விளையும் பொருட்களே சமையலுக்கு இருந்தன ஒரு விருந்தில் சோறு, கறிக்குழம்பு, பால்கறி, சுண்டல் பொரியல் பச்சடி, பிரட்டல், துவையல், ஊறுகாய் தயிர் மோர், என பலவகை அடங்கும் மரவள்ளி பூசணி பாகற்காய் வாழைக்காய் கத்தரிக்காய். பயறு, கீரை, சுண்டங்காய், பயற்றங்காய், பீர்க்கங்காய் இவைகளே பல அவதாரங்களை எடுக்கும்

பலகார வகைகளாக அரியதரம் முறுக்கு, பயற்றம்பணியாரம், எள்ளுருண்டை, வடை என அவையும் உள்ளுர் தயாரிப்புகளே. எள்ளிலிருந்து எத்தனை வகை பலகாரம் உழுந்திலிருந்து எத்தனை வகை, பயறிலிருந்து எத்தனை வகை. அரிசியிலிருந்தும் அத்தனை வகை. பிட்டு இடியப்பம் கொழுக்கட்டை, உழுந்து கலந்து தோசை, இட்லி. பானங்களாக தேநீர் வருமுன் பழைய சாதத்தின் நீச்சத்தண்ணி மோர் பால் என்பவை பானமாக இருந்தது. வீட்டுக்கு வருவோர்களை வரவேற்று வெற்றிலைத்தட்டம் கொடுப்பது சரளமாக எல்லோர் வீடுகளிலும் உள்ள வழக்கம்.

இந்தப்பெண்கள் முற்காலத்தில் அரச உத்தியோகம் பார்ப்போரை திருமணம் செய்வர். அவர்களும் வேலை மாற்றம் காரணமாக வெளியூரில் வாழ வேண்டிய தேவை இருக்கும் .எனவே வெள்ளிக்கிழமை வீடு வந்து ஞாயிறு மாலை திரும்பிப் போய்விடுவார்கள். இந்த அவதி நிலைபற்றி எஸ். பொ. அவர்கள் 'சடங்கு' என்றொரு கதை எழுதியிருந்தார் என்பது நினைவுக்கு வந்தது. யாழ்ப்பாணத்தின் முதலீடு கல்விதான் என்பதை எல்லோரும் அறிவோம். இந்தகல்விக்குரிய வேலைகளை ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் மலேசியா சிங்கப்பூர் பினாங், பர்மா, என்று வெளி நாடுகளுக்கு வேலைக்காக போய்விடுவார்கள். அவர்கள் இல்லாதபோதும் பெண்கள் தம்மளவில் வருமானத்தை ஈட்டத்தவறுவதில்லை.

பனையும் தென்னையும் பூரணமாக தன் உடலை தருபவை. நிலத்திலிருந்து எதையும் வீணாக்காமல் அனைத்தையும் பயனுள்ளதாக்கினர். பனையின் மட்டை பாளை, ஊமல் என்பவை எரிபொருளாயின. கங்கு ஓலை என்பவை விற்பனை செய்வர். பனங்கிழங்கு, அவித்துக் காய்ந்தால் ஒடியல், பச்சைக்கிழங்கை உலர்த்தி இடித்து மாவில் பிட்டு அவிக்கலாம் . ஒடியல்மாவில் செய்யப்படும் ஒடியற்கூழ் உலகப் புகழ் பெற்றது. கிழங்கிலிருந்து கழியும் ஊமல் புகையிலைக்கு புகை போட எடுப்பார்கள். அந்த ஊமலும் பாளைகளும் அடுப்பிலிட்டு கருப்பணி காய்ச்சி பனங்கட்டியாக்குவார்கள். அப்படியே பன்ம்பாணியில் செய்யும் பனாட்டு, பாணிப்பனாட்டு, பனங்காய் பணியாரம், பனங்காய் பிட்டு எனபன எமது பெண்களின் அதாவது முன்னைநாட் பெண்களின் கைவண்ணத்தில் உருவாகும் அற்புதங்கள். குருத்தோலையில் பெட்டி சுளகு பாய் இழைப்பது, என எல்லா தொழில்களையும் செய்வர். தென்னையின் இளநீர் தேங்காய், சிரட்டை, பயன்பட்டது போக அதன் தும்பு மெத்தையாகவும் கயிறாகவும் சட்டிபானை கழுவும் உபகரணமாகவும் பயன்படும். ஓலையில் கிடுகு உருவாக்கி வேலியடைக்கவும் வீடு வேயவும் எடுக்கலாம்.

இதை ஏன் இங்கு குறிப்பிடுகிறேன் என்றால,; இன்றைய பெண்களுக்கு சட்டிபானை கழுவும் தும்பு சைனாவிலிருந்து அழகாக பக்கட்டில் அடைத்து வருகிறது. நவீன காலத்து இளைஞன் ஒருவன் 'டங்கிளீனா'; அதுதான் நாக்கு வழிப்பான் ஒன்றை வைத்திருந்தான் நம்மூர் பையன் அதை அவன் எத்தனை நாளைக்கு உபயோகிப்பான் என்று கேட்டானாம். அவன் சுமார் ஒரு வாரந்தான். அதற்கப்புறம் வேறு ஒன்றை வாங்கிவிடுவேன். என்றான் பெருமையாக 'சரி நீ உனது கிளீனரை எத்தனை நாட்கள் வைத்திருப்பாய் என்று கேட்டானாம். அதற்கு இவன் ஒரே தடவைதான் வழித்ததும் தூக்கி எறிந்து விடுவேன்' என்றானாம். அவன் குறிப்பிட்டது வடலி ஓலைதான். என்பதை புரிந்து கொண்டிருப்பீர்களே

பணத்தை சேர்த்து அதை சீட்டுக்கட்டி பெருக்கி அவற்றை தங்கநகைகளாக மாற்றிக் கொள்வார்கள். தங்கத்தில் முதலீடு செய்து வளத்தை பெருக்குவார்கள்.

யாழ்ப்பாணத்தின் விவசாய நிலம் அளவில் சிறியதாயினும் பெருமளவு விளைச்சலை விவசாயிகள் பெருக்கினார்கள். முக்கிய பயிர்களாக புகையிலை வெண்காயம் மிளகாய் கரணைக் கழங்கு இவற்றுடன் காய்கறிகளும் அடங்கும். இந்த விவசாய முயற்சிகளிலும் பெண்களின் பங்களிப்பு கணிசமாக இருந்தது. அக்காலம் முதல் இக்காலம் வரை சந்தைகளில் பெண்கள் வியாபாரம் செய்யும் திறமைசாலிகளாகவும் பெருமளவு வியாபார தந்திரங்களை கொண்டவர்களாகவும் விளங்குகின்றனர். அந்த திறமையான பெண்களை நாம் இப்போது நாடாளாவிய நிலையிலும் காணலாம்.



யாழ்ப்பாணத்தின் மூலை முடுக்கெல்லாம் கோவில்கள் அத்தனை கோவில்களுக்கும் பெண்கள் கூட்டம் இன்றுவரை நிரம்பி வழியும். தமது ஊர்க் கோவில் கொடியேறினால் அன்றிலிருந்து எந்த ஊரிலிருந்தாலும் விரதமிருக்கும் பழக்கம் பெண்களிடம் இன்றும் இருக்கிறது பிரான்சிலிருந்தும் கனடாவிலிருந்தும் நல்லூர்கந்தனுக்கான விரதங்கள் சந்நிதிமுருகன் விரதம் கதிர்காம விரதம் காரைநகர் விரதமென அசத்தி விடுவார்கள்.

உடையை பொறுத்தவரை இன்றைய பெண்கள் எவ்வளவு போராட்டங்களுக்குப் பின் இந்த நிலை அடைந்திருக்கிறார்கள். (நான் எனது ஆசைக்குக் கூட அரைப்பாவாடை கட்டியதில்லை. முழுப் பாவாடைதான்.இப்போது சுடிதார் போடும் பெண்களைப் பார்த்தால்கூட எனக்கு பொறாமையாக இருக்கும); சரி போகட்டும் அந்தக்கால பெண்கள் பருவமடையும்வரை சித்தாடை கட்டி மேலே சட்டை போட்டார்கள்.

வளர்ந்த பெண்கள் சேலையை தட்டுப்பாக கட்டுவார்கள். முன் கொய்யகம் வைத்துக் கட்டுபவர்கள் படித்த பெரிய குடும்பத்துப் பெண்கள் மட்டுந்தான். நாற்பது ஐம்பது வயது வந்துவிட்டால் ரவிக்கை போடமாட்டார்கள். சேலை மட்டுந்தான். சில இளம் பெண்களும் ரவிக்கை அணிய தடை போடப்பட்டிருந்தது.

தலையில் நெத்திச்சுட்டி, காதில் தோடு மயிர்மாட்டி, சிமிக்கி தொங்கட்டான், கடுக்கன் என்பவை வயதுக்கேற்ப அமையும் கழுத்துக்கு அட்டியல் மார்ப்;;பதக்கம் சங்கிலி, காசுமாலை, பூட்டுக்காப்பு மட்டைக்காப்பு, நெளிநெளிக் காப்பு கல்வளையல், மோதிரங்கள் ஒட்டியாணம் காற்சங்கிலி என்பவை நகை வடிவங்களாக இருந்தன மணநாள் அலங்காரங்களில் இன்னும் சில அதிகரிக்கலாம்.

பாட்டி வைத்தியம் வீட்டுக்கு வீடு இருந்தது. குழந்தைகள் முதல் பெரியோர் வரை, வீட்டிலேயே தயாரிக்கும் குடிநீர் வகையறாக்களை குடிப்பதுண்டு சுக்குக்கசாயம் அறுகம்புல் யூஸ், துளசிதீர்த்தம், வேப்பிலை, வேப்பம்பட்டை கொண்டல், மஞ்சள் உள்ளி, வெந்தயம், மிளகு, வேர்க்கொம்பு தேன் எலுமிச்சம்பழம், எனவும் பழம்பாசி முருங்கை தயிர்வேளை வடலி நெட்டு, வட்டுக்காய் கராம்பு, வெடிபலவன் நத்தைச்சூரி, பொடுதலை, மூக்கறைச்சி, துத்தி, கற்றாளை, நல்லெண்ணை. அப்பப்பா! அடுக்கிக் கொண்டே போகலாம். எமது மண்ணில் தானாக விளைந்திருக்கும் மூலிகைகளை.

அத்தனையும் பாட்டிகளுக்கு அத்துப்படி. மனப்பாடம் எது எதற்கு எப்படி என்று . நம்பாதவர்களையும் இப்போது கொரனா நம்ப வைத்திருக்கிறது.


மாற்றங்களை நாம் கண்முன் கண்டு கொண்டிருக்கிறோம். அவற்றில் நல்லவையும் உண்டு தீயவையும் உண்டு. சுய பொருளாதாரம் சிதைந்து கொண்டு போவது மிகவும் வருத்தத்துக்குரியது. இயலுமானவரை எமது சுயத்தை மீட்டெடுப்போம்.

**தமிழ்க்கவி**

# சிறு விளம்பரம்

## மோட்டார் வாகனங்கள்


118



### ஜீப்புகள், பிக்கப்புகள் விற்பனைக்கு

32-8013 டொயொட்டா லேண்ட் குரூஸ ர், 1989, கூடிய விலைக் கேள்விக்கு, வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310 காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0714 5 42958, 0714 5 15236
060055

122



### மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

WP YX-5918 பஜாஜ், 2012 முச்சக்கரவண்டி கூடிய விலைக் கேள்விக்கு வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711210 810
060062

---

# பெறுகை அறிவித்தல்

## அரசாங்க அழுத்தக திணைக்களம்

N 69

2020.09.15ஆம் திகதியிடப்பட்ட பின்வரும் அம்சங்களின் வழங்கல் விலைமனுக்களுக்கான அறிவித்தலானது மாற்றப்பட்டு பின்வருமாறு நீடிக்கப்பட்டுள்ளதென அரசாங்க அழுத்தக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் இத்தால் அறிவிக்கின்றார்.

1. **Large Format Digital Printing Machine for Sticker Printing:**

| | |
|---|---|
| விலைமனுவை மூடும் திகதி | : 2020.10.16ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு |
| விலைமனு குறிப்பீட்டு இல. | : SCP05/D.P. Machine/NCB05/2020-14 |
| ஆவணக் கட்டணம் (மீளளிக்கப்படாதது) | : 3,500 ரூபா |

2. **Digital Machine for Texture Paper Printing:**

| | |
|---|---|
| விலைமனுவை மூடும் திகதி | : 2020.10.16ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு |
| விலைமனு குறிப்பீட்டு இல. | : SCP03/D.M.T.P./NCB27/2019-29 |
| ஆவணக் கட்டணம் (மீளளிக்கப்படாதது) | : 3,500 ரூபா |

மேலதிக விபரங்களை வேலை நாட்களில் மு.ப. 8.30 மணியிலிருந்து பி.ப. 4.15 மணி வரையும் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**கங்காணி லியனகே,**
**தலைவர், பெறுகைக் குழு,**
**அரசாங்க அழுத்தக திணைக்களம்,**
**118, கலாநிதி டனிஸ்டர் த சில்வா மாவத்தை,**
**கொழும்பு -08.**
**தொலைபேசி/ தொலைநகல்:- 011-2698653**
**இணையத்தளம்:- www.documents.gov.lk**

---

# விசேட அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இல. 35-5/6, பொஸ்வெல் பிளேஸ், கொழும்பு-6 எனும் முகவரியில் (தற்போது சுவிட்சர்லாந்தில்) வசிக்கும் செல்லதுரை விவேகானந்தன் (தே.அ.அ.இல. 197314703820) ஆகிய நான், பிரசித்த நொத்தாரிசு வீரய்யா விவேகானந்தன் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட இல. 5207 மற்றும் 2019.02.22ஆந் திகதிய விசேட அற்றோணித் தத்துவத்தினால் இல. 93, மஹவித்தியாலய மாவத்தை, கொழும்பு-13 எனும் முகவரியில் வசிக்கும் கனகலிங்கம் அகிலன் (தே.அ.அ.இல. 198419301769) என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவத்தை 2020.08.19ஆந் திகதியிலிருந்து இரத்துச் செய்வதாக இத்தால் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொதுமக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

**வீரய்யா விவேகானந்தன் - சட்டத்தரணி**
**செல்லதுரை விவேகானந்தனுக்குப் பதிலாக**

---

# கள்ளுத்தவரணை குத்தகை விற்பனை

## மொனராகலை மாவட்டம் – படல்கும்புர பிரதேச செயலாளர் பிரிவு – 2021

2021.01.01 - 2021.12.31 வரை மொனராகலை மாவட்டத்தின் படல்கும்புர பிரதேச செயலாளர் பிரிவின் இலக்கம் 01 பல்லே வராதொல - கள்ளுத்தவரணையில் சில்லறையாக கள்ளு விற்பதற்கான குத்தகை உரிமையை வழங்கும் கேள்விப் பத்திரங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

2020.10.08ம் திகதி மு.ப. 10.00 மணிக்கு அல்லது அதற்கு முன் கிடைக்கக் கூடியவாறு விண்ணப்பப் பத்திரங்களை அனுப்பி வைத்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு 2020.09.25ஆம் திகதி 2195ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமானிப் பத்திரத்தை பார்க்க.

**என்.ஜி.எம்.எஸ். குமார,**
**பிரதேச செயலாளர்**
**படல்கும்புர**

**2020.09.29 திகதி,**
**பிரதேச செயலகம், படல்கும்புர.**

---

# மாநகர சபை – கடுவளை

## வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் – 2021ஆம் வருடம்

இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கும் பொருட்டும் இந்த மாநகர சபையில் பதிவு செய்து கொள்ள விரும்பும் வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 2020-11-06ஆம் திகதி வரை என்னால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**அட்டவணை**

**(1) வழங்கல்கள்**

(1) சகல வகையான அலுவலக காகிதாதிகள்
(2) அலுவலக உபகரணங்கள் உருக்கு மற்றும் மரத் தளபாடங்கள் (ராக்கை, அலுமாரி, மேசை, நாற்காலி, கோவை ராக்கைகள், கெபினட் போன்றன)
(3) கணனி இயந்திரங்கள், புகைப்படப் பிரதி இயந்திரங்கள், தொலைநகல் இயந்திரங்கள், டுப்ளோ இயந்திரங்கள், அச்சுப் பொறிகள் மற்றும் அது சார்ந்த துணைப்பாகங்கள்
(4) கட்டிடப் பொருட்களை வழங்குதல் (கல், மண், களிமண், செங்கல், மணல், சீமெந்து போன்றன)
(5) மின்சார சேவைகளை வழங்குவதற்குத் தேவையான துணைப்பாகங்கள் (வயர், சுவிட்ச், பல்ப், பிளக், வீதி விளக்குகள் போன்ற மின் உபகரணங்கள்)
(6) சுகாதாரம் சார்ந்த பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் பொருட்கள் (பிளாஸ்டிக் கூடைகள், கையுறைகள், சவர்க்காரம், பைனோல், விம், ஹார்பிக், குப்பைக் கூடைகள், கூடாரத் துணி, கால் துடைப்பங்கள், கம்பூட்ஸ், மழை அங்கிகள் போன்றன)
(7) டயர், டியூப் மற்றும் டயர் மீள்நிரப்புதல்
(8) மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் (முச்சக்கர வண்டி, டிராக்டர், JCB, டபள் கெப், லொறி)
(9) ஔடதங்கள் மற்றும் அது சார்ந்த உபகரணங்களை வழங்குதல்
(10) ஆயுர்வேத மருந்துகள் வழங்குதல் (குளிகைகள், அரிஷ்டம், எண்ணெய் மற்றும் அது சார்ந்த மருந்துகள்)
(11) பீடை நாசினிகள், இலையான் கொல்லிகள் மற்றும் இரசாயனப் பொருட்கள்
(12) பொதுவான களஞ்சியப் பொருட்கள் (இரும்பு, ஜீ.ஐ. குழாய்கள், ஆணி வகைகள் மற்றும் நிறப்பூச்சு வகைகள்)
(13) சீருடைகளைத் தைத்தல் மற்றும் தேவையான துணிகளை வழங்குதல்
(14) தீயணைப்புக் கருவிகளைக் கொள்வனவு செய்தல் மற்றும் சேவை நடவடிக்கைகள்
(15) விளையாட்டுப் பொருட்கள் மற்றும் உடற்பயிற்சி உபகரணங்களை வழங்குதல்
(16) மின்பிறப்பாக்கி, புல் வெட்டும் இயந்திரம், வளிச்சீராக்கி மற்றும் நீர்ப் பம்பிகளைக் கொள்வனவு செய்தல்
(17) அலுவலக மின் உபகரணங்கள் (கூட்டல் இயந்திரம், மின் விசிறி, மின் கேத்தல், சூடாக்கி போன்றன.)
(18) அச்சு வேலைகள் மற்றும் அதனைச் சார்ந்த சேவைகள் (படிவங்கள் மற்றும் ஆவணங்கள்)
(19) பெயர்ப் பலகைகள், பதாகைகள், ஞாபகச் சின்னங்கள் மற்றும் வீதிப் பெயர்ப் பலகைகளைத் தயாரித்தல்
(20) திகதி முத்திரைகள் மற்றும் இறப்பர் முத்திரைகளைத் தயாரித்தல்
(21) புத்தகம் கட்டுதல் மற்றும் அதனைச் சார்ந்த சேவைகள்
(22) எரிபொருள் மற்றும் எரிவாயு வழங்குதல்
(23) உணவு, பான சேவைகளை மேற்கொள்ளல்
(24) டோனர் வகைகள் மற்றும் பிரின்டர் ரிபன்களை வழங்குதல்
(25) ஹியூம் குழாய்கள், கொங்கிறீட் தூண்கள், எல்லைக் கற்கள், கொங்கிறீட் சார்ந்த பொருட்கள் மற்றும் கொங்கிறீட் கொம்போஸ்ட் பீப்பாய்களை வழங்குதல்
(26) அரிந்த மரம் வழங்குதல் (பலகை, தீராந்திகள், ரீப்பைகள் மற்றும் கொம்பஸ் பலகை)
(27) நீர்க்குழாய் உபகரணங்கள் வழங்குதல் (பீவீசீ உபகரணங்கள், டீ.ஐ.ஜீ.ஐ. நீர்க்குழாய் துணைப்பொருட்கள், நீர்ப் பம்பிகள், நீர்மாணிகள்)
(28) கண்ணாடி மற்றும் கண்ணாடிப் பொருட்கள்
(29) பொலித்தீன், அச்சடிக்கப்பட்ட பொலித்தீன் உறைகள் மற்றும் உர உறைகள் (பொலிசெக்) வழங்குதல்
(30) ஈர்க்கிள் மற்றும் தும்பு உற்பத்திகள்
(31) பெட்றரி வழங்குதல்
(32) கொலாஸ் மற்றும் தார் வழங்குதல்

**(2) சேவைகள்**

(1) முச்சக்கர வண்டி திருத்தவேலைகள்
